# பாவைப் பாட்டு



டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# பாவைப் பாட்டு

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.,
துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613005

விற்பனை உரிமை:

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

முதற்பதிப்பு : டிச. 1990
விலை ரூ. 15/-

## ஆசிரியரின் பிற நூல்கள்

தமிழ் இலக்கிய வரலாறு
உருவும் திருவும்
கட்டுரை வளம்
காரும் தேரும்
மனோன்மணீயம் (பதிப்பு)
முருகன் காட்சி
வாழையடி வாழை
இலக்கிய அணிகள்
பெருந்தகை மு.வ.
இலக்கியக் காட்சிகள்
நல்லோர் நல்லுரை
நெஞ்சின் நினைவுகள்
மலர் காட்டும் வாழ்க்கை
சான்றோர் தமிழ்
சங்ககால மகளிர்
ஆண்டாள்
சேரநாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள்
புரட்சிக்கவிஞர்
பாவேந்தர் பாரதிதாசன்
அறவோர் மு. வ.
கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்
திருவெம்பாவை விளக்கம்
சங்கஇலக்கியம் : சில பார்வைகள்
மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்
பாரதியும் பாரதிதாசனும்
வாழ்வியல் நெறிகள்

Papers on Tamil Literature

The status of women in Tamilnadu during the Sangam Age.

A Study of the Literature of the Chera Country.

---

கவின்கலை அச்சகம்.
கந்தசாமி நகர், பாலவாக்கம், சென்னை-600 041
தொலைபேசி: 41 71 41

# முன்னுரை

1986—ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் முப்பது நாளும் வைகறைப் போதில் சென்னை அனைத்திந்திய வானொலி நிலையத்தினர் திருவெம்பாவைப் பாடல்களுக்கு விளக்கம் சொல்லும் வாய்ப்பினை நல்கினர். அச்சிறு சொற்பொழிவுகள் நாட்டவரால் நன்கு பாராட்டப்பெற்றன. அமைச்சர் முதல் அடித்தளத்து மக்கள் வரை அனைவராலும் பாராட்டப் பெற்ற அச் சொற்பொழிவுகளைத் தொகுத்து 1987—ஆம் ஆண்டு ''திருவெம்பாவை விளக்கம்'' என்னும் தலைப்பில் ஒரு நூலாக வெளியிட்டேன்.

1988—ஆம் ஆண்டில் மீண்டும் சென்னை, அனைத்திந்திய வானொலி நிலையத்தினர் என்னை மார்கழித் திங்களின் பின் பதினைந்து நாட்கள் — அதாவது, திருவெம்பாவை 16—வது பாடல் தொடங்கி 20—வது பாடல் வரையிலும் என்பதோடு, திருப்பள்ளி

யெழுச்சி பத்துப் பாடல்களுக்கும் விளக்கம் சொல்லச் சொன்னார்கள். எனவே, மீண்டுமொரு முறை புதிய நோக்கில் பேசினேன்.

இந்த ஆண்டில் திருச்சி, அனைத்திந்திய வானொலி நிலையத்தினர், மார்கழித் திங்களின் முதல் பத்து நாட்கள் திருவெம்பாவையின் முதல் பத்துப் பாடல்களுக்கு விளக்கம் சொல்லும் வாய்ப்பினை நல்கினர். எனவே, விடுபட்டு எஞ்சியுள்ள 11 முதல் 15 வரையிலான திருவெம்பாவைப் பாடல்களுக்கும் விளக்கம் கண்டு, தொகுத்து, ''பாவைப் பாட்டு'' என்ற தலைப்பில் இதுபோது ஒரு நூலாக வெளிவருகின்றது.

சென்னை, திருச்சி அனைத்திந்திய வானொலி நிலையத்தினர்க்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

— சி. பா.

அருளினார் என்பர். மார்கழித் திங்களில் புலர் காலைப் பொழுதில் மகளிர் நீராடச் செல்லுகின்றபோது இன்னும் உறங்கிக் கொண்டிருந்த தம் ஒத்த தோழியரை அழைக்கு முகமாகவும் அவர்களோடு உரையாடும் போக்கிலும் இப் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. மனோன்மணி, சர்வபூத தமனி, பலப்பிரமதனி, பலவிகரணி, கலவிகாரணி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமி என்னும் ஒன்பது சக்திகளுள் முன்னின்றவர் பின்னின்றவரைத் துயில் எழுப்புமுகமாகவும் எல்லோரும் கூடிச் சிவபரம்பொருளைப் போற்றிப் பாடுவ தாகவும் அமைந்த பாடல்களின் தொகுதி திருவெம்பாவை எனத் தத்துவச் சார்புடையோர் கூறுவர்.

ஐந்தொழிலும் ஆற்றுகின்ற ஆற்றல் வாய்ந்த அலகிலா விளையாட்டு உடையவராகிய சிவபெருமானை, ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி என மணிவாசகப் பெருந்தகை உரைப்பதை எண்ணுதல் வேண்டும். உலகனைத் திற்கும் ஒளி வழங்கும் ஞாயிற்றுக்கும் தோற்ற ஒடுக்கமுண்டு. இப்பேரருள் பிழம்பிற்குத் தோற்றம் ஒடுக்கம் இல்லை. எக்காலத்தும் குன்றாத அப்பேரொளியே பசுக்களில் மும்மல இருளை அறுத்தகற்றி ஒளியேற்ற இயலும். இவ்வெல்லை யற்ற சோதியே அம்பலத்தாடுகின்ற காட்சிக்கினிய பெருமா னாகும். அதுவே அண்ணாமலையானாய், நான்முகற்கும் நாராயணற்கும் தேடிக் காணமுடியாத அடியும் முடியும் உடையதாய்ப் பொலிந்தது என்பது வரலாறு. இதனை வாதவூரடிகளே, 'பார்பதம் அண்டம் அனைத்தும் பரந்த தோர் படரொளிப்பரப்பு' என்று திருவாசகத்தில் கூறுவர். இச்சோதியைச் சுடரொளிப் பேற்றை நாட்காலையில் துயில் எழுந்த மகளிர் பாடிப்பரவி வீதிவழிச் செல்லுகின்றனர். இந் நிலையிலும் பெண்ணொருத்தி துயில் எழாமல் பொய் உறக்கம் கொண்டவளாய் அமளியில் புரண்டு கொண்டிருக் கின்றாள். இந்த வான்தடங்கண் மாதிற்கு வந்தது என்.

ஒருவேளை, இவளுடைய செவிகளில் ஏதேனும் குறைபாடு உண்டோ? அது வன்செவி ஆயிற்றோ? இல்லையெனில் தேவர்கோன் அறியாத தேவதேவன் குறித்து எழுந்த வாழ்த் தொலிகளைக் கேட்டு, இவள் விம்மி விம்மி அழுகின்றாளோ? அம்மொழி இவளை மேலே செயலேதுமின்றி நெஞ்சை உருக் கிற்றுப் போலும்! "மாதேவன் வாழ்த்திய வாழ்த்தொலி போய் வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து போதாரமளியின் மேல் நின்றும் புரண்டும் இங்கண் ஏதேனும் ஆகாமல் கிடந்தாள்" என்று உரைக்கின்றனர்.

"சிந்தனை நின்தனக்காக்கி நாயினேன்தன் கண்ணினை நின் திருப்பாதப் போதிற்காக்கி வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி, வாக்கு உன்மணி வார்த்தைக்காக்கி, ஐம்புலன்கள் ஆரச் சிவபெருமானை, இறை அனுபவ முழுநெறியில் நின்று வழிபட்டவர் மணிவாசகச் செம்மல். இந்த அனுபவமே மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துக் கண்ணீர் ததும்பவும் வெதும்பவும் அவரை ஆட்கொண்டது. அதுவே இப்பாட்டில் வாழ்த்தொலி கேட்பதும் விம்மி விம்மி மெய்ம்மறந்து ஏதேனும் ஆகாமல் கிடந்தாள் எனப் பேசத் தூண்டிற்று.

இப்பாடலில் தான் பெற்ற பெரும்பயனைத் தன் தோழி யும் பெறவேண்டும் என்ற உயர்ந்த உள்ளத்தில், "சேரவாரும், செகத்தீரே" என்று தாயுமானவர் கூறியாங்கு மகளிர் அழைக்கின்றனர். உள்ளந் தாள் இருந்து உச்சியளவு நெஞ்சாய் உருகுகின்ற மனநிலையை இப்பாடல் அருமை யாய் எடுத்துரைக்கின்றது.

ஆதியும் அந்தமும்
இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக்
கேட்டேயும் வாள்தடங்கண்

மாதே! வளருதியோ?
    வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள்
    வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே
    விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல்
    நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள்
    கிடந்தாள் என்னே! என்னே!
ஈதே எந்தோழி
    பரிசேலோர் எம்பாவாய்!

# இரண்டாவது திருப்பாடல்

இரண்டாம் திருப்பாடல் 'பாசம் பரஞ்சோதிக் கென் பாய்' எனத் தொடங்குகிறது. 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி' என முதற்பாட்டில் உரைத்த சிவபரம் பொருளை இப்பாட்டில் 'பரஞ்சோதி' எனக் குறிக்கின்றார். இப்பாட்டும் உரையாடல் நெறியிலேயே அமைந்துள்ளது. மகளிர் முன்னால் பேசியதை நினைவு கொண்டு, "ஏடி அதனை மறந்தனையோ" என நினைவூட்டி எள்ளி நகை யாடுமாறு பாட்டின் உரையாடல் தொடங்குகின்றது.

போதார் அமளியில் புரண்டவளை நோக்கி, எழுப்பு தற்கு முயலும் மகளிர் கூறத் தொடங்குகின்றனர் : "மிகச் சிறந்த அணிகலன்களை அணிந்த பெண்ணே, நாம் பேசும் பொழுதெல்லாம் இரவும் பகலும் என் அன்பெல்லாம் ஒப்பற்ற பெருமான் ஒருவருக்கே என்று உரைப்பாயே. எப்போதிருந்து நீ மலர் பரப்பிய இப்படுக்கையிடத்து அன்பு கொண்டாய்" என்று தோழியர் கேட்கின்றனர். "தோழி யரே, உங்கள் வாயில் இத்தகைய எள்ளற் சொற்கள் வரலாமா? விளையாடிச் சிரிக்கின்ற காலம் இதுவா?" என்று அவர்களைத் தலைவி கடிந்துரைக்கின்றாள். உடனே அவர் கள், தேவர்களுக்கெல்லாம் பாராட்டக் கொடுத்தருள நாணு கின்ற திருவடிகளை, நம் பொருட்டு அடியார்க்கு எளிய வனாகி வந்து அளிக்கின்ற மெய்யுணர்வுத் தலைவன் தில்லைச் சிற்றம்பலத்து இறைவன். அவனுக்கு நாம் செலுத்தும் அன்பு எப்படிப்பட்டது என்று எண்ணுமாறும் அண்ணாமலைப் பெருமானின் திருவடிப் பெருமையினை நினைந்து போற்றுமாறும் எடுத்துரைக்கின்றனர்.

'பாசம் பரஞ்சோதிக்கென்பாய் இராப்பகல் நாம் பேசும் போது' எனத் தோழியர் பண்டும் பண்டும் பெருமானின் உறவுடைய நிலையைச் சுட்டுவர். பிறவிகள் எத்தனை யாயினும் இஃது அற்றுப் போகின்ற தொடர்போ? ''ஆட்டு வித்தால் யாரொருவர் ஆடாதாரே'' என்பார் போல, உலகனைத்தையும் இயக்குகின்ற மூலப் பொருளன்றோ அவன்? பசுவாகிய உயிர்த் தொகுதி பதியை நினைத்தல் இயல்பு. எனினும், நினையவொட்டாது தடுக்கும் மலயகற் றவும், ஞானநிலைறவெய்திய நிலையில் இறை அனுபவம் பெறவும் அவனது இன்னருளை வேண்டி உயிர்கள் இருத்தல் வேண்டும். ''அவனருளாலே அவன் தாள் வணங்கி'' என்று மணிவாசகப் பெருந்தகை இதனைக் கூறுவர். ஆகவே பண்டைய நிலையை மறந்து கிடக்கும் ஓர் உயிரினை ஏனைய துணை உயிர்கள் வந்து எழுப்புகின்றன. ''புறத்தே எத்தனை இழைகள் அணிந்தவன் நீ! அகத்தே ஒன்றை மறந் தாய் போலும்'' என்ற குறிப்புத் தோன்ற, புகழ்ச்சியும் இகழ்ச்சியும் ஒருங்குதோன்ற அறிவுறுத்துகின்றனர் ஆன்ற மைந்த அறிவுத் தோழியர். ''எம்பெருமானின் திருவடி யன்றி, மற்றொன்றை எண்ணவும் பேசவும் இல்லா இயல் புடையராகிய இவர் இத்தகு குறைமொழிகள் கூறலாமோ'' எனக் கேட்கிறாள் தலைவி. இவ்வாறு பாவையர், பரம் பொருளின் பத்தி நெறி பேசி நீராடச் செல்லுகின்றனர்.

வானவரெல்லாம் சிவபெருமானை வாழ்த்துவர். எதற்காக? தாம் வாழ்வதற்காக! அவர்கள் தம் மனத்தை எல்லாம் இறைவன்பால் தாழ்த்துவர்; எதற்காக? தம்மை யெல்லாம் பிறர் தொழ வேண்டியே என்று மாணிக்கவாசகர் திருச்சதகத்தில் கூறுவர். அவ்வாறு வழிபடுகின்ற வானவர்க் கெல்லாம் அருளாது, கருப்பங்கள் பலகோடி செல்லத் தீய கனலில் நடு ஊசியின் மேல் காலை ஊன்றி நிற்பவர்க் கொளித்து, யோகநீள் முனிவர்க்கொளித்து, மறைகளுக்

கெல்லாம் ஒளித்த தெய்வம், எங்கோ என்று நெக்கு நெக்கு உருகும் உண்மை அன்பர் பொருட்டாய் உவந்து வந்து நின்று, காட்டாதன எல்லாம் காட்டி, தாட்டாமரை காட்டி ஆண்டு கொள்ளும் என்பது மணிவாசகம். அவ்வாறே விண்ணோர்கள் பாராட்டக் கூசுகின்ற மலர்ப்பாதம் இப்பாவையர்க்காக, வந்தருள் புரிகிறது.

'நானார், என் உளமார்? ஞானங்களார்' என எல்லா வற்றையும் தன்னை ஆட்கொண்ட இறைவனிடத்தே ஒப்படைத்துக் கொண்ட எளியோர்க்கே தில்லைச் சிற்றம் பலவன், வந்து அருள்புரியும் என்பதனை இப்பாடல் தெளி வுறுத்துகின்றது. ''ஈசனார்க்கு அன்பின் யாம்யார்'' என்பதன் வழியாகத் தம்மைவியவாத எளிவந்த தன்மையும் புலனாகும். கடையனுக்கும் கடையனாகத் தம்மை நிறுத்திக் கொள்ளும் உயர்ந்த சான்றாண்மையின் இருப் பிடம் தேடித் தெய்வமும் செல்லும் என்னும் அருட் சிறப்பினை இப்பாடல் தெளிவுறுத்துகின்றது.

பாசம் பரஞ்சோதிக்<br>
    கென்பாய் இராப்பகல் நாம்<br>
பேசும்போ தெப்போதிப்<br>
    போதார் அமளிக்கே<br>
நேசமும் வைத்தனையோ?<br>
    நேரிழையாய்! நேரிழையீர்!<br>
சீசி! இவையுஞ்<br>
    சிலவோ? விளையாடி<br>
ஏசும் இடமீதோ?<br>
    விண்ணோர்கள் ஏத்துதற்குக்<br>
கூசும் மலர்ப்பாதந்<br>
    தந்தருள வந்தருளும்<br>
தேசன் சிவலோகன்<br>
    தில்லைச்சிற் றம்பலத்துள்<br>
ஈசனார்க் கன்பார்? யாம்<br>
    ஆரேலோர் எம்பாவாய்!

# மூன்றாவது திருப்பாடல்

'முத்தன்ன வெண்ணகையாய்' என்ற முத்திரையுடன் மூன்றாம் பாடல் தொடங்குகிறது. இரண்டாம் திருப் பாட்டில் ஈசன்பால் நேசம் கொண்ட நேரிழையார்க்குப் பரம்பொருள் பெருங்கருணை உள்ளத்துடன் எளிவந்த பிரானாய் அருளும் மாண்பினை அழகுடன் வாதவூரடிகள் அறிவுறுத்தினார். இத்திருப்பாட்டில் பாவையர்களாகிய ஆன்மாக்களின் சிறுமையைக் களைந்து, திருவருள் பாலிக்கும் பரம்பொருளின் பெருங்கருணைத் திறம் பேசப்படுகிறது.

படுத்திருக்கும் பாவையைக் குழுவாக வந்த மங்கையர் கள் 'முத்தன்ன வெண்ணகையாய்' என முன்னிலைப்படுத்தி மொழிகின்றனர். படுக்கையை விட்டு எழ வேண்டிய பாவை நல்லுறக்கத்தின் தெளிவினால் அகப்பொலிவும் முகத் தெளிவும் கொண்டு விளங்குகிறாள். அழைக்க வந்தவர்களை வரவேற்கும் குறிப்போடு முத்துப் போன்ற பற்களை மெல்லத் திறந்து மெதுவாகச் சிரிக்கிறாள். இக்காட்சியை "முத்தன்ன வெண்ணகையாய்' என்ற கவிதைச் சொற்கள் ஓவியம்போல் உணர்த்துகின்றன. வண்ணம், வடிவம் காரணமாக மங்கையரின் பற்களுக்கு முத்தினை உவமை கூறுவது கவிமரபு. 'முத்துறள் முறுவல்' என்பர் நக்கீரர். முத்து தமிழகத்தின் சொத்து. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தென்பாண்டி நாட்டின் கொற்கைத் துறைமுகத்தி லிருந்து முத்துக்கள் கிரேக்கம் முதலிய மேலை நாடுகளுக்கு வாணிகப் பொருளாக வழங்கப் பெற்றன என்பது வரலாறு. தென்பாண்டி நாட்டவராகிய மணிவாசகப் பெருமான் முத்திற்கு உரிய மரியாதை தந்து, ஈசன்பால் நேசம்கொண்ட

மங்கையரின் பற்களுக்கு அதனை உவமை கூறியது எண்ணத் தக்கது. எனவே முருகியற்சுவை தோன்ற, ''முத்தன்ன வெண்ணகையாய்'' என்று விளித்துள்ளார்.

இத்தகைய நங்கை முன்னைய நாட்களில் எல்லாம் ஏனையோர்க்கு வழிகாட்டியாக வைகறைப் பொழுதிலே துயில் நீங்கி எழுந்து வீதிக்கு வந்து ஏனைய பெண்களை அழைக்கச் செல்வது வழக்கம். அப்பொழுது சிவபெருமானின் பல்வகைச் சிறப்புகளையும் குறிக்கும் திருப்பெயர்களைச் சொல்லிச் சொல்லி வாயூறிப் போவாள். அதனை இப் பொழுது மறந்து அப்பெண் தூங்குவதை, எழுப்பவந்த பெண்கள் நினைவுபடுத்திப் பேசுகிறார்கள். ''நங்கையே! முன்பெல்லாம் முன்கூட்டியே எழுந்து வந்து என்னுடைய அத்தன், ஆனந்தன், அமுதன் என்று தித்திக்கப் பேசி மகிழ்விப்பாயே! இப்பொழுது உறக்கம் கொள்வது ஒவ்வுமா? எழுந்து வந்து கதவைத் திறப்பாய்'' என்று கூட்டமாக வந்த பெண்கள் கூப்பிடுகின்றனர். இப்பகுதியில் மணிவாசகப் பெருமான் இறைவனுக்குரிய பல்வேறு திருப்பெயர்களில் அத்தன், ஆனந்தன், அமுதன் என்ற மூன்றை மட்டும் சிறப்பாக எடுத்துச் சுட்டுதல் சிந்தித்து மகிழத்தக்கது. அத்தன் என்ற சொல் தந்தையைக் குறிக்கும். இதுவே அச்சன் என்று மருவிய வடிவமாகவும் வேறொரு பாடலில் மணிவாசகரால் குறிக்கப் பெற்றுள்ளது. இன்றைய மலையாள மொழியிலும் இச்சொல் இப்பொருளில் வழங்கி வருதல் காணலாம். தனக்கெனத் தந்தை இல்லாதவனாய் முடிவில், அனைவர்க்கும் தந்தையாய் விளங்குபவன் பரம் பொருளாகிய சிவபெருமானே என்பது தெளிவாகும். மாணிக்கவாசகர் மற்றும் ஒரு பாடலில் 'அம்மையே அப்பா' என்று அழைத்தலும் இங்கு எண்ணத்தக்கது. அப்பர் பெருமான் 'அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்' என்று பாடுகிறார். ஆரூரர், 'அத்தா உனக்காளாய் இனி

அல்லேன் எனலாமே' என்று இயம்புகிறார். எனவே, பக்திப் பெருக்குடைய பாவைப் பெண் இறைவனை அத்தன் என்று போற்றுகிறாள். ஆனந்தம் என்பது இன்பத்தைக் குறிக்கும். உலகில் துய்க்கும் பல்வேறு இன்பங்கள் தொடர்ந்து நிலைப் பவை அல்ல; தோன்றி மறைபவை. இறைவன் வழங்கும் பேரின்பமே என்றும் நிலைப்பது. அதுவே ஆனந்தம் எனப் படுவது. அதனை அளிக்கும் பரம்பொருள் ஆனந்தன் என்றே போற்றப்பெறுகிறான். இப்பெயர் இறைவனை நாயகனாகவும், தன்னை நாயகியாகவும் கருதிக் கொண்டுள்ள நிலையில் அமைவது. அவன் வழங்கும் பேரின்பத்திளைப்பின் புலப்பாடாக இச்சொல் வெளிப்படுவது. மூன்றாவது நிலை யில் 'அமுதன்' என்று பாவைப்பெண் இறைவனைச் சுட்டு கிறாள். இச்சொல் இறப்பை நீக்குபவன் என்ற பொருளைத் தருகிறது. எனவே, உயிர்களுக்குச் சாவா, மூவாத் தன்மை யைத் தரும் இறைவன் அமுதன் என்று போற்றப்பெறு கிறான். எனவே பாவைப்பெண் சிவபரம்பொருளை அத்தன், ஆனந்தன், அமுதன் என்று தித்திக்கப் பேசி, வாயூறி நிற்பது வழக்கம். அத்தகைய பெண், தோழியர்களால் இடித்துரைக்கப் பெற்றதும் எழுந்து வந்து 'ஈசன்பால் பற்றுடையவர்களே! பழைய அடியார்களே! பாங்கு மிக்கவர் களே! யாமோ புதிய அடியவர். எமது சிறுமையைப் போற்றி ஆட்கொள்ளக் கூடாதோ' என்று அவர்கள் வாசகத்திலேயே விடையிறுத்தாள். அவள் உரைகேட்ட ஏனைய பாவைப் பெண்கள், "உன்பக்திச் சிறப்பு எங்களுக்கு நன்றாகத் தெரியும். எத்துக்கள் எதற்கு? மனத்தூய்மை வாய்ந்த மகளிர் அனைவரும் நம் சிவனைப் பாடமாட்டார்களா? எங்களை நீ இடித்துப் பேசும் இச்சொற்களெல்லாம் எமக்கு வேண்டுவனவே" என்ற அமைதி அடைகின்றனர். இத்திருப் பாட்டில் மனத்தூய்மையினால்தான் இறைவனை அடைய முடியும் என்ற உண்மை வலியுறுத்தப்பெறுகிறது. அடியார்

களுக்குச் சிவசின்னம் தாங்குதல் முதலிய பத்துப் பண்பு களைச் சைவர்கள் கூறுவர். இக்குறிப்பில்தான் 'பத்துடையீர்' என்று மாணிக்கவாசகர் அடியார்களைச் சுட்டியுள்ளார்.

முத்தன்ன வெண்ணகையாய்!
  முன்வந் தெதிர்எழுந்தென்
அத்தன் ஆனந்தன்
  அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய்!
  வந்துன் கடைதிறவாய்!
பத்துடையீர், ஈசன்
  பழவடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மைதீர்த்
  தாட்கொண்டாற் பொல்லாதோ?
எத்தோ? நின் அன்புடைமை
  எல்லோம் அறியோமோ—
சித்தம் அழகியார்
  பாடாரோ நம்சிவனை?
இத்தனையும் வேண்டும்
  எமக்கேலோர் எம்பாவாய்!

# நான்காவது திருப்பாடல்

''ஒண்ணித்தில நகையாய்'' எனத் தொடங்கும் நான்காம் பாட்டு சிவபெருமானின் அளப்பரிய பெருமை யினையும் தொண்டராய்க் கூடிப் பரவும் நெறியினையும் எடுத்தியம்புகிறது. மகளிர் உரையாட்டில் வேத விழுப் பொருளாய் விளங்கும் விண்ணவர் பெருமானை மெழுகைப் போல உருகிக் கசியும் மனம் பெறவேண்டுமென்பது உரைக்கப்பெறும்.

பாட்டின் கருத்தைக் காண்போம் : ''முத்தனைய ஒளி மிக்க நகையுடையவளே! இன்னும் பொழுது உனக்குப் புலர வில்லையா?'' எனத் தோழிமார் கேட்கின்றனர். அப்போதே உறக்கம் கலைந்த புதிய தோழி, ''கிளிபோலும் மொழி பேசும் நம் தோழியர் எல்லாரும் வந்துவிட்டனரா?'' எனக் கேட்கின்றாள். உடனே தோழியர், ''வேண்டுமானால் எழுந்து வந்து எண்ணிப் பார்த்துக்கொள்; நாங்கள் அதனைச் சொல்லமாட்டோம். அந்த ஒரு சிறுபோதும் தூக்கத்தில் காலத்தைப் போக்கலாம் என்று கருதாதே! விண்ணவர்களுக் கெல்லாம் மருந்தைப் போன்றவனும், வேதங்களெல்லாம் பரவும் பொருளாகவும் கண்ணுக்கினியனாகவும் அமைந்த சிவபரம்பொருளைப் பாடிக் கசிந்து உள்ளம் உருக நாங்கள் நிற்கின்றோம். நீயே வந்து எண்ணிப்பார்த்துக்கொள்; எண்ணிக்கையில் குறைந்தால் நீ மறுபடியும் துயிலப் போகலாம்'' என்று உரைக்கின்றனர்.

''ஒண்ணித்தில நகையாய்'' என்று விளிப்பதை எண்ண வேண்டும். முத்தன்ன வெண்ணகையாய் என்று முன்னைப் பாட்டிலும் மொழிந்ததும் இதே கருத்தில்தான்; அழகான

முத்துப்போலும் சிரிக்கத் தெரிந்த இப்பெண் சிவானுபூதியில், பாடிக் கசிந்து உள்ளம் உள் நெக்கு நின்றுருகிப் போகிறாள். "மருவினிய மலர்ப்பாதம் மனதில் வளர்ந்து உள்ளுருகித் தெருவுதொறும் மிகவலறிச் சிவபெருமான் என்றேத்தி" என்று இந்த அனுபவத்தைச் சுட்டுவர். "அழுதால் உன்னைப் பெறலாமே" என்பதுதானே பரங்கருணைத் தடங்கடலைச் சேர்தற்குரிய நெறியாகச் செப்பப்பெற்றது! "இன்னம் புலர்ந்தின்றோ!" என்பதுதான் எத்தனை அரியபொருளுடைய மொழி! ஊர்க்கும் உலகத்திற்கும் ஏற்பட்ட இந்த விடியல், பரம்பொருளைத் தொழுதற்குரியதாக நமக்குப் புலர்வதன்றோ நாம் பெறும்பேறு. பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால் என்று பாரதி கூறுவதும் எண்ணத் தக்கது. வந்து நீ எண்ணிப்பார், எல்லாரும் வந்தார் என்பது கூட்டு வழிபாட்டு நெறிக்கு முயலுகின்ற சீவான்மாக்களின் எளிய நிலையைச் சொல்லுகின்றது.

சிவபெருமான் ஆலகாலத்தை உண்டு அமரரைப் பாதுகாத்தான். அதனால் தேவர்களின் அருந்துன்பத்தை நீக்கினான். தேவர்களுக்கு அருமருந்து எனப் புகழப்பெற்றான். சாவா மூவா மருந்தாக நின்று பிறப்பென்னும் நோயைத் தீர்க்கும் முழுமுதலாகும் பெருமையினை இச்சிறுமியர் பேசுவது அவனருளால் உணரப்பெற்ற ஞானமன்றோ? "வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" என்றும் மணிவாசகப் பெருந்தகை பேசுவர். ஆழம், அகற்சி, நுணுக்கம் ஆகிய மூன்று கனபரிமாணங்களில் யாண்டும் நீக்கமற நிறைகின்ற ஒரு பேராற்றலை வேதங்களால் உள்ளவாறு விளக்கல் இயலுமோ? எனவேதான் மறைகளுக்கும் எட்டாத சேவடி எனப்பட்டன. இறைவன் கண்ணுக்கு இனியான். "பூசுவதும் வெண்ணீறு; பூண்பதுவும் பொங்கரவம்; பேசுவதும் திருவாயால் மறை போலும் காணேடி" என்றும், "வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய்

விண்ணோர் பெருமானே'' என்றும் அவர் கட்புலனுக்கு அமைந்தவாறு மணிவாசகப் பெருந்தகையால் பேசப்பெறும். அம்மையாய் அப்பனாய் குருந்த மரத்தின் கீழிருந்து வருந் தாதே மெய்யுணர்வு உணர்த்திய ஆசானுமாய் விளங்கிய அவரைக் கண்ணுக்கினியான் என்றதில் வியப்பென்ன? ''பாடிக் கசிந்து உள்ளம் உள்நெக்கு நின்று உருக'' என்பது ஆன்மாவை அவனுடைய மெய் மொழிகளால் அசைக்கின்ற முயற்சியிலே தோன்றும் இனிய அனுபவங்களாகும். நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீர் அதனால் உடம்பு நனைந்து நனைந்து பெறுகின்ற அனுபவ நிலையை வள்ளலாரும் பேசுகின்றார். இத்தகைய அனுபவத்தை ஒருவர் உள்ளத்தில் விதைக்கும் ஆற்றல் பெற்றமையால்தான் 'கருங்கல் மனமும் கரைந்து உகக் கண்கள் தொடுமணற்கேணியில் சுரந்து நீர் பாயும்' என்றனர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். பாவைப் பெண்கள் தொடர்ந்து பேசுகிறார்கள். காலமெல்லாம் தூக்கத்தில் வீணடிக்கும் பெண்ணே! எழுந்து வெளியே வந்துபார், எல்லோரும் வந்துவிட்டார்களா என்று. எண்ணிப்பார்த்து வருவோர் எண்ணிக்கை குறைந்திருந்தால் ''மீண்டும் போய்த் தூங்கலாம்'' என்று இடித்துப் பேசுகிறார்கள்.

வாதவூரடிகள் தாம் பெற்ற இறை அனுபவத்தை தீந்தமிழில் குழைத்துத் திருவெம்பாவையாக இனிக்கும்படி எளிய மக்கள் உணர்கின்ற நிலையில் இயம்பியுள்ளார். எள்ளுவது போலவும் இடித்துரைப்பது போலவும் ஒருவர்க் கொருவர் வினாவியும் விடை கூறியும் வருகின்ற பாங்கில் எத்தனை ஆழமான பதிஞானத்தை இயம்புகிறார் என்பது எண்ணி மகிழ்தற்குரியது.

ஒண்ணித் திலநகையாய்!
        இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார்
        எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா
        சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே
        காலத்தைப் போக்காதே!
விண்ணுக் கொருமருந்தை
        வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப்
        பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக
        யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில்
        துயிலேலோர் எம்பாவாய்!

# ஐந்தாவது திருப்பாடல்

முன்னைத் திருப்பாட்டில் கசிந்துருகிக் கண்ணுதற் கடவுளின் கருணை பெற வேண்டும் என்று இயம்பினார் வாதவூரர். இந்த ஐந்தாம் திருப்பாட்டில் திருமாலும் நான் முகனும் அடிமுடிதேடி அறியப்படாத அருணகிரியின் அருமை பெருமைகளைப் பேசுகிறார். காமம், வெகுளி, மயக்கம் என்ற இழி பொருளில் இருந்து விடுபட்டு, ஒளிக்கதிராய்த் தோன்றும் அவனது அருளைப் பற்றிக் கொண்டு உய்வதற்கு மனிதன் முயலவேண்டும் என்னும் கருத்தை இவ்வரிய பாடல் விளக்குகிறது. இப்பாடலும் நாடகப் பாங்கில் அமைந் துள்ளது. பாவைப் பெண்கள் ஒரு குறிப்பிட்ட பாவையின் வீட்டிற்கு வந்து கதவைத் தட்டுகின்றனர். "திருமாலும் நான்முகனும் அறியமுடியாத மலைபோலும் அவனை அறிந்துவிட்டது போலப் பொய் பேசுகின்ற வஞ்சகியே! உன் வாயிற்கதவைத் திறப்பாயாக. அல்லது உன் வாயைத் திறந்தாவது பேசுக. மண்ணும் விண்ணும் பிற உலகங்களும் அறிவதற்கு அரிதாய பெருமானை, பிழைபோக்கி நம்மை ஆட்கொண்டு வளர்க்கின்ற அப்பரம் பொருளை நாங்க ளிங்கே பாடுகின்றோம். சிவனே சிவனே என்று அவன் பெயர்களைக் கூறுகின்றோம். அவன் பண்புகளையும் திருப் பெயர்களையும் நாங்கள் கூறக் கேட்டும் உணராமல் நீ உறங்குகிறாயே! மணம் வீசுகின்ற குழலை உடையவளே! உன் தன்மை இதுவோ?" என்று இடித்துப் பேசுகின்றனர்.

மாணிக்கவாசகர் திருவெம்பாவை பாடிய தலம் திருவண்ணாமலை. எனவே இத்தலத்தின் தோற்றத்திற் குரிய ஒரு புராணக் கதையை இப்பாடலில் கூறுதல்

பொருத்தமே. திருமால் பன்றியாகவும் நான்முகன் அன்ன மாகவும் தேடிக் காணாது திகைத்த செயல் ஓர் அரிய உண்மையை உணர்த்துகிறது. கண்ணப்பர்க்கும் பூசலார்க் கும் எளிவந்த நிலையில் அருள் செய்த பெருமான், திருமாலுக்கும் நான்முகனுக்கும் காணாது மறைத்தான். அங்ஙனம் மறைத்தமைக்கும் காரணம் உண்டு. படைத்தல் தொழிலும் காத்தல் தொழிலும் முழுமுதற் கடவுளாகிய சிவபரம்பொருளின் ஆணைவழி இயற்றும் இவ்விரு தெய்வங் களும் தாம்தாம் பெரியர் என்று தருக்கியும் செருக்கியும் நின்றனர். அவர்தம் ஆணவ இருள் நீங்கும் பொருட்டுப் பேரொளிப் பிழம்பாக, சுயம்புவாகப் பெருமான் உருக் கொண்டான். பஞ்சபூதத் தலங்களில் தேசோலிங்கத் தலமாக விளங்குவது திருவண்ணாமலை. அன்னப்பறவை வடிவெடுத்து உயரப் பறந்து சென்ற பிரமன் முடியைக் காணமுடியாது திகைத்துக் கண்டுவிட்டதாகப் பொய்பேசினான். வராக வடிவம் எடுத்து அடியைத் தேடிச் சென்ற திருமால் காண முடியாமையினை ஒத்துக் கொண்டார். மலை இலக்காக வெளிப்பட்டும் ஆணவ இருளில் நின்ற இருவர்க்கும் முடிவாக அருள்புரியும் வகையில் வெளிப்பட்டுக் காட்சி கொடுத்தார் இறைவன். அத்தகைய அறிதற்கு அரிய பெருமானை நாமறிவோம் என்று பொய்யுரைகளைப் பேசு கின்ற பாலும் தேனும் கலந்தாற் போல் இனிக்கப் பேசுவதில் வல்ல படிறியே! என்கின்றனர் தோழியர். “தித்திக்கப் பேசுவாய்” என்று முன்னைப் பாட்டில் பொதுவாகக் கூறப் பெற்ற பெண், இப்பாட்டில் ‘பாலூறு தேன்வாய்ப் படிறீ’ என்று உவமைநலம் தோன்ற உரைக்கப் பெற்றாள். உன் மொழிகள் பாலும் தேனும் கலந்தனவாய்த் தித்திக்கின்றன; எனினும், அவையெல்லாம் பொய்ம்மொழிகள் அன்றோ? இந்த ஞாலமும் விசும்பும் பிற உள்ள எல்லாப் பொருள் களும் சேர்ந்தாலும் அறிவதற்கு அரியன் சிவபெருமான்.

இன்ன நிறத்தன், இன்ன தன்மையன் என்றுரைக்க மாட்டாத தன்மையன் அப்பெருமான். உலகத்துள்ள எல்லாப் பொருள்களிலும் உட்பொருளாய் அப்பொருள்களாலும் உணர மாட்டாத உள்ளிருப்பாய் இருப்பதன்றோ அச்செம்பொருள்! அத்தகைய பெருமைக்குரிய இறைவன் தன்னுடைய கோலங் காட்டிக் குற்றங்கடிந்து நம்மை ஆட்கொண்டு அருள்வான் என்ற உண்மையைப் பாடி, சிவனே சிவனே என்று ஓலமிடினும் துயில் உணராமல் படுத்திருக்கின்றாயே! உன் கூந்தலில் நறுமணம் வீசுகிறது. ஆயினும் உலகனைத்தும் பரந்த அப்படரொளிப் பரப்பின் பெருமை இன்னும் உன்னை வந்து எட்டவில்லையே! என்கின்றனர்.

கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும் சீலமும் என்பன மணிவாசகர் தம் வாழ்க்கையில் கிடைத்த தன்னனுபவங்கள் எனலாம். அம்மெய்ம்மை உணர்வுகளை உலகர் அறியும் வண்ணம் இவ்வாறு உணர்த்துகின்றார்.

திருப்பொற்சுண்ணம், திருச்சாழல், திருவுந்தியார் என்றாற்போல மகளிர் விளையாட்டுகளால் ஞானநெறியினைக் கற்பிக்கும் பாங்கிற் பாடிய இப்பாடல்களில் யாவற்றையும் கடந்து நிற்கும் இறைவனின் தன்மையும், யாவற்றுள்ளும் உள்ளடங்கி நிற்கும் தன்மையும், தன்னைத் தொழுவார்க்குக் கோலமும் சீலமும் காட்டி ஆட்கொள்ளும் அருட்பண்பும் அருமையாகக் கூறப்பட்டன. இப்பாட்டில் பயிலும் வசைமொழிகள் கூட எவ்வளவு உயர்ந்த நிலையில் அமைகின்றன.

'பாலொடு தேன் கலந்தற்றே' என்ற திருக்குறள் தொடரும் 'பாலூறு தேன்வாய்ப் படிறீ' என்ற பாவைத் தொடரும் இணைத்து நோக்குதற்குரியன. 'சிவனே சிவனே' என்று இரண்டுமுறை அடுக்கி வந்தது அவனே அடைக்கலம் அளிக்க வல்லவன் என்பதைக் குறிப்பது. 'உணராய்,

உணராய்' என்று இருமுறை அடுக்கி வருதல், வாயில் திறவாது படுக்கையில் உறங்கும் பாவையின் மடமையினை அறிவுறுத்துவது. 'பரிசு' என்பது அவள் நிலைக்கு இரக்கப் படுதலைக் குறிக்கும்.

இறைவனைப் பசு ஞானத்தாலும் பாச ஞானத்தாலும் பார்க்கமுடியாது. அவனருளாகிய பதி ஞானத்தினால் மட்டுமே உணரமுடியும் என்ற சைவசித்தாந்தப் பேருண்மை யினை இப்பாடல் எடுத்துரைக்கிறது.

மாலறியா நான்முகனும்
காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள
பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப்
படிறீ கடைதிறவாய்!
ஞாலமே விண்ணே
பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட்
கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச்
சிவனே! சிவனே! என்(று)
ஓலம் இடினும்
உணராய் உணராய்காண்!
ஏலக் குழலி
பரிசேலோர் எம்பாவாய்!

# ஆறாவது திருப்பாடல்

முந்தைய திருப்பாட்டில் பதி ஞானத்தினால் மட்டுமே பரம்பொருளை உணரமுடியும் என்ற கருத்துச் சுட்டப் பெற்றது. இத்திருப்பாட்டு 'மானே! நீ நென்னலை' எனத் தொடங்குகிறது. இறைவனை எண்ணி அவன் பெருமைகளைப் பேசித் தம்மொத்த மகளிரொடு முன்னாள் வாய்ச்சொல் வீரத்தை எள்ளலாக இடித்துணர்த்தி நீராடற்கு அழைக்கும் அன்புச் செயலின் வெளிப்பாடாக இப்பாடல் அமைந்துள்ளது.

'மானே! நீ நேற்று என்ன சொன்னாய் தெரியுமா? நாளை வந்து உங்களை நானே எழுப்புவேன் என்றாயே! இப்போது வெட்கமற்று உறங்குகிறாய். நீ கட்டுரைத்த அம்மொழி சென்ற திசை கூறாய். உனக்குப் பொழுது இன்னும் புலரவில்லை போலும். வானும் நிலவும் பிறவெல்லாம் அறிதற்கு அரியானாகிய சிவபெருமான் நாம் தேடிச் செல்லாமல், அருட்பெருக்கம் காரணமாகத் தானே வந்து நமக்கு இரக்கங்காட்டுவான்; ஆட் கொண்டருள்வான். அத்தகைய அருட்செல்வனின் உயர்ந்த கழல்களைப் பாடி உன்னைப் பாவை நோன்பிற்கு அழைக்கவந்த எங்களிடம் உன் வாயைத் திறந்து பேசமாட்டாயா! உன்னுடைய ஊன் உருகமாட்டாயா? உனக்கும் எமக்கும் யாவர்க்கும தலைவனாகிய அப்பெருமானின் பெருமைகளைப் பாடுகின்ற எங்களுடன் இணைந்து நீ பாடிப் பரவுதற்கு எழுந்து வருக' என்று கூறுகின்றனர் தோழியர்.

நேற்று எல்லோரையும் வந்து எழுப்புவதாக இவளே சொன்னாளாம். இன்று என்ன ஆயிற்று? வாழ்நாளில் பாதி

உறக்கத்தில் போவதுதானே மனித வாழ்க்கையின் இயல்பு. "உறங்குவது போலும் சாக்காடு" என்றாற்போல ஒவ்வொரு நாளும் நிகழ்கின்ற இறப்புத்தானே இந்நெடுந் துயில். இதிலிருந்து விடுபடுவது என்ன அவ்வளவு எளிதா? நேற்று எழுப்புவதாகக் கூறியவள் இன்று ஒன்றும் புரியாமல் விழிக்கிறாள். அதனால்போலும் அவளது தோழியர் கூட்டம் "மானே" என்று அழைக்கிறது. மருண்டுவிடுவது மானின் இயல்பன்றோ! நானே எழுப்புவன் என்பது சகச மலத்தின் குறியீடன்றோ? அத்தகைய துணிவும் தெளிவும் உடையாளாக இருந்த ஒருத்தி, இன்று உறங்க, மற்றை உயிர்கள் இவளை எழுப்புகின்றன. வானும் நிலவுமாகிய இயற்கைக் கூறுகளெல்லாம் அப்பெருமானை அறிதற்கு அரியன. இவையனைத்தும் சடப் பொருள்கள். எஞ்சிய பூதங்களும் உணர்தற்கு அரியான் அப்பெருமான். அத்தகைய பெருமை மிக்க இறைவன் தானே வந்து எம்மைத் தலை அளித்து அளித்து ஆட்கொண்டான் என்றார். 'தந்தது உன் தன்னை; கொண்டது என் தன்னை சங்கரா யார் கொலோ சதுரர்' என்று மணிவாசகப் பெருமானே கூறுமாறுபோல இறைவனின் அளப்பரிய பெருமையும் ஆட்கொண்டருளும் பெருந்தகவும் அவர்க்கு ஆட்படுகின்ற உயிரின் சிறுமையும் மிக அழகாக இப்பாடலில் உணர்த்தப்பெறுகின்றன. இத்தகைய வான்கருணை கொண்டவனின் கழல் பாடுவதன்றோ உயிர்கட்கு இன்றியமையாத செயலாகும். ஆயினும் இயல்பாகவே உயிர்களின் வேட்கை தம்மைப் புரக்கும் நாயகனைச் சார்தல் இல்லை. 'வேனில் வேள் மலர்க் கணைக்கும் வெண்ணகைச் செவ்வாய்க்கரிய பானலார் கண்ணியர்க்கும் பதைந்துருகும் பாழ் நெஞ்சே', 'வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே' என்றும் இறைவனின் அடி பணிதற்கு இயலாத மனத்தின் இயற்கையினைப் பிற பாடல்களிலும் மணிவாசகப் பெருமான் கூறியுள்ளார். அழல்சேர் மெழுகொப்ப எம்பெருமான் திறங்கேட்டு உருகுவதன்றோ

பத்திக்கு உரைகல்? 'தென்னா எனும் முனம் தீ சேர் மெழு கொப்பாய்' என்று பாடுவதும் எண்ணத்தகும். உள்ளங் கசியவும் ஊன் உருகவும் நிற்கும் அன்புடையார்க்கு அவ் விறைவன் தன் மணம்கமழ் தெய்வத்து இளநலம் காட்டித் திருவருள் புரிவான். அத்தகைய பெருமானைப் பாடற்கு எழுந்து வருக என்று அழைக்கின்றனர் தோழியர். பிறவா யாக்கைப் பெரியோன் ஆதலால் ஏனைத் தெய்வங்கள் போலப் பிள்ளைமைப் பருவம் பெற்றிலன். எக்காலத்தும் எப்போதும் எல்லாப் பொருளோடும் கலந்து நிற்கின்ற அப் பொருளின் பெருமை சுட்டப்பெற்றது. யாவர்க்கும் தலைவன் இறைவன் என்ற பேருண்மையினை மணிவாசகப் பெருமான் இப்பாடலில் தெளிவுறுத்தியுள்ளார். இறைவன் ஆன்மாக்களிடம் எதிர்பார்ப்பது உண்மையான அன்பு. அன்பு என்றாலும் பக்தி என்றாலும் ஒன்றுதான். "அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்'' என்று திருவள்ளுவப் பெருந் தகையும் சுட்டுவார். அன்பு பெருக்கெடுக்கும் பொழுது, அதனை அணையிட்டுத் தடுக்க யாராலும் இயலாது. பாவைப் பெண்கள் பக்தியின் சின்னம். அன்புருக இறைபணியில் ஈடுபடுகின்றனர். பள்ளத்தை நோக்கிச் செல்லும் வெள்ளத் தைப் போல, அன்பர்களின் உள்ளத்தை நோக்கி ஓடி வருபவன் இறைவன் என்ற பக்தி நெறியின் பெருமையினை மணிவாசகப் பெருமான் இத்திருப்பாட்டில் தெளிவுறுத்தி யுள்ளார். எல்லோர்க்கும் தலைவன் இறைவன் என்ற கருத்தும் இத்திருப்பாடலில் உணர்த்தப் பெற்றது.

மானே! நீநென்னலை
நாளைவந் துங்களை
நானே எழுப்புவன்
என்றலும் நாணாமே
போன திசைபகராய்
இன்னம் புலர்ந்தின்றோ?

வானே நிலனே
    பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத்
    தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி
    வந்தோர்க்குன் வாய்திறவாய்!
ஊனே உருகாய்
    உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப்
    பாடேலோர் எம்பாவாய்!

# ஏழாவது திருப்பாடல்

ஆறாம் திருப்பாட்டில் உருகி நிற்பவர்க்கு இறைவன் தாமே எளிவந்து அருள்புரியும் திறம் சுட்டப்பெற்றது. 'அன்னே இவையும் சிலவோ' என்ற இத்திருப்பாட்டு, இறைவனைக்குறித்த திருமொழிகளைக் கேட்டும் உறக்கம் கலைந்து எழாதிருக்கும் பெண்ணிற்கு இடித்துரையாகத் தோழியர் கூறுவதாக அமைந்தது. 'அன்னே இவையும் சிலவோ' என்று பேசத் தொடங்குகின்றனர் தோழியர். உறக்கத்தின் கொடும்பிடியிலிருந்து விலகி வந்து எம்பெருமானைப் பரவுதற்கு எழுந்து வர அழைக்கிறது தோழியர் குரல்.

இப்பாடலின் அரிய கருத்து காண்பதற்கு உரியது. கன்னிப்பெண்ணை எமக்குத் தாயே என்று பாவைப்பெண்கள் செல்லமாக விளித்தனர். தொடர்ந்து கேட்கின்றனர்! "வீடுவீடாகச் செல்வதும் உறங்கும் பெண்களை எழுப்புவதும் ஆகிய இவையெல்லாம் எங்கள் கடமைகளாகிவிட்டன போலும்! தேவர் பலராலும் நினைதற்கு அரியான். ஒப்பற்ற சிவபெருமான்; பல பெருமைகள் மிக்கவன். அவனுடைய பெருமையை எடுத்துரைக்கும் திருச்சின்னங்களின் ஒலிகேட்டுச் சிவன் என்று சொல்லி வாய் திறந்து வந்து எங்களைக் காணாயோ? உருகும் தென்னா என்று சொல்வதற்கு முன் முன்பெல்லாம் தீயில்விழுந்து உருகும் மெழுகைப் போன்று இளகுவாய். அத்தகைய எம்பெருமானை, எங்கள் அரசனை இன்னமுதென்று எல்லாரும் சொல்வது உன் காதில் கேட்கவில்லையா? இன்னும் உறங்குகின்றனையே; வலிய நெஞ்சம் கொண்ட பேதையரைப் போல ஓர் உணர்வும் இன்றிக் கிடக்கின்றாயே! இந்த உறக்கத்தின் தன்மை

என்னவென்று கூறுவது?'' என்று தோழி துயில் எழுப்புகிறாள்.

மகளிர் பலர் ஒருங்கு கூடிக் குளம், ஆறு ஆகிய நீர்நிலைகளுக்குச் சென்று மார்கழித்திங்களின் நாட்காலையில் நீராடி இறைவனைத் தொழுது வாழ்த்துவது பண்டைய வழக்கமாகும். இதனைத் தைந்நீராடல் என்றும் அம்பா ஆடல் என்றும் இலக்கியங்கள் மொழியும். அந்நோன்பு கொண்டாடும் மகளிர் வழியாக மாணிக்கவாசகப் பெருந்தகை சிவபரம்பொருளின் அருமை பெருமைகளை எடுத்துரைக்கின்றார். மகளிர் வழியாகவே பாரம்பரியப் பண்புகளும், இல்லறக் கடமைகளும் உலகில் பரவுதல் இயற்கை வகுத்தளித்த சட்டமாகும். எனவே, சிவத்தைப் போற்றும் சைவச் செந்நெறியின் வித்தை முளைக்க வைத்துப் போற்றும் பொறுப்பினை மணிவாசகர் பெண்களிடம் ஒப்படைக்கிறார். பின் தூங்கி முன்னெழும் பொறுப்பு மணமான தையலர்க்கு உண்டு. அதனைக் கன்னிப் பருவத்திலேயே இவர்கள் பெற வேண்டாமா? இவ்வாறு தம்மை வருத்திக்கொண்டு, துயிலின்பம் ஒழித்து நீராடி நோற்பதால் யாது விளையும்? திருமாலுக்கும் நான் முகனுக்கும் தேவர்களுக்கும் எங்கும் இலாததோர் இன்பம் நம் பாலதாக ஆக்குவான் என்கிறார் மணிவாசகர். அதனால் தான் இப்பாடலில் ''அம்மே! சிவச்சின்னங்களின் நல்லொலி உன்காதில் விழுகின்றபோது 'சிவா' எனக்கூறி வாய் திறப்பாய்'' என்கிறார். வழுக்கி வீழினும் அவன் திருப்பெயரல்லாது வேறொன்றறியாத வாழ்க்கை உறுதியை இப்பாட்டு நமக்குக் கற்பிக்கின்றது. தென்னா என்று கூறுமுன்னம் தீசேர் மெழுகொப்பாய் என்று கூறுவதை நினைத்தல் வேண்டும். தென்பாண்டி நாடே சிவலோகமாம் என்று மொழிந்தவர் மணிவாசகர். 'தில்லையுட்கூத்தனைத் தென்பாண்டி நாட்டானை அல்லற்பிறவி அறுப்பானை'

என்று சிவபுராணத்திலும் அப்பெருமை பேசப்பெறும் வாதவூர் அடிகளின் வாழ்க்கை பற்றிய குறிப்புக் கெல்லாம் இங்கு இடமுண்டு.

**''என்னானை என்னரையன் இன்னமுதென்று எல்லோமும் சொன்னோங் கேள்!'**

என்பதன் வயிலாக அன்னையும் அத்தனும் நமக்கு அவரல்லவோ என்ற மனநிலை புலப்படும். என்னவன், எம்மரசன், இன்னமுதம், என் வாழ்க்கை, ஆட்சி, உணவு ஆகிய மூன்றாகவும் காண்கிறது அப்பெண்ணின் உள்ளம். வாழ்க்கையில் கணவன் என்ற உறவே தலைமையானது. கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல் என மொழிவர் இளங்கோவடிகள். அடுத்து அரசன்; மன்னுயிர்க்கெல்லாம் தானுயிராய் நின்று செங்கோல் செலுத்தும் தலைமை மிக்கவன். அடுத்து உணவாகும் இன்னமுதம்; மூப்பும் பிணியுமின்றி வாழவைக்கும் வானவர் நாட்டு அமிழ்தம். இவ்வாறு சிவபெருமானைக் காணும் சிறப்பினை இப்பாடல் காட்டுவதை நாம் உணரவேண்டும். 'வன்னெஞ்சப் பேதையர் போல் வாளாகிடத்தியால்' என்பது சிவபரம்பொருள் பற்றிய சிந்தனையைச் சீலமாகக் கொள்ளாத சிறுமை வாழ்வைக் குறிக்கும் தொடராகும். எம்பெருமானை வணங்காத்தலை இகழ்விற்கு எடுக்கும் தலை என்றாற்போல அவனை எண்ணாது, சிவம் என மொழியாது உறக்கமே தொழிலாகக் கிடப்பது வன்னெஞ்சப் பேதையர் செயல் என்று இடித்துரைப்பர். நெஞ்சக் கனகல்லையும் நெகிழ்ந்துருகச் செய்யும் ஈசன் திருப்பெயர்கள் கேட்கும் அசைவின்றிக் கிடந்தால் இவளை என் சொல்வது? ஆகவே, 'வன்னெஞ்சப்பேதை' என்றார். 'என்னே துயிலின் பரிசு' என்பது பிறவி நோயழிக்கும் பெருஞ்சிறப்புக்குரிய திருப்பெயரை எண்ண விடாமற் செய்யும் இந்தத் தூக்கம் எவ்வளவு கேடு செய்கிறது என்று உணர்த்துவதற்கெழுந்த தொடராகும்.

இது தமோ குணத்தின் தன்மை. இறைவனை உணரப் பசித்திரு, தனித்திரு, விழித்திரு, என்றே சான்றோர் கூறினர் என்பதையும் இங்குக் கருத வேண்டும். இதுவே சத்துவ குணத்தின் தன்மை. நெடுநாளைக்கு முன்புகூட அல்ல, நேற்று நீ சொன்ன மொழிகளையே மறக்கடித்துவிட்டதே இந்தத் துயில் என்று பாட்டிலும் கூறியதிலிருந்து யாரொருவர்க்கு ஆக்கம் வேண்டுமொ அவர்கள் தூக்கத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபடவேண்டும் என்ற உலகியலையும் ஒருசேர இப்பாடல் உணர்த்துகிறது.

அன்னே! இவையுஞ்
சிலவோ? பலஅமரர்
உன்னற் கரியான்
ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச்
சிவன்என்றே வாய்திறப்பாய்!
தென்னாஎன் னாமுன்னம்
தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என் அரையன்
இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய்
இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல்
வாளா கிடத்தியால்
என்னே துயிலின்
பரிசேலோர் எம்பாவாய்!

# எட்டாவது திருப்பாடல்

சென்ற திருப்பாட்டில் ஆக்கம்பெற விழைவோர் தூக்கத்தினின்று விடுபெற வேண்டும் என்ற உண்மை உணர்த்தப் பெற்ற திறம் கண்டோம். ''கோழி சிலம்பச் சிலம்பும்'' எனத்தொடங்கும் எட்டாம் திருப்பாடலின் எழில் நலமும் பொருட்சிறப்பும் நோக்குவோம்.

ஒரு புலர்காலைப்பொழுது நமக்குச் சிவபரம்பொருளை அறிவுறுத்துவதாக அமைவதனை இப்பாட்டு நன்கு கூறுகிறது. இருளின் மடியில் துயின்றிருந்த எல்லாம் கண்விழித்துவிட்டன. கதிரவன் தன் இளம் கைகளால் தொழுமுன்னே அவை யெல்லாம் கடமை உணரத் தொடங்கிவிட்டன. ''புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாய்ப் பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாய்'' எத்தனை எத்தனை பிறவிகள்! இயலும் இவற்றி லெலாம் உயர்ந்தது மானிடப் பிறவியன்றோ'' அதனால் தான், 'மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்றனர். இறைவனை உணர்ந்து வழிபாடு செய்து தம் வினையகற்றிக் கொள்ளும் திறம் மனிதப்பிறவிக்கே உண்டு, மனிதப்பிறவி ஒன்றே அஞ்செழுத்தை இடைவிடாது சிந்திக்க இயலும். அதுபற்றியே ''புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா நின்னடி என்மனத்தே வழுவாதிருக்க வரம்'' வேண்டினர் பெரியோர்.

இவ்வெட்டாம் பாட்டின் பொருட்சிறப்பை இங்கு நோக்குவோம். ''கோழி கூவுகிறது; பறவையினங்கள் ஆர்ப் பரிக்கின்றன. ஏழு துளைகளையுடைய இசைக்கருவிகள் இன்னிசை பரப்புகின்றன. வெண்சங்கின் ஒலி எங்கெங்கும் கேட்கிறது. ஒப்பிலாத இறைவனின் பெருங்கருணையை,

அவனைக் குறித்த உயர்ந்த செய்திகளை நாங்கள் பாடினோமே அது உன் செவிகளில் விழவில்லையா? இஃது என்ன உறக்கமோ? வாயிற்கதவைத் திறப்பாயாக! ஆணைச் சக்கரத்தை உடைய எம்பெருமானின் அன்புடைமை இவ்வாறு தேடுவார்க்கே புலனாகும். ஊழி முதல்வனாக இருக்கின்ற ஒருவனைப்பாடாதிருப்பது உனக்குச் சரியாகுமா? ஏழை பங்காளனைப் பாடற்கு எழுந்து வருக” என்று பாவை மகளிர் துயிலெழுப்புவதாக அமைந்தது இப்பாட்டு.

கோழிகள் துயிலெழுந்துவிட்டன. அவற்றின் குரல் கேட்டுக் குருகுகள் எல்லாமும் துயிலெழுந்து ஒலிக்கத் தொடங்கி விட்டன. இவற்றின் பின் குழல் முதலாய இசைக் கருவிகளும் சங்கும் ஒலியெழ மனிதர் கடமையாற்றத் தொடங்கினர். வைகறைப்பொழுதின் வனப்புறு காட்சி இது. இயற்கையே இறைவழிபாட்டுக்குத் தூண்டுவது போல் தன் இனிய காலைச் சூழலை அமைத்துத் தந்துள்ளது. இசைவல்லார் தம் இசைக்கருவிகளில் தொன்றுதொட்டு இசைக்கும் பெருமானின் புகழைப் பேசுகின்றனர். இவற்றுக்கெல்லாம் மேலாகத் தோழியர் தனக்கு ஒப்பொன்றும் இல்லாத பரஞ்சோதியின் புகழ்பாடுகின்றனர். காலை எழுந்தவுடன் பிறவிக்கே அருமருந்தான ஒரு பொருளைப் பற்றியும், அதன் கருணைப்பெருக்கைப் பற்றியும், நுணுக்கமான பல செய்திகளைத் தெள்ளத் தெளிவாக நாங்கள் பாடுகிறோமே கேட்கவில்லையா என்கின்றனர். தம்மைத் தொழுவோர்க்குத் தம் அளவில் பெருங்கருணை அலையெறிந்து நீராட்ட, அப்பரம்பொருள் அழைப்பதனையே கோழியும் குருகும் ஏழிலும், சங்கும் காட்டுகின்றன. கூவின பூங்குயில், கூவின கோழி. குருகுகள் இயம்பின, இயம்பின சங்கம் என்று திருப்பள்ளியெழுச்சியிலும் மணிவாசகர் காலைப்போதின் வண்ணம் காட்டுவார். ‘வாழி யீதென்ன உறக்கமோ’ என்கிறாள் தோழி. நோய் கொண்டவர் உறங்க

முடியுமா?மருந்து பற்றிச் சிந்தியாதிருக்க முடியுமா? பிறவி யென்னும் தொலைத்தற்கரிய நோயைக் கொண்டிருந்த நிலையிலும் இப்படி ஓர் உறக்கமா? என்றுகேட்பதை நாம் உணர்தல் வேண்டும். இவ்வாறெல்லாம் போற்றற்குரிய அவன் யாவன்? அவனை, 'ஊழி முதல்வன்' என்ற அரிய தொடரால் அறிமுகம் செய்கிறார் மணிவாசகர். உலக மெலாம் தோன்றுதற்கு முன்னும். உலகம் தோன்றிச் செயலொடுங்கி அழிந்து முடிந்ததன் பின்னும், பிறப்பு இறப்பிலனாய் நிற்கும் பெரியவனை ஊழி முதல்வன் என்றுதானே குறிக்க வேண்டும். "போக்கும் வரவும் புணர்வு மிலாப் புண்ணியனே, காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே" என்று தனித்து நிற்கும் அவனுக்கு ஆதியும் அந்தமும் இல்லையாகவே அவனே ஊழி ஆகிறான். இவ்வளவு பெரியவன். யார்க்கும் எதற்கும் ஒப்புரைக்க முடியாத ஒண்மைமிக்கவன் தனக்கு உரியவராகச் செல்வர் களையே நாடுவனோ? ஆம் உலக இயல்பு அதுதானே! செல்வம் உடையார் முன் இல்லார் ஏக்கற்று நிற்றல்தானே உலக இயற்கை. செல்வர்க்கே எல்லாரும் சேவடித் தொண்டு செய்கையில் சிவனும் செல்வரையே தனக்கு அடியாராகக் கொண்டால் ஆகாதோ? அப்படியன்று, பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள, அருட்செல்வமன்றோ செல்வத்துள் செல்வம். அச்செல்வமிக்க ஏழைகளிடம் பங்காளனாக இறைவன் வந்து உறைகின்றான், ஏழையின் பங்கில் இருப்பவன் இறைவன். ஆகவே, "ஏழை பங்காளனையே பாடேலோர் எம்பாவாய்" என்கிறது திருவெம்பாவைப் பாட்டு. மற்றும் ஒருபொருள் கூறுவர். ஏழை என்பது பெண்ணைக் குறிக்கும், இங்கு உமையம்மையினைக் குறித்தது, உமையினை இடப்பங்கில் உடையவன் ஏழை பங்காளன் ஆகிறான், அம்மையப்பனாக இப்பாடல் இறைவனைப் போற்றுகிறது.

கோழி! சிலம்பச்
சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப
இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி
கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள்
பாடினோங் கேட்டிலையோ?
வாழியீ தென்ன
உறக்கமோ? வாய்திறவாய்!
ஆழியான் அன்புடைமை
ஆமாறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய்
நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே
பாடேலோர் எம்பாவாய்!

# ஒன்பதாவது திருப்பாடல்

எட்டாம் திருப்பாட்டு ஏழை பங்காளனின் எளிவந்த தன்மையினைப் பேசியது. இவ்வொன்பதாம் திருப்பாடல், "முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே" எனத் தொடங்குகிறது. பழம்பொருள்கள் யாவற்றிலும் பழமை மிக்கதாகவும், புதுப்பொருள்கள் யாவற்றிலும் புதுமை மிக்கதாகவும் விளங்குகின்ற பரம்பொருளைப் பணியும் நெறியினை இப்பாடல் அழகுற இயம்புகின்றது. இதுவரை துயிலெழுப்புதலும், நீராடற் கேகலும், வாயிற் கடை திறக்க வேண்டலுமாக இருந்த பாவையர் திருக் கூட்டம், பெருமானைப் பரவி ஏத்தும் பணியில் இப்போது ஈடுபடுகிறது. உறக்கத்திலிருந்து எல்லாரும் கண் விழித்தா யிற்று. இறைவனை வணங்கும் கடமை உணர்ந்தாயிற்று. அவனிடம் என்னகேட்பது? அதனை உணர்த்தும் வகையில் அமைந்தது இப்பாட்டு.

முன்னைப் பழம்பொருள்கள் யாவற்றிலும் மூத்தது இறை. காலம் தன் குறிகளையும் குணங்களையும் பதிக்க முடியாத ஒன்று இறை. தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடு சூழ்கலை வாணர்களும் என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினளாம் என்று கூறுவதுபோல் அவ்வளவு பழம்பொருள் இறை. திங்களொடும் செழும்பருதி தன் னோடும் உடுக்களோடும் மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழ் என்று பாவேந்தர் கூறுவதுபோல் உலகப்பொருள் யாவற்றினும் கழிய மூத்தது, அத்தகைய மூப்பு செயலற்ற தாக அன்றோ அமையும்? அப்படியன்று, நிலவும் கதிரும் தொழிலாற்றித் தேய்ந்து போயினவா? உடுக்கள் ஒளிசிந்திக்

கரியாகப் போயினவா? இவற்றையெலாம் கலகநிலையறியாத காட்சியாகி என்று வள்ளலார் சொல்லுமாறு படைத்தளிக்கும் ஒன்றுக்கு அம்மூப்பின் முத்திரை ஏதுமில்லை, கால நியதிகளைக் கடந்தது அம்முழுமுதல்: காலனையே தம் காலால் கடிந்தது அக்கண்ணுதல். அதுமட்டுமோ: இன்றைக்குத் தோன்றிய பொருள்களின் இளமையும் அதன் கண்ணே இருக்கும். "பழமையினால் சாகாத இளையவன் காண்" என்ற புரட்சிக்கவிஞர், மாணிக்கவாசகரை உணர்ந்திருக்கின்றார். இன்றைக்கும் இனி என்றைக்கும் வரப் போகிற புதுமைகளுக்கெல்லாம் புதுமையாக இருக்கும் பெருமை வாய்ந்தவனே என்று போற்றுகின்றனர். உன்னைத் தலைவனாக அடைந்த அடியவர்கள் நாங்கள். உன்னுடைய அடியார்களின் தாள் பணிவோம் என்றுரைக்கின்றனர். அடியார்க்கு நல்லார் என்பது தமிழக மறிந்த பெயராயிற்றே! தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே என்றாற்போல இறைவனின் அடியார்க்குத் தொண்டு செய்தல் இறைவனுக்கே ஆற்றும் பணிக்கு ஒப்பாகும். "நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயின் படமாடும் கோயில் பகவற்கு அங்கு ஆகும்" என்பதன்றோ திருமூலர் தவமொழி, அதுமட்டுமோ? அவர்களே எங்கள் கணவருமாவர் என்று கூறுகின்றனர். "நள்ளேன் நினதடியாரோடல்லால் நரகம் புகினும்" என்று பாடியவரன்றோ மணிவாசகப்பெருந்தகையார்! எங்கள் வாழ்க்கை சிவபரம் பொருளை நினைந்து போற்றுதற்கு வாயிலாகச் சிவனடித் தொண்டர்களையே மணப்போம் என்று கூறும் உறுதியை என்னென்பது? எம் கணவராகும் சிவனடித் தொண்டர் சொன்ன பரிசே நாம் தொழும்பு செய்வோம்; அடிமையாக நாம் அவர் இட்ட பணிகளையும் ஆற்றுவோம், இவ்வரத்தினை எங்களுக்கு நல்குதல் வேண்டும் என வேண்டுகின்றனர், இப்பாவைப்பெண்கள். "காதல் ஒருவனைக் கைப்

பிடித்து அவன் காரியம் யாவினும் கைகொடுத்து'' மாதர் அறங்கள் வளர்ப்பதுதானே வைய வாழ்வின் உயரிய நோக்கம்'. அதற்காக இரப்பதாக அமைகிறது இந்த மார்கழி நோன்பு. சமயப்பற்று நெறியில் சிறிதும் குறையாத அழுத்தமும் அதனை வாழ்நாளில் கடைக்கொண்டொழுகும் பெற்றிமையும் கொண்டவராக மகளிர் விளங்குதலை இப் பாட்டு இயம்புகின்றது.

காலதேச வர்த்தமானங்களைக் கடந்து மூப்பிளமை இல்லாத ஒரு பொருளாய் நிற்கும் இறைவனை வணங்கப் போந்த நேரிழையார், பொன், பொருள், போகம் ஆகியவற்றை வேண்டிலர். ''யாம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமும் அல்ல அருளும் அன்பும் அறனும்'' என்று பரிபாடல் கூறுவதுபோல நின்னைத் தொழுது வாழும் வாழ்வை அளிக்க வேண்டும் என்று வேண்டுகின்றனர். இறையுணர்வில் தம்மைக் கரைத்துக்கொள்ளும் ஞானியர்க்கு வீடும் வேண்டுவதில்லை, ''ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவர் வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'' என்பர் சேக்கிழார் பெருமான். ஆகவே அத்தகைய இறையன்பு வேண்டலையே தம் குறிக்கோளாகக் கேட்டனர் பாவைப் பெண்கள். முழுமையும் செம்மையும் ஒருங்கே இயல்பில் அமைந்த பரம்பொருளின் தொண்டர்கள், சார்ந்ததன் வண்ணமாகச் செம்மை பெற்றுத் திகழ்வர். அத்தகைய தலைவரைப் பாவைப்பெண்கள் அடைதற்பொருட்டு போற்றலும் வேண்டலும் இத்திருப்பாட்டின் பொருளாக அமைந்தன.

முன்னைப் பழம்பொருட்கு
முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்தும்அப் பெற்றியனே!

உன்னைப் பிரானாகப்
    பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம்
    ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர்
    ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே
    தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே
    எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும்
    இலோம் ஏலோர் எம்பாவாய்!

# பத்தாவது திருப்பாடல்

சென்ற திருப்பாட்டில் இறைவன் பழமைக்குப் பழமை யாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் திகழும் பெற்றியும் அவனை வழிபடும் பாவைப்பெண்கள் அவன் அடியார் களையே கணவராகப் பெறுதற்கு இறைவனை வேண்டும் பாங்கும் சிறப்புறக் கூறப்பெற்றன. பத்தாம் திருப்பாட்டு ''பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்'' என்று தொடங்குகிறது. இப்பாடல் இறைவனின் சர்வ வியாபகத் தன்மையை அணிநயம் தோன்ற எடுத்துக் காட்டுகிறது. அடியைத் தேடிச்சென்ற திருமாலும் அதனைக் காண முடியாது தவித்தார். காரணம் புராணங்களில் சொல்லப் பெறும் அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம். மகாதலம். பாதாளம் என்ற ஏழு வகையான உலகு அடுக்கு களைக் கடந்து சென்றாலும் அதற்கும் அடியில் பரம் பொருளின் திருவடி வியாபித்துள்ளது. எனவே மனிதனின் பௌதிக முயற்சிகளால் அத்திருவடியை அறிந்துகொள்ள முடியாது. இறைவனின் திருமுடியைக் காண்பதற்கு முயன்று சென்ற நான்முகன் பாதியளவுகூடப் பயணம் செய்ய முடியாமல் திரும்பிவிட்டான். அத்திருமுடி சர்வ அண்டங் களையும் கடந்து மேலே வியாபித்திருப்பது. மறைகள் ஓலமிட்டுத் தேடும் முடிவற்ற பொருளாக அது விளங்கு கிறது. மணிவாசகப்பெருமானே குயிற் பத்தில்,

''கீதமினிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற
தொன்மை

**ஆதிகுண மொன்றுமில்லா அந்தமிலான் வரக்கூவாய்''**

என்று சிவ பரம்பொருளின் ஆதியையும் அந்தத்தையும் எளிதில் அறியவொண்ணா ஏற்றத்தையும் குறித்துள்ளார். திருவடி என்பது திருவருளைக் குறிப்பது. திருமுடி என்பது ஞானத்தைக் குறிப்பது. உலகியல் அறிவாகிய பாச ஞானத்தையும் உயிர் வருத்தங்கள் பற்றிய அறிவாகிய பசு ஞானத்தையும் கருவியாகக்கொண்டு பரம்பொருளை அறிய முற்படுவது பேதமை என்பதைத் திருவடி தேடிய புராணச் செய்தி நமக்கு உணர்த்துகிறது. சிவஞானமாகிய பதிஞானத்தினால் மட்டுமே திருவடியை உணர்தல் முடியும் என்பது சைவ சித்தாந்தத் துணிவு. இறைவன் ஞான வடிவினன். அவ்வடிவமே அனைத்திற்கும் மணிமுடியாகத் திகழ்தலின் அதனைப் பெருமானின் திருவடியாக உபசரித்துக் கூறினார். இக்கருத்தினையே மணிவாசகப் பெருமான் இப்பாடலின் தொடக்க அடிகளில் சுட்டியுள்ளார்.

வேத விற்பன்னர்கள். விண்ணகத்தேவர்கள். மண்ணக மாந்தர்கள் ஆகியோர் அப்பெருமானைப் போற்றிப் பரவுகின்றனர். அவருடைய தொண்டர்களின் எண்ணிக்கை வரம்பற்றது. தோழம் என்ற பழந்தமிழ்ச் சொல் எண்ணற்றவர்கள் என்ற பொருளில் பேரெண்ணின் எல்லையாக வழங்கும். மணிவாசகப்பெருமான், ''ஓத உலவா ஒரு தோழந் தொண்டருளன்'' என்று சுட்டுகின்றார். தொண்டர்கள் உள்ளத்தையே கோயிலாகக் கொண்டவன் இறைவன் என்பது கருத்து.

குற்றமற்ற கோயிற் பணிப்பெண்களை இப்பொழுது பாவைப்பெண்கள் எழுப்புகின்றார்கள். அரன் பணியினை அன்புடன் ஆற்றும் பேறு பெற்ற அணுக்கத்தொண்டர்கள் ''கோயிற் பிணாப்பிள்ளைகள்'' என்று போற்றப்பெற்றனர். அவர்களை விளித்துப் பாவைப்பெண்கள், ''இறைவனுக்கு

என்று தனித்ததோர் ஊர் ஏது?. எல்லா உயிர்களுமே அவன் வியாபகமாயிற்றே! இறைவனுக்கென்று தனித்தஒரு பெயர் ஏது? எல்லாப் பேர்களிலும் அவன் வியாபித்திருக்கிறான். இறைவன் அனைவர்க்கும் பொதுவாயிருத்தலின் உறவு, அயன்மை என்ற பேதம் இல்லை '' என்ற கருத்தில் பேசு கின்றனர். இத்தகைய இறைமைக்குணங்கள் வாய்ந்த பரம் பொருளை மற்றோர் இடத்தில் மணிவாசகப் பெருமான்,

> ''ஒருநாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம்
> திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ''

என்று மகளிர் பேச்சாகவே அமைத்துப் பாடியிருத்தல் இங்கு நோக்கத்தக்கது. இறைவனின் சொரூப இலக்கணம் இப் பகுதியில் பேசப்பெறுதல் எண்ணி இன்புறத்தக்கது.

இத்தகைய பரம்பொருளை எவ்வண்ணம் பாராட்டிப் பேசுவது? வரம்பற்ற பரம்பொருளை வரம்பிற்குட்பட்ட புகழ்ச்சொற்களில் அடக்கி நிறுத்துவது நம் அன்பினைப் புலப்படுத்துமேயன்றி முடிவுபோக அப்பரம்பொருளைப் புனைந்து காட்டுதல் புலவர்க்கும் ஒண்ணாது. இக்கருத் தினையே,

> ''ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்''

என்ற கடைசியடி நமக்குக் காட்டுகிறது.

இத்திருப்பாட்டில் இறைவனின் சொரூப இலக்கணமும், தொண்டர் பெருமையும், பாடிப்பரவும் பத்திமை நெறியின் பன்மான் சிறப்பும் மணிவாசகப்பெருமானால் தெளிவுறுத்தப் பெறுதல் எண்ணி இன்புறத்தக்கது.

> பாதாளம் ஏழினுங்கீழ்
> சொற்கழிவு பாதமலர்
> போதார் புனைமுடியும்
> எல்லாப் பொருள்முடிவே!

பேதை ஒருபால்
திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும்
மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா
ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன்
கோயிற்பி ணாப்பிள்ளைகாள்!
ஏதவன்ஊர்! ஏதவன்பேர்!
ஆர்உற்றார்! ஆர்அயலார்
ஏதவனைப் பாடும்
பரிசுஏலோர் எம்பாவாய்!

# பதினோராவது திருப்பாடல்

சிவபிரானது உண்மை இயல்புகளை வினவுகின்ற பாங்கில் பாடிச் சென்ற கன்னியர்கள், பூக்கள் மலர்ந்து விளங்கும் பொய்கையினைச் சேர்கின்றனர். பளிங்குபோல், விளங்குவதாகத் துலங்கும் அக்குளத்து நீரைக் கண்டதும் அக்குளத்து நீரில் மூழ்கித் திளைத்து நீராடவேண்டுமென்ற பேரவா கன்னியர்கள் நெஞ்சில் மீதூர்ந்து நின்றது. புலர்ந்தும் புலராத அவ் வைகறை நேரத்தில் சில்லென்று குளிர்ந்த குளத்து நீரில் குதித்து நீராடவேண்டுமென்ற வேட்கை நெஞ்சில் நிறையவும், இவ்வாறு நீராடுதலுக்குக் காரணமாய் அமைந்த சிவபெருமான் திருவடிகளை முதற்கண் வழுத்துகின்றனர், நெஞ்சத்தில் நிறைந்த தங்களுடைய ஈடுபாடு வெளிப்பட 'ஆரழல் போல் செய்யா, என்று அவ் இறைவனைப் பாடிப் பரவசம் அடைகின்றனர்.

செறிந்தமைந்த நெருப்புப் போலும் செக்கச்செவேல் எனும் நிறமுடைய திருமேனி வாய்ந்தவனே; வெண்ணிறம் கொண்ட திருநீற்றைப் பூசியவனே; அருட்செல்வத்தை உடையவனாய் இருந்து அடியவர்களுக்கு அருள்பவனே; சிறிய இடையினையும் மை தீட்டிய அகன்ற கண்களையும் உடைய பெண்களில் பெருந்தக்கவராகத் திகழும் உமாதேவியாரின் கணவனே; தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவனே; என்று சிவபரம்பொருளைத் துதித்து வணங்குகின்றனர்.

சிவபெருமான் என்றதும் கன்னியர்கள் நினைவிலே, அவர்களுக்கு உடனே நினைவுக்கு வருவது அவருடைய செந்நிறமும், கழுத்தில் அமைந்துள்ள கரிய நிறமுமாகும்.

எனவேதான் மூன்றாவதாக 'ஆரழல் போற் செய்யா' என்று அவர்கள் சிவபெருமானை விளித்தனர். நெருப்பின் சிறப்புத் தன்மை அழுக்கினைச் சுட்டெரிக்கும் பாங்கினதாகும். சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாளும், 'தீயினுள் தூசாகும்' என்று தம் கவிதையில் குறிப்பிட்டுள்ளார். சிவனின் சிவந்த நிறத்தை நினைந்த கன்னியர்கள் அச் செந்நிறத் திருமேனியில் விளங்கும் திருவெண்ணீற்றைக் காண்கிறார்கள். சிவபெருமான் திருமேனி, வெண்ணீறாடி நிற்கின்றது. எனவே, 'வெண்ணீறாடி' என அழைத்தனர். அதனாலேயே, திருஞானசம்பந்தப் பெருமான்

'செய்ய மேனி வெளிய பொடிப் பூசுவர்,
சேரும் மடியார் மேல் பைய நின்றவினை பாற்றுவார்'

என்று தம் தேவாரத் திருப்பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். சிவபெருமான் செந்நிறமும், வெண்ணிறமும் கொண்டவர் மட்டும் அல்லர்; முக்தி அருளும் முழுமுதற் பொருளும் ஆவார். எனவேதான், கன்னியர்கள், 'வெண்ணீறாடி' என வழங்குவதை அடுத்து, 'செல்வா' என்றார்கள். சிவ பெருமானின் அருளுக்கு வழி உமையம்மையை நினைவு கொள்ளுதல் வேண்டும். எனவே, சிற்றிடையினையும் மையுண்ட கண்களையும் கொண்ட கன்னியர்கள் உமை. யொரு பாகனை அடைந்த உமாதேவியை, நினைக்கின்றனர். உமையம்மையை 'சிறுமருங்குல் மையார் தடங்கண் மடந்தை' என விளிக்கின்றார்கள். 'ஐயா' என அடுத்துக் கன்னியர்கள் ஆண்டவனை விளிப்பது சிவபெருமானின் தன்மையினை எடுத்துக் காட்டுவதாகும்.

இத்திருப்பாடலில் சிவபதம் அளிக்கும் சிவபெருமானை முதற்கண், 'ஆரழல்போல் செய்யா' என்றும் இரண்டாவதாக, 'வெண்ணீறாடி' என்றும், 'மூன்றாவதாக 'செல்வா'

என்றும், நான்காவதாக 'சிறுமருங்குல் மையார் தடங்கண் மடந்தை மணவாளா' என்றும், ஐந்தாவதாக 'ஐயா' என்றும் விளிக்கின்றார்கள்.

இந்தப் பொய்கையில் அக்கன்னியர்கள் நாட்காலையில் எழுந்து நீராடும் திறத்தினைக் காண்போம். வண்டுகள் அமைந்திருக்கும் பரந்த நீர்த்தடாகத்தின் நீர்நிலையில் உட்புகுந்து நீராடித் திளைக்கிறார்கள். தம் கைகளால் நீரினை 'முகேர்' என்னும் ஓசை எழும்பக் குடைந்து குடைந்து நீராடுகிறார்கள். அவர்கள் தங்களைச் 'சிவன்தன் வழியடியோம்' என்கிறார்கள். தலைமுறை தலைமுறையாகச் சிவபரம்பொருள் தொண்டு செய்யும் வழியினர் என்பதனைக் கன்னியர்கள் 'வழியடியோம் வாழ்ந்தோங்காண்' என்கிறார்கள். எத்தனை பிறவிகள் எடுத்தாலும் எம்பெருமானே எங்களை அடிமை கொண்டு ஆட்படுத்துவான் என்ற கருத்தில் இத்தொடரினை மொழிகின்றார்கள். தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமானும், 'மாதொரு பாகனார்க்கு வழிவழியடிமை செய்யும் வேதியர் குலம்' என்று நம்பி ஆரூரரைப் பெற்றெடுத்த நற்றவம் மேம்படும் தந்தையார் குலத்தினைக் குறிப்பிடுவார்.

'முகேர்' எனும் ஓசை உண்டாக நீரின் ஆழத்தில் மூழ்கி மூழ்கி எழுந்து சிவன் கழல் பாடுவதே சிறப்பு என்பதனை வைகறைப் பொழுதினில் கன்னியர் கூறி நிற்கிறார்கள். மேலும்' உம் வழியடியோம், வாழ்ந்தோம்காண்' என்னும் தொடரில் ஓர் அரிய குறிப்பு உள்ளது. இறைவன் தங்களை வாழ்விப்பான், எல்லாப் பொருளையும் வாழ்விப்பான் என்பது கன்னியர்களுடைய உட்கிடக்கை.

உயிர்களை உய்யும் வண்ணம் ஆட்கொண்டு அருளும் திறம் சிவபெருமானுக்கு இயல்பாயமைந்தது. உயிர்கள் எந்தக் குறைவிற்கும் ஆட்படாமல் காப்பாற்றவேண்டிய

பொறுப்பு, கருணையுள்ளம் கொண்ட இறைவனைச் சார்ந்த தாகும். எனவேதான், எய்யாமற் காப்பாய் எமை, எனக் கூறி முடிக்கிறார்கள்.

''மொய்யார் தடம்பொய்கை
புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து
குடைந்துன் கழல்பாடி
ஐயா! வழிஅடியோம்
வாழ்ந்தோங்காண்! ஆரழல்போற்
செய்யா! வெண் ணீறாடி!
செல்வா! சிறுமருங்குல்
மையார் தடங்கண்
மடந்தை மணவாளா!
ஐயா! நீ ஆட்கொண்
டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும்
வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய்!
எமைஏலோர் எம்பாவாய்!

# பன்னிரண்டாவது திருப்பாடல்

கன்னியர்களை வழிவழியாக அடிமை கொண்ட வள்ளலாய் விளங்குகின்றார் சிவபெருமான் என்பது முன்னைய பாட்டின் முடிந்த முடிபாகும். இளைப்பு ஏதுமின்றிக் காக்கவேண்டும் என்று கருணைப் பெருங்கடலாக விளங்கும் சிவபெருமானை வேண்டிக்கொண்ட கன்னிப் பெண்கள், இத்திருப்பாட்டில் பிறவித் துயர்கெட அருள் பாலிக்கும் அண்ணல் அச் சிவபெருமான் என்பதனைக் கூறுவாராய்,

'ஆர்த்த பிறவித்
துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்! நற் றில்லைச்சிற்
றம்பலத்தே தீயாடும்
கூத்தன்...

என்கின்றனர், நல்வினை, தீவினைகள் இருவகையாகக் குறிப்பிடப்படும். நல்வினை ஆற்றினால் பொன்னுலகு சேர்வதும், தீவினையில் திளைத்து நிற்பார், கொடிய அருநரகத்தைச் சேர்தலும் இயல்பு என்பது தமிழ் முதற்காப்பியம் கண்ட குணவாயில் கோட்டத்து அரசு துறந்து, அதே நேரத்தில் தமிழைத் துறவாமல் இருந்து தமிழ் முதற்காப்பியம் தந்த இளங்கோவடிகளின் கருத்தாகும். எழுபிறப்பு உண்டு எனத் திருவள்ளுவர் நம்புவது தமிழ்க் கொள்கையாகும். எழுமை எழுபிறப்பு என்றெல்லாம், திருவள்ளுவர் குறிப்பிடுவார்,

மணிவாசகப் பெருந்தகையார் சிவபுராணத்தில்,

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்''

என்று சுட்டுவார்.

அவரவர் செய்யும் வினைப்பயன்களைத் துய்க்கவந்த பிறவியாகிய துன்பம் என்பது 'ஆர்த்த பிறவித்துயர்' என்ற தொடரின் பொருளாகும்.

'பிறவிப் பெருங்கடல் நீத்துவர்'

என்று திருவள்ளுவர் அன்றாட வாழ்வின் துன்பங்களில் தோய்ந்திருப்பவர்களைக் குறிப்பிடுகிறார்.

''பிறந்தார் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெருபே ரின்பம்''

என்று சீத்தலைச் சாத்தனார் தம் மணிமேகலைக் காப்பியத்தில் குறிப்பிடுவார். இறைவனடி சேர்பவர் மீண்டும் பிறப்பு எடுத்து, இவ் உலகில் துன்பப்பட வேண்டியதில்லை. இறைவனடி சேராதார் பிறவிப் பெருங்கடலை நீந்தார் என்ற கருத்து குறள்வழி வெளிப்படுகின்றது. ஆயினும், சிவகதி சித்திக்கப்பெற வேண்டும் என்று பாடுபடும் சிவனடியார்கள் சிவன்கழலைச் சென்று சேருவதற்கு இந்தப் பிறவியே ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கிறது என எண்ணுவர்.

''வாய்ந்தது ஈது நந்தமக்கு ஒரு பிறவி''

என்று கருதி ''அவனருளாலே அவன்தாள்'' வணங்கவேண்டுமென்பது ஆன்றோர் அருளிய நெறியாகும். ஆண்டவன் திருவடிகளைச் சென்று சேர்வதற்குப் புறத்தூய்மையும், அகத்தூய்மையும் ஒருவருக்கு ஒருங்கே அமையப்பெற வேண்டும். உடல் தூய்மையை நீரால் அமைத்துக்கொள்ளலாம். அகத்தூய்மையை அடையும் ஆறு எது? தூய தெளிந்த நீரைப்

போன்று திகழும் சிக்பெருமான் 'தீர்த்தன்' என அழைக்கப் படுவதிலிருந்து அவன் அக இருளைப் போக்குவான் என்பது தெளிவுறும்.

''சென்றாடு தீர்த்தங்க ளானார் தாமே''

என்று திருவாலங்காட்டுத் திருத்தாண்டகம் பேசும். குளத்தில் நீராடிப் புறத்தூய்மையைப் பெற்ற கன்னியர்கள் அகத்தூய் மையும் ஒருங்கே பெறவேண்டித் தீர்த்தனாய் விளங்கும் ஈசனை நினைந்து வழிபட்டார்கள்.

''தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்''

என்று அடுத்து மொழிந்தனர். 'கோயில்' என்ற சொல் சைவர்களுக்குத் தில்லை என்று வழங்கும் சிதம்பரத்தலத் தைக் குறிக்கும். அகண்ட வெளியையே தான் கூத்தாடும் அரங்கமாகக் கொண்டு தில்லைக் கூத்தன் திருக்கூத்து நிகழ்த்துகின்றார். ஆகவே, 'நல் தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்' என்று கூறினர். பொறுக்கமுடியாத அனலைக் கையில் ஏந்தித் திருக்கூத்து நிகழ்த்துபவன் சிவன் ஆதலின் அவனைத் தீயாடும் கூத்தன் என்று விளக்கினர். தில்லைச் சிற்றம்பலத்தான் 'சாந்திக்' கூத்தினை நிகழ்த்தி இவ்வுலகத்தே தோன்றிய உயிர்களின் பிறவி வெப்பத்தினை மாற்றி, இன்பமும் அமைதியும் பெற இயங்குபவன் ஆவன். ஐம்பூதங்களையும் ஆட்படுத்தி, ஐந்தொழில்களையும் இயற்றும் இறைவன் உலக உயிர்களின் நன்மைக்காகவே இருக்கின்றான். வான், காற்று, நீர், நெருப்பு, நிலம் எனும் ஐம்பூதங்களையும் சுட்டுவான் வேண்டி அமையும் வானை யும், இறுதியில் அமையும் நிலத்தையும் 'வானும் குவலயமும்' என்று கூறி, மற்ற மூன்று பூதத்தினையும் குறிப்பால் உய்த் துணர்த்தினார், இறைவன் புரியும் ஐந்தொழில்கள் படைத் தல், காத்தல், கரத்தல், மறைத்தல், அருளல் என்பனவாகும். காத்தலில் மறைப்பும், அழித்தலில் அருளலும் அடங்கும்

என்று ஆன்றோர் மொழிவர். எனவே, காத்தல், படைத்தல், அழித்தல் எனும் முத்தொழிலையும் முறையே ஆற்றுபவன் சிவபெருமான் என்பது ஈண்டுப் பெறப்பட்டது.

ஓம் 'நமசிவாய' எனும் திருவைந்தெழுத்தினை ஓதி, கன்னியர்கள் தங்கள் கைகளில் அணிந்திருக்கும் வளையல்கள் ஒலி எழுப்பவும், இடையில் அணிந்துள்ள மேகலைகள், பேரொலியைப் பிறப்பிக்கவும், பூக்களால் புனையப்பட்ட தங்கள் கூந்தலின் மேல் வண்டுகள் மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்யவும், செந்தாமரை மலர்கள் செக்கச் செவேலெனப் பூத்துக்குலுங்கும் பொய்கையில் மூழ்கி நீரினுள் துளைந்து துளைந்து ஆடிச் சிவபிரானது அழகிய திருவடிகளை வழுத்தி, அவனருளாலே அவன்தாள் அடையவேண்டுமென்று கன்னிப் பெண்கள் நீராடிய பாங்கினை அத்திருப்பாட்டு உணர்த்து கின்றது.

"ஆர்த்த பிறவித்
 துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்! நற் றில்லைச்சிற்
 றம்புலத்தே தீயாடும்
கூத்தன்! இவ் வானும்
 குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும்
 கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி
 வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய
 அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை
 குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர்
 ஆடேலோர் எம்பாவாய்!

# பதின்மூன்றாவது திருப்பாடல்

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தகுடி' என்று தமிழ்க் குடியின் பழமையினையும், பெருமையினையும் புறப்பொருள் வெண்பாமாலை தந்த சேரன் ஐயனாரிதனார் மொழிவார். வரலாற்றின் தொன்மைக்கு இலக்காகவுள்ள இனமாகப் பேசப்படுகின்ற தமிழினம் தொன்றுதொட்டே இயற்கையில் ஈடுபாடு கொண்டு திளைத்தது. காலப்பழமை வாய்ந்த தொல்காப்பியம், முதற்பொருள் என்று நிலத்தையும், பொழுதினையும் சுட்டுவதானது இயற்கைக்கு ஏற்றம் தருகின்றது. இயற்கையின் இனிய பின்னணியில் மனித வாழ்வு சிறந்திருந்தது. இயற்கை பூத்துக்குலுங்கும் தமிழகத்தில் எளிலார்ந்த இயற்கைக் காட்சிகளைக் காலந்தோறும் வாழ்ந்த கவிஞர்கள் சிறப்பாக வருணித்துப் போந்தனர். திருஞானசம்பந்தரின் திருவையாற்றுப் பதிகம் இதற்குச்சான்று பகரும்.

''பைங்குவளைக் கார்மலரால்
செங்கமலப் பைம்போதால்''

எனத் தொடங்கும் இத்திருப்பாட்டு, தொடக்கத்திலேயே இனிய இயற்கை வருணனையினைக் கொண்டு நிற்கின்றது. இந்தத் தொடக்க அடியே உமாதேவியாரைக் குறிப்பது போல் அமைந்துள்ளது. இந்தத் தொடரே முரண்தொடை எனும் இலக்கிய நயத்திற்கு இடமாக அமைந்துள்ளது. பசுமை தங்கிய குவளை மலர் போன்ற கருமையும் அழகும் பொதிந்த கண்கள் உமையம்மைக்கு உரிமையுடையன வாகும். உமாதேவியாரின் திருமுகமோவெனில் செந்தாமரை மலரின் அழகினை நினைவூட்டுகின்றது.

பிராட்டியாரின் கைகளில் வளையல்கள் குலுங்குகின்றன. பின்னிய பாம்புகள் அணிகலன்களாக அமைந்துள்ளன. மும்மலம் அகலவேண்டும் எனும் நோக்கில் முறையாக வந்த இறைவியாம் உமாதேவியையும், இறைவனாம் சிவபெருமானையும் வேண்டி வரம்பெறும் நோக்கோடு வந்துள்ள கன்னிப்பெண்கள் தம் பெருத்த மடுவினை உமாதேவியோடு ஒப்பிட்டுக் காண்கிறார்கள்.

இதே தொடர் இறைவனுக்கும் பொருந்துவதாக உள்ளது. இறைவனின் திருக்கழுத்து, குவளை போன்று கரிய நிறம் அமைந்த திருநீலகண்டமாகத் திகழ்கின்றது. செந்தாமரை போலும், செம்மேனியுடையவனாகக் காட்சி தருகின்றார். உடலில் வெண்ணீறு பூசி, பின்னிய பாம்புகள் கழுத்தில் தொங்க, தன்னை அண்டிவந்த உயிர்களின் மும்மலத்தினை அழித்து வீடுபேறு நல்கும் பெருந்தகையாக அச்சிவபெருமான் தோற்றமளிக்கின்றார்.

உமாதேவி, உமைகேள்வன் சிவன் ஆகிய இருவரையுமே நினைவூட்டும் போக்கில் இந்த வருணனை அமைந்து இருப்பதனை ஆழ்ந்து பார்த்தால் விளங்கும். குவளைபோல் கருமேனியுடைய திருமேனி பெற்றவர் பிராட்டியார். சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி அம்மான் தன்னையும் இவ்வருணனைகள் சுட்டுகின்றன. கைகளில் வளையல்களின் ஈட்டம் என்பதினாலே உமாதேவியினையும், பின்னிய பாம்புகளை அணிகலன்களாக அணிந்துகொண்ட பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் சிவபெருமான் என்பதனையும் இப் பாட்டின் தொடக்கம் தெளிவுறுத்துகின்றது. தாங்கள் நீராடும் பொய்கை, பிராட்டியாரையும், பிரானாரையும் ஒருசேர ஒத்து விளங்குகின்றது என்பது கன்னியர்கள் துணிபாகும்.

—பா. 4

உமையம்மையும் சிவபரம்பொருளும் ஒத்துக் காணப் படுகின்ற மடுவில் புகுந்து தாவித்தாவி, நீந்தி, சங்கு வளையல்கள் ஒலி செய்ய, காற்சிலம்புகள் பேரொலி எழுப்ப, நீராடுவதனால் நீர்மட்டம் மேலும் கீழுமாய் அலைபாய அக்கன்னியர்கள் மகிழ்ச்சியுடன் நீராடுகிறார்கள்.

அனைத்துப் பொருள்களிலும் நீக்கமற நிறைந் திருக்கும் இறைவனைப் பொய்கை மடுவிலும் கண்டு நீராடிய பெண்களின் சிறப்பினை இத்திருப்பாட்டு நவில்கின்றது.

''பைங்குவளைக் கார்மலரால்
செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால்
பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு
வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும்
எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற்
புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச்
சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக்
குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்
தாடேலோர் எம்பாவாய்''

# பதினான்காவது திருப்பாடல்

பதின்மூன்றாவது திருப்பாட்டில் வைகறையில் துயிலெழுந்து நீராட நீர் நிலைகளை நோக்கிச் சென்ற கன்னியர்கள் தாமரைத் தடாகத்தில் பாய்ந்து பாய்ந்து முகேரென்னக் குடைந்து குடைந்து சிவன்கழலே சிந்திக்கும் பான்மையராய் விளங்கிய திறத்தினை மணிவாசகர் குறிப்பிட்டார். இத்திருப்பாட்டில் கன்னிப் பெண்கள் தங்கள் உடம்பின் பல்வேறு இடங்களிலும் அணிந்திருந்த அணிகலன்களைக் குறிப்பிடுவார் போலப் பாட்டின் தொடக்கத்திலேயே

'காதார் குழையாட'

என்று தொடங்கினார்.

முதல் தொடர் 'காதார் குழை' என்பதாகும். 'குழை' என்பது மகளிர் காதுகளில் அணியும் ஓர் அணியாகும். தொடக்க காலத்தில் ஓலையால் அமைந்ததாக இருந்த இக்குழை, காலப்போக்கில் பொன்னாக மாறிப் போந்தது. 'குழை' என்ற சொல் தளிர்க்கும் இளந்தளிரைக் குறிக்கும். இளம் தளிர் போலும் குழையினைத் தம் காதுகளில் அணிந்திருந்த கன்னியர்கள், அக் குழை அசைந்து ஆடும் நிலையில் பொய்கையிலே நீராடினார்கள்.

இரண்டாவது தொடர் 'பைம்பூண் கலனாட' என்பதாகும். அக்காலத்தில் பசிய பொன்னாலாகிய அணிகலன் 'பைம்பூண்' எனப்பட்டது. நீராடுகின்ற பொழுதும் தாங்கள் அணிந்திருந்த பொற்கலன்களை நீக்கவில்லை என்பது அம்மக்களின் செல்வச் செழிப்பை எடுத்துக்காட்டுவதாகும். குழை ஆடியபொழுது கன்னியர்களின் செவியும், தலையும் அதைத் தாங்கி நிற்கும் கழுத்தும் அசைந்தன என்பது

முதற்கண் பெறப்பட்டது. இப்பொழுது அவர்கள் உடல் உறுப்புகளில் அணிந்திருந்த அணிகலன்களும் அசைந்தன என்று கூறப்பட்டது. மூன்றாவது தொடர் 'கோதை குழலாட' என்பதாகும். தலை அசைந்த காரணத்தால் அக்கரிய நெடிய கூந்தலும் அசைந்தது. நான்காவது தொடர் 'வண்டின் குழாமாட' எனக் கிளத்தப்பட்டுள்ளது. அசையாத கூந்தலில் இதுகாறும் தங்கிக் கூந்தலில் சூடப்பெற்றிருந்த பூக்களில் அமைதியாக இருந்து தேனை உண்ட வண்டின் கூட்டங்கள் தேனாகிய மது உண்ட மயக்கத்தில் உறங்கிக் கிடந்தன. முதற்கண் காதில் அசைவும், அதனை அடுத்துத் தலையிலும், கழுத்திலும், உடல் உறுப்புகளிலும் எழுந்த அசைவுகள் கூந்தலை அசையச் செய்து அங்கே குடிகொண்டு இருந்த வண்டுக் கூட்டங்களையும் அசையவைத்தது. 'வண்டின் குழாமாட' என்று நான்காவது தொடர் நவிலப் பட்டது.

காதார் குழையாட, பைம்பூண் கலனாட, கோதை குழலாட, வண்டின் குழாமாட என்று நான்கு இடங்களில் இத்திருப்பாட்டில் ஆட, ஆட என்ற சொல் அமைந்துள்ளமை அறிந்து இன்புறத்தக்கது.

இனி, 'ஆடி' என்ற சொல் வருகின்றது. 'சீதப் புனலாடி' என்ற தொடர் குளிர்ந்த நீர் நிலையில் கன்னியர்கள் நீராடுவதனைப் புலப்படுத்துகின்றது. சைவ சித்தாந்திகள் இவ்விடத்தில் வேறொரு விளக்கத்தினையும் தருவர்.

> "கேட்டலுடன் சிந்தித்தல் நிட்டை கிளத்தலென
> ஈரிரண்டாம் கிளக்கின் ஞானம்"
>
> —சுபக்கம்: 276

எனும் சிவஞான சித்தியார்ப் பாடலையும் கூறுவர், சிவஞான சித்தியாரின் சுபக்கப்பாடல் கொண்டு காது கேட்டலையும்,

பைம்பூண் கலன் சித்தித்தலையும், வண்டின் குழாம் நிட்டை-யினையும் குறிப்பாற் புலப்படுத்தி நிற்கின்றன என்பர்.

இனி, குளிர்ந்த நீரில் குளித்தெழுந்த கன்னிப் பெண்கள் சிற்றம்பலத்தைப் பாடினார்கள். அடுத்து நான்மறையும் பொருளாய் அமைந்த புண்ணியனின் புகழ்ப்பாடலைப் பாடினார்கள். அதன்பின்னர் புகழ்ப்பாடலால் சிறப்பித்துப் பேசப்பெறும் பொருளாய் விளங்குகின்ற திறத்தைப் பாடினார்கள்; பின்னர் ஒளி வடிவமாய்த் திகழும் சிவபெருமானது சிறந்த பண்புகளைப் பாடினார்கள்.

சிவனென்னும் நாமம் தனக்கே உரிய செம்மேனி அம்மானாம் சிவபெருமானின் கொன்றை மாலையைப் பாடினார்கள். பின்னர், சிவன் உலகில் பிறந்த உயிர்களுக் கெல்லாம் ஆதியாய் அமைந்துள்ள தன்மையினைப் பாடினார்கள். பின்னர் இவ்வுலகப் பொருள்கள் அனைத்திற்கும் முடிவிடமாய் உள்ள அவனின் தன்மையைப் பாடினார்கள். இதனையே திருவெம்பாவை, 'சீதப் புனலாடி' 'சிற்றம் பலம்பாடி', 'வேதப் பொருள்பாடி', 'அப்பொருளா மாபாடி' 'சோதி திறம்பாடி', 'அந்தமா மாபாடி', என்று குறிப்பிட்டுள்ளது.

திருப்பாட்டின் இறுதியில், இறைவியின் திருவடி மலர்களின் பெருமையைப் பாடுகிறார். உலகியலில் வெறுப்புத் தோன்றுமாறு செய்வித்து வேறுபடுத்தி, அவ் உயிர்களுக்குச் சிவஞான அமிர்தினை ஊட்டிப் பாதுகாத்துச் சிறப்புறத் துலங்கும் வளையல்களை அணிந்த கைகளை உடைய உமா தேவியின் திருவடிப் பெருமை பேசி நீராடுவோம் என்று கன்னிப் பெண்கள் களிப்படைகின்றனர்.

ஞானம் வந்தால் பிறவி வெப்பத்தினை அகலச் செய்ய முனையும் போக்கு காணப்பெறும். முதற்படியாக, குளிர்ந்த குளத்தில் குதித்து எழுகின்றனர். அடுத்து, சிவன் கழலே

சிந்திக்கும் பான்மையராய்ச் சிற்றம்பலத்தைப் பாடி அங்கு முழுமுதற் பொருளாய் முகிழ்த்துள்ள எம்பெருமானைப் பாடிப் பரவுகின்றனர். முதலும் முடிவும் அற்றுத் திகழும் இறைவன் உயிர்களை உய்விப்பான் வேண்டி அவ்வுயிர்களுக்கு உலகியல்பில் ஒரு வெறுப்பு வருமாறு செய்வித்து, துன்பக் கடலினின்றும் தூக்கிக் கரை சேர்த்து, "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என உயிர்கள் நினைக்கும் வண்ணம் அமைத்துக் காட்டுவது அலகிலாத அவன் விளையாட்டினையும் அருள்மயமான அவனுடைய அன்புப் பெருக்கினையும் ஒருங்கே புலப்படுத்துவனவாகும்.

"காதார் குழையாடப்
 பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட
 வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச்
 சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி
 அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச்
 சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி
 அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை
 வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி
 ஆடேலோர் எம்பாவாய்!

# பதினைந்தாவது திருப்பாடல்

சென்ற திருப்பாட்டில் இறைவன் புகழ் பேசப்பெற்று, அவ் இறைவனுடைய திருவடிகளைச் சென்று சேருவதற்கு இறைவியின் அழகொளிரும் திருப்பாதங்களைப் பாடிப்பரவு வதே பயன்பெறும் வழி எனப் பகரப்பட்டது. இத்திருப் பாடலில் தலைவன் தாளினையே தலைப்பட்டுவிட்ட கன்னியருள் ஒருத்தியின் சொல்லும் செயலும் எவ்வாறு தோற்றமளித்தன என்பதனை மணிவாசகப் பெருந்தகையார் மனமுருகிப் புலப்படுத்துகின்யார்.

'வார் உருவப் பூண்முலையீர்' என்பது விளி. மார்புக் கச்சினை உடைய அழகிய அணிகலன்கள் அணிந்த நகில் களை உடைய பெண்களே! என்பது இந்த விளியின் வெளிப் படையான பொருளாகும். 'வார் உருவ' என்ற தொடரால் இக்கன்னிப் பெண் மணக்கும் பருவத்தினைப் பெற்றிருக் கிறாள் என்பது பெறப்படும். 'பூண் முலையீர்' என்ற சொல் அன்னையின் அருளை-பாலுக்கு அழும் குழவிக்குத் தாயாகத் தலையளி செய்து, பாலூட்டிப் புரக்கும் பான்மையினைப் புலப்படுத்தி நிற்கின்றது.

தம் தோழியரோடு உரையாடலினை மேற்கொள்ளும் ஒவ்வொரு சமயத்திலும் தமது தலைவனுடைய புகழினைப் பன்முறை சொல்லிச் சொல்லி வாயாடிக்கொண்டே யிருப்பாள். ஒருமுறையோடு நிறுத்தாது பன்னிப் பன்னிப் பல புகழ்மொழிகளைப் புகல்வாள். இவ்வுலகில் வாழும் உயிரினங்கள் துன்பப்படுவதற்கெல்லாம் அகந்தையே என்று குறிப்பிட்டுவிட்டு, இறைவன் தம்மையும் தம்மோடு இயைந்த ஏனைய பொருள்களையும் உடையவனாகத்

திகழ்கின்றான் என்றும் அனுபவப் பாடத்தால் இறைவனே தமக்குக் கதியாவான் என்ற உண்மையினைத் தெரிந்து கொண்டிருப்பதாகவும், அதனால் 'ஒரொருகால் எம்பெருமான் என்றென்றே' என்று வழுத்தியதாகவும் குறிப்பிடுகின்றார்.

'ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே'

என்று திருஞானசம்பந்தப் பெருமான் தம்முடைய தேவாரத் திருப்பதிகத்தில் சிறப்புறப் புகன்றுள்ளார். உலகில் தோற்றம் கொண்ட உயிர்கள் அனைத்தும் தடையேதுமின்றி இடையறாது சிவபெருமானது திருப்புகழையே ஓதவேண்டு மென்பது இதனால் புலப்படுகின்றது. இறைவனைத் தலைவன் என்று நினைவுபடுத்திக்கொண்ட பாங்காலும், அப்புகழ்சேர்ந்த புண்ணியனின் திருக்கல்யாண குணங்களை வாய் ஓயாது அரற்றிய காரணத்தாலும், அக் கன்னியின் மனம் களிகூர்ந்தது. இதனாலே 'சித்தம் களிகூர' என்றார். தன்னைச் சிவனிடத்தே முற்றிலுமாக அடைக்கலப்படுத்தி விட்டாள். ஆதலின் மற்றத் தேவரை மதியாத நிலைக்குத் தான் சென்று சேர்ந்தாள் என்பதனை 'விண்ணோரைத் தான் பணியாள்' என்ற தொடர் எடுத்துக்காட்டுகின்றது. அடைக்கலம் என்று வந்தவரை ,உன்வரவு அறிவேன் நீ அஞ்சாதே' என்று அருட்சொற்கள் கூறி அடிமைத் திறம் கொள்ளும் அவ் ஆண்டவனின் திருவடிகளை வழுத்தும் நிலையில் வாய் ஓயாது ஈடுபடவேண்டுமென்ற உள்ளக் கிடக்கை இதனால் புலப்படுத்தப்படுகின்றது. பித்துப் பிடித்த நிலையில் நம்மைச் சிவனன்றி வேறொருவர் ஆட்கொண்டு அருளமுடியாது என்று அவன் கருணையினைப் பாடிப் பரவசமுறுகிறாள் கன்னியருள் ஒருத்தி. இந்தப் பாடல்

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம்கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே

எனும் திருநாவுக்கரசர் தம் திருத்தாண்டகத் திருப்பாடலை நினைவுறுத்துவதோடு,

"சிந்தனை நின்தனக்காக்கி நாயினேன்தன்
கண்ணிணை நின்திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குஉன்
மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனியனேற்கே"

எனும் மணிவாசகப் பெருந்தகையாரின் திருவாசகத் திருச்சதகப் பாடலையும் நினைவூட்டுகின்றது.

எனவே, அரசனாக, தன்னை அடைக்கலம் என்று வந்தவர்களை ஆட்செய்யும் பெருமானாக, தம் புகழ்பாடிப் பித்தேறியவர்களை வாழ்விக்கும் பெருமானாக, ஞான வடிவினனாக எல்லாப் பொருள்களிலும் நீக்கமற நிறைந் திருக்கின்ற பரம்பொருளாகச் சிவன் விளங்குவதும், அவனுடைய திருவடிகளை வாயாரப் பாடி அழகாக விளக்கு வதும் மணம் கொண்டு கமழுவதுமாகத் துலங்கும் தாமரைத் தடாகத்தின் இனிய குளிர்ந்த நீரில் குளித்துத் திளைத்து, தாவித்தாவி நீராடுவோமாக என்று கன்னிப் பெண் ஒருத்தி

தான் பெற்ற இன்ப அனுபவத்தினை, மற்றவர்களிடம் கூறிக் கொள்ளும் பாங்கில் இத்திருப்பாடல் அமைந்துள்ளது.

''ஒரொருகால் எம்பெருமான்
என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள்
சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா
நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள்
விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே
பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம்
ஆட்கொள்ளும் வித்தகர்தான்
வாருருவப் பூண்முலையீர்!
வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந் (து)
ஆடேலோர் எம்பாவாய்!

# பதினாறாவது திருப்பாடல்

இறையருள் நிலை இதுவென்றுகூறியருளிய மணிவாசகப் பெருந்தகையார், 'முன்னிக் கடலைச் சுருக்கி' எனத் தொடங்கும் இத்திருப்பாட்டில் சிவானுபவ நிலைக்குக் காரணமாகத் திகழ்வது இறைவன் தன் கணக்கிலாத் திருவருளே என்று கூறி, அத்திருவருள் உயிர்களுக்குக் கிட்டும் நிலையினை மழையெனும் எடுத்துக்காட்டுத் தந்து விளக்கு கின்றார்.

கன்னியர்கள் முதலில் மழை மேகத்தினை வாழ்த்து கிறார்கள். ''மழையே! கடலை முன்னிச் சுருக்கி எழுந்து உடையாள் என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையான் இட்டு இடையின்மின்னிப் பொலிந்து, எம்பிராட்டி திருவடிமேல் பொன்னம் சிலம்பு இன் சிலம்பி, திருப்புருவம் என்ன சிலை குலவி, நம் தம்மை ஆளுடையான் தன்னில் பிரிவிலா எம் கோமான் அவள் அன்பர்க்குள் நமக்கும் முன் முன்னிச் சுரக்கும் இன் அருள் என்னப் பொழியாய்'' என வேண்டுகின்றனர்.

சிவனார் திருவடிகளை வாயாரப் புகழ்ந்து பாடி நீராடு கின்ற கன்னியர்கள் தடாகத்து நீரைக் கண்டு, அது மழை பொழிந்ததன் பயனால் வாய்த்தது என்று கருதி, அதனைச் சிவனும் உமையும் திருவருளைச் சொரிந்து நிற்கின்ற தன்மையாக நீரைப் பொழிவாய் என்று போற்றத் தொடங்கி, முதற்கண் மழையை விளிப்பாராய் 'மழையே' என்றார். ஈண்டு மழை என்பது ஆகுபெயராய் மேகத்தை உணர்த் தியது. மேகத்தை விளித்த அவர், அதன் படிப்படியான செயல்களைத் தொடர்ந்து சிந்திப்பாராய் வெண்முகிலாகத்

தொடக்கத்தில் துலங்கிய அம்மேகம், கடலைச் சென்றடைந்து நீரை முகந்து கொண்டு வானிடை வலமாக எழுந்த பொழுது, கருநிறம் பெற்று மழைமேகம் ஆன நிலையினைக் குறிப்பிடுவார் போன்று, 'முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து உடையாள் என்னத்' திகழ்ந்தது என்றார். உமாதேவியாரின் திருமேனி கருநிறத்ததாயின் கடலில் நீர் முகந்த மேகம் வானிடை எழுந்துபோது கருநிறம் பெற்று மழைமேகம் ஆயினமையை உவமை கூறினார். திருவிளையாடற்புராணத்திலும்,

> **தெய்வநாயகன் நீறணி மேனிபோற் சென்று**
> **பௌவம் ஏய்ந்து உமை மேனிபோற் பசந்து பல்லுயிர்க்கும்**
> **எவ்வ மாற்றுவான் கரந்திடும் இன்னருளென**
> **கௌவை நீர் சுரந்தெழுந்தன கனைகுரன் மேகம்**

(திருநாட்டுப் படலம் : 2)

என்று குறிப்பிடுவதும் ஒப்பு நோக்கற்குரியது. மேலே வான வீதியில் எழுந்த மேகம் மின்னலை உமிழ்ந்தது 'எம்மை ஆளுடையாள் இட்டிடையின் மின்னிப் பொலிந்து' என்றார்கள். சிற்றிடை மின்னலின் கீற்றுக்கு உவமிக்கப் படுதல் மரபு. மின்னல் மின்னிய பிறகு இடி இடித்தல் வழக்காதலின், எம்பிராட்டி திருவடிமேற் 'பொன்னஞ் சிலம்பிற் சிலம்பி' என்றார்கள். உமாதேவியார் கால்களில் அணியும் பொற்— சிலம்புகள் ஒலிப்பன போல இடி இடித்தது என்றனர். இவ்வாறு மழைக்குரிய அறிகுறிகள் வானிடைத் தோன்றும்பொழுது, வானவில் தோன்றுவதுண்டு. அதுவும் தோன்றியது என்று குறிப்பிடும் போக்கில் 'திருப்புருவம் என்னச் சிலை குலவி' என்றார். உமாதேவியாரின் திருப் புருவங்கள் போலும் வானவில் வானிற் றோன்றியது என்பது குறிப்பு. பின்னர் மழை பொழிவதனைச் சிவனாரும் உமாதேவியாரும் தம்மை வந்தித்து வாரம் காட்டி வழிபடும்

அடியவர்களுக்கு அருள் பாலிக்கும் திறம் ஒக்கும் என்பர் நம்தம் 'ஆளுடையாள் தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கும் முன்னியவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே என்னப் பொழியாய்' என்றனர்.

இக்கன்னியர்கள் உமாதேவியாரை 'நந்தம்மை யாளுடையாள்' என நவின்றனர். 'உடையாள் தன்னிற் பிரிவிலா எங்கோமான்' என்பது, 'உண்ணாமுலை உமையாளொடு உடனாகிய ஒருவன்' என்றும், 'வண்டார் குழல் அரிவையொடு பிரியா வகைபாகம் பெண்தான் மிகவானான்' என்றும் திருஞானசம்பந்தர் (வேணிபுரப்பதிகம்1)' கூறியுள்ளமை கொண்டு அறியலாம். மேலும் மணிவாசகரே கோயில் மூத்த திருப்பதிகத்தில் (1) 'உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீ இருத்தி' என்றும் குறிப்பிட்டுள்ளதனால் உமையொடு உடனுறையும் இறைவன் திறம் காணப் பெற்றோம்.

இத்திருப்பாட்டு, பாவைப்பாட்டின் உறுப்பாயுள்ள மழை வேண்டுதலைக் குறித்து நின்றதாகும். இத்திருப் பாட்டில் உமாதேவியாரை உடையாள், எம்மை யாளுடையாள், எம்பிராட்டி, நந்தம்மையாளுடையாள், அவள் என ஐமுறையாகப் பெண்கள் குறிப்பிட்டுள்ளனர். ஐந்து வகையாக இறைவி குறிக்கப்படுவது அவள் ஐந்து சக்திகளாக அமைந்து உயிர்களுக்குப் பேரின்பத்தைக் கூட்டுதற் பொருட்டே என்பர். உலகின் நலம் குறித்து மழை பொழிவது போல, உயிர்கள் நலம் குறித்து அருள் பொழிய வேண்டும் என்று ஆண்டவனைக் கன்னியர் வேண்டினர் என்று கொள்ளலாம்.

அருளே யுலகெல்லாம் ஆள்விப்பது ஈசன்
அருளே பிறப்பறுப்ப தானால் —அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ தெனக்கு

என்ற காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதிப் பாடல் (9) இக்கருத்தை உணர்த்தும். மழை வேட்டலைக் குறிக்கும் ஆண்டாள் திருப்பாவைத் திருப்பாட்டொன்றும் ஈண்டுக் கருதத்தக்கதாகும்.

ஆழி மழைக்கண்ணா ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுட் புக்குமுகந்து கொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடை பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சாரங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகிற் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்து ஏலோர் எம்பாவாய் (4)

திருவெம்பாவைப் பாடலைக் காண்போம்.

முன்னிக் கடலைச்
சுருக்கி எழுந்துடையான்
என்னத் திகழ்ந்தெம்மை
ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம்
பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற்
சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி
நம்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா
எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவன்நமக்கு
முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய்
மழையேலோர் எம்பாவாய்!

# பதினேழாவது திருப்பாடல்

இறைவி இறைவர்களது திருவருள் போன்று மழை பொழியுமாறு கன்னியர்கள் வேண்டினர். திருப்பாட்டில் இறைவி உயிர்களின் குற்றங்களை நீக்குதலும், இறைவன் அவைகள் ஈடேற்றம் பெற அருளும் திறமும் உணர்த்தப் படுகின்றன எனலாம். மழையை வேண்டிநின்ற கன்னியர், தங்கள் பெண் குலத்திற்குத் தனி நாயகியாகத் திகழும் உமாதேவியைக் கருத்திற் கொள்வாராய் 'கொங்குண் கருங் குழலி' எனத் தொடங்கினர்.

"மணம் மண்டிக்கிடக்கும் கரு நிறம் வாய்ந்த கூந்தலை யுடைய உமையம்மையே! சிவந்த கண்ணையுடைய திருமாலி னிடத்தும், நான்கு திருமுகங்களையுடைய படைப்புக் கடவுளாம் பிரமனிடத்தும், இந்திரன் முதலான தேவர்க ளிடத்தும், இன்னும் பிறிதாகவுள்ள அண்டங்களிலுள்ள உயிர்களிடத்தும், இல்லாததாகிய ஒப்பற்ற பேரின்பத்தை நம்மிடத்தில் கொண்டு கூட்ட, நம்மைக் குற்றங்களினின்றும் நீக்குதலும், இவ்வுலகில் நம் வீடுகளாகிய நெஞ்சங்கள் தோறும் எழுந்தருளி, தன் சிவந்த தாமரை மலரையொத்த அழகிய திருவடியைக் கொடுத்து நிலவுமாறு அருளுகின்ற வீரனாயும், அருள் பார்வை முற்றிலும் கொண்ட அரசனா யும், அவன் வழிவழி அடிமைகளாகிய எங்களுக்குத் தெவிட் டாத அமுதமாயும், நம் தலைவனாயுமுள்ள இறைவனை நன்மை பயக்குமாறு பாடி, தாமரை மலர்கள் நிறைந்து தோன்றும் தெளிந்த நீரையுடைய பொய்கையில் தாவித் திளைத்து நீராடுவோமாக' என்று கன்னியர்கள் கூறினர்.

இறைவன் அருளுகின்ற இன்பம் வேறு எவராலும் தர வொண்ணாத இன்பம் என்று குறிப்பிடும் நிலையில் 'எங்கும்

இலாததோர் இன்பம்' என்றனர். 'செங்கண் அவன் செங்கணவன் என்று நின்றது. சிவந்த கண்களையுடையவன் திருமால் ஆவன். கம்பநாடரும் இராமனைக் குறிக்குமிடத்து 'செங்கணும் கரிய கோல மேனியாகி எங்கணும் தோன்று கின்றார் எனைவரோ இராமன் என்பார்'' என்று குறிப் பிடுவர். கண் அவன் கணவன் எனக் குறுகி நின்றது. செந் தாமரைக் கண்ணுடையவன் திருமாலாதலின்'செங்கணவன்' என்றார். நான்கு திசைகளிலும் பார்க்கும் நான்குமுகங் களைக் கொண்டவனாதலின் பிரமன் திசைமுகன் எனப் பட்டான். இந்திரன் முதலானவர்களைக் குறிக்கத் தேவர்கள் என்றனர். 'எங்கும்' என்ற சொல் தேவருலகம் தவிர்த்துப் பிற உலகங்களையும் குறித்து நின்றது. இயலாத தோர் இன்பம் ஒப்பற்ற இன்பமாம் பரமன் அளிக்கும் பேரின் பத்தைச் சுட்டியதாகும்.

எங்கும் கிடைக்காத பேரின்பம் நமக்குக் கிடைக்க வேண்டுமென்றால் முதலில் நம் மனமாசுகள் நீங்குதல் வேண்டும். மனமாசுகள் நீங்கிய உள்ளத்தைத் தான் இறைவன் குடிகொண்டு எழுந்தருளும் கோயிலாகக் கொள் வான். இறைவன் நம்மீது கொண்ட கருணையினால் தான் இவ்வாறு எழுந்தருளுகின்றான் என்பதனை மாணிக்க வாசகரே,

> பத்தர் சூழ்ப் பராபரன் பாரில்வந்து பார்ப்பான் எனச்
> சித்தர் சூழ்ச் சிவபிரான் தில்லை மூதூர் நடஞ்செய்வான்
> எத்தனாகி வந்து இல்புகுந்து எமைஆளுங் கொண்டு
> எம்பணி கொள்வான்
> வைத்த மாமலர்ச் சேவடிக்கண் நம்சென்னி மன்னி மலருமே
> (சென்னிப்பத்து:4)

என்பதனால் விளங்கும். ''கும்பிடுவான் யாரென்று தேடுகின் றான் கோவிந்தன்'' என்பது திவ்வியப் பிரபந்தத் தொடர்.

எவ்வளவுதான் முயன்றாலும் எளிதில் அவன் திருவருளைப் பெற்று உய்யுமாறில்லை. அவனருளைப் பெறுவதற்கும் அவனருள் வேண்டும். அவன் அடியினைப் பரவுவதற்கும் அவனருள் வேண்டும். இதனையே 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்பர் மணிவாசகர் சிவபுராணத்தில். நம் மனத்தே அவன்தன் ஒப்பற்ற திருவடிகளைப் பொருந்தச் செய்தல் என்பது அருமையுடைய செயலாதலின், அதனை வெற்றிகரமாகச் செய்து முடித்த சிவனைச் 'சேவகன்' என்றார். சேவகன் என்ற சொல் சிறந்த வீரன் என்னும் பொருளைத் தருவதாகும்.

ஆவகை நாமும் வந்து அன்பர் தம்மோடு
　　ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலும் கண்டறியாச்
　　செம்மலர் பாதங்கள் காட்டும் செல்வச்
சேவலம் ஏந்திய வெல்கொடியான்
　　சிவபெருமான் புரம்செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
　　செம்பொற்செய் சுண்ணம் இடித்து நாமே

(திருப்பொற்சுண்ணம் : 16)

என்னும் மணிவாசகரது திருப்பொற்சுண்ணப்பாட்டு, 'சேவகன்' எனச் சிவனாரைச் சித்திரிப்பது காண்க. தாமாகவே வந்து திருவடி அருளுகின்ற கருணையைப் போற்றுவார் 'அங்கண் அரசை' என்றனர், அரசன் தன் மக்களைக் காப்பதுபோல ஈண்டு அரசனாகிய சிவன் அனைத்து அண்டங்களிலுமுள்ள உயிர்களையும் காக்கும் தலைவனாக உள்ளமையால் 'அங்கண் அரசு' என்றனர். அடுத்துக் காத்தலோடன்றி அடியவர்களுக்கு அமுதமாய் நின்று பேரின்பம் நுகருமாறு செய்தலின் 'அடியோங்கட்கு ஆரமுதே' என்றனர். நமக்கு

நன்னலம் நல்குகின்ற இறைவனைப் பாடுதலே கடன் எனக் கருதுவார் 'நலந்திகழப் பாடி' என்றனர். இறைவன் திருவடிகளை உள்ளக்கிழியில் உருவெழுதி வைக்க வேண்டும் என்று அப்பர் பெருமானும் சுட்டியமை ஈண்டுக் கருதத்தக்கது.

வெம்மை நமன்றமர் மிக்கு விரவி விழுப்பதன்முன்
இம்மை யுன்றாள் என்றன் நெஞ்சத்து எழுதி
வையீங்கிதழில்
அம்மையடியேற் கருளுதி என்பதிங்கு ஆரறிவார்
செம்மைதரு சத்திமுற்றத்துறையுஞ் சிவக் கொழுந்தே.
(திருச்சத்திமுற்றம் : 6)

கன்னியர்கள் இவ்வாறு சிவன் கழல் போற்றித் தெள்ளிய நீரில் நீராடி மகிழ்ந்தனர்.

செங்க ணவன்பால்
திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இல்லாததோர்
இன்பம் நம் பாலதாகி
கொங்குண் கருங்குழலி
நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள்
தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம்
தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை
அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப்
பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்(து)
ஆடேலோர் எம்பாவாய்!

# பதினெட்டாவது திருப்பாடல்

திருவண்ணாமலைத் திருக்கோயில் தனிச்சிறப்பு வாய்ந்த தாகும். 'நினைக்க முத்தி தரும் அண்ணாமலை' என்பர். "ஞானத் தபோதனரை வாவென்று அழைக்கும் மலை அண்ணாமலை' என்று அருணகிரிநாதர் கூறுவார். 'உண்ணாமுலை உமையாளொடு உடனாகிய ஒருவன் அண்ணாமலையான்" என்பர் ஞானசம்பந்தப் பெருமான்.

உயிர்களின் பாசங்களைக் கட்டறுத்து, இறைவன் அருளு கின்ற எளிவந்த தன்மையினை இதுகாறும் சொல்லிவந்த மணிவாசகப் பெருந்தகையார், இத்திருப்பாட்டில் இறைவனது அத்துவித நிலையைக் கன்னியர்கள் வாய்வழிப் புலப்படுத்தி நிற்கிறார். கன்னியர்கள் தங்களுள் ஒருத்தி யைப் பெண்ணே என விளித்துப் பேசத் தொடங்குகின்றனர்.

"பெண்ணே! திருவண்ணாமலையில் திருக்கோயில் கொண்டுள்ள அண்ணாமலையானது திருவடித் தாமரை மலர் களைச் சார்ந்து வணங்கும் தேவர்களது முடியின்கண் விளங்கும் பலவகைப்பட்ட இரத்தினங்களும் பொலிவிழந்து ஒளி மழுங்கியது போலவும், எங்கும் பரவி நிற்கும் இருள் நீங்க, உலகெங்கும் காலையில் கதிரவன் ஒளி தோன்றலும். குளிர்ச்சி பொருந்திய ஒளி நீங்கி விண்மீன்கள் மறைந்து நிற்கின்ற தன்மை போலவும், பெண்ணாகியும் ஆணாகியும் அலியாகியும், ஒளியை உமிழும் இரு சுடர்களாம், சூரியன் சந்திரன் இவைகளைப் பொருந்திய ஆகாயமாகவும், நிலமாகியும், இவைகளுக்கெல்லாம் வேறாகியும் ஞானத் தால் உணர்வார்க்கு அமுதமயமாகியும் கலந்து என்றும் எங்கும் நீக்கமற விளங்குபவனாகிய சிவபெருமானது

திருவடிகளைப் பாடி இந்த அழகு நிறைந்த நீரினில் தாவிக் குதித்து நீராடுவோமாக' என்று பேசினர்.

இறைவனும் உயிரும் ஒன்றிட்டு அத்துவிதமாய் நின்ற போது இருவரது நிலையும் இரண்டு உவமைகள் வழி ஈண்டு விளக்கப்படுகின்றன. அண்ணாமலையான் திருவடிகளைச் சென்று தொடும் விண்ணோர் தம் முடியின் மணியொளி வீறு அற்றாற் போலவும், கதிரவன் ஒளி வானிடைப் பரவலும் ஒளி மழுங்கிய தாரகைக் கூட்டத்தின் தன்மை போலவும் என உவமைகள் இரண்டு எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. இறைவனது திருமுடியை அன்னப்பறவை உருத்தாங்கித் தேடினான் பிரமன், அடியைத் தேடப் பன்றியுரு தாங்கிச் சென்றார் திருமால். அப்போது சிவன் இவர்கள் இருவரும் காணவொண்ணா நிலையில் அழற்பிழம் பாகக் காட்சி தந்தான். எனவே அண்ணலின் அடித்தாமரை மலர்கள் பேரொளிப் பிழம்பாகத் திகழும் தன்மையுடைத் தாகும். திருநாவுக்கரசர் பெருமானும் தம் திருவிருத்தப் பாட்டில் (17)

சோதியும் செஞ்சுடர் ஞாயிறும் ஒப்பன தூ மதியோடு

என்று குறிப்பிடுவர். கண்டராதித்த தேவர் என்னும் சோழர் குலத்துதித்த ஞான வள்ளலும்,

> நெடியானோடு நான்முகனும் வானவரும் நெருங்கி
> முடியான் முடிகள் மோதியுக்க முழுமணியின் திரளை
> அடியார் அலகினால் திரட்டும் மணி தில்லையம்
> பலத்துக்கு
> அடியார் கொன்றை மாலையானைக் காண்பதும் என்று
> கொலோ,

என்று தேவர்கள் தங்கள் மணி மகுடத்துடன் சென்று திருவருள் பெறச் சிவபெருமானைத் தரிசித்த பான்மை யினைத் திருவிசைப்பாவில் விளக்குவர்.

மேற்காட்டப் பெற்ற இரண்டு உவமைகளும் இறைவனும் உயிரும் முத்தி நிலையில் ஒன்றாகாமல் இரண்டாகாமல் ஒன்றும் இரண்டும் ஆகாமல் கலந்து நிற்கும் பெற்றியினை அறிவித்தனவாகும்.

இவ்வாறு அத்துவிதமாய் நின்ற சிவன், அறிவுப் பொருள், அறிவில் பொருள்களோடும் கலப்பினால் பேத மற்றும், பொருட்டன்மையால் பேதமாயும், உயிர்க்குயிராந் தன்மையால் பேதா பேதமாயும் விளங்குகிறான் என்பர். பெண்ணாகி, ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர் விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக் கண்ணார் அமுதமாய் நின்றான் என்றார். பெண்ணாகி ஆணாய் அலியாய் என்பது உயர்திணை அறிவுப் பொருள்களைக் குறித்து நின்றது. ''பெண் ஆண் அலியெனும் பெற்றியன் காண்க'' என்று திருவாசகத் திருவண்டப் பகுதியாலும் மணிவாசகர் இதனை உணர்த்துவர். அறிவில் பொருள் களைக் குறிக்க ''விண்ணாகி மண்ணாகி'' என விளம்பினார். ஐம்பூதங்களின் முதலாக உள்ள விண்ணையும் இறுதியாக உள்ள மண்ணையும் குறிப்பிட்ட வகையினால் இடைப்பட்ட நீர், நெருப்பு, காற்று ஆகிய மூன்றினையும் உடன் குறிப்பிட்டவாறாம். ஆகாயம் கதிரவன், மதி, கணக்கிலாத நட்சத்திரங்களை உடைமை காரணம் பற்றிப் 'பிறங்கொளி சேர் விண்' எனப்பட்டது.

இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாய் எரியும் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாசமாய் அட்டமூர்த்தி யாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவும் தம்முருவும் தாமேயாகி

நெரு கலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே

என்னும் திருத்தாண்டகமும் இக்கருத்தை வலியுறுத்தல் காணலாம்.

சிவனைக் கண்ணார் அமுதம் எனச் சொல்லியிருத்தல் கருதற்பாற்று.

'பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்தாடு' என்னும் தொடர்' நீராடப் போந்த கன்னியர்கள் புலர்காலைப் போது வரை நீராடினார்கள் என்னும் குறிப்பினைத் தருவதாகும்.

இப்பதிகம் திருவெம்பாவை மாணிக்கவாசகப் பெருமக னால் திருவண்ணாமலையில் இயற்றப்பட்டது என்பதற்கு 'அண்ணாமலையான்' என்றது ஒரு குறிப்பெயர்.

கடல் வண்ணனும் வேதக்கிளர் தாமரை
மலர் மேலுறை கேடில் புகழோனும்
அளவாவனம் அழலாகிய அண்ணாமலை

என்று திருஞானசம்பந்தரும் தம் தேவாரப் பதிகத்தில் (105) குறிப்பிட்டிருப்பது புராணக்கதையை உள்ளடக்கியதாகும்.

அண்ணா மலையான்
அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின்
மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி
கதிர்வந்து கார்நிரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித்
தாரகைகள் தாமகலப்

பெண்ணாகி ஆணாய்
அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி
இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய்
நின்றான் கழல்பாடிப்
பெண்ணே! இப் புனல்பாய்ந்(து)
ஆடேலோர் எம்பாவாய்!

# பத்தொன்பதாவது திருப்பாடல்

இறைவனது அத்துவித நிலையை அறிவுறுத்திய மணிவாசகப் பெருந்தகையார்' உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்ற இச்சிறந்த திருப்பாட்டில், உலக உயிர்கள் தம்மையெல்லாம் சிவபெருமானிடத்து அடைக்கலப் பொருளாக ஒப்புவித்த பின்னர் அவைகட்கு யாதொரு செயலுமின்றி, சிவன்மாட்டு வரு பயன்களை விரும்புதலும் தகுதிப்பாட்டிற்குக் குறைவானதென்று உணர்த்தத் தொடங்கும் வகையில் கருத்துகளைப் பெய்துள்ளார்.

இறைவனின் அத்துவித நிலையைப் புகழ்ந்து பாடிய கன்னியர்கள், ஏற்கெனவே உயிர்கள் அனைத்தும் சிவன் மாட்டு அடைக்கலம் புகுந்துள்ள செயலினை நினைவூட்டு வாராய் 'எங்கள் பெருமான்' என்று ஆண்டவனைத் தம் மோடு அகப்படுத்திக் கூறினர்.

''உங்கையிற் பிள்ளை உமக்கே அடைக்கலம்'' என்பது ஒரு பழமொழி. ஒருவரிடத்து ஒரு மகனைக் கையடையாக -அடைக்கலமாக ஒப்புவித்தபோது அவனைக் காக்கவேண்டிய கடப்பாடு அப்பெரியவருடையது என்பதனை உணர்த்தி நிற்பது அப்பழமொழி. '' தமக்கு அன்புபட்டவர், பாரமும் பூண்பர்' என்பது அப்பர்தம் திருவாரூர் அறநெறித் தேவாரம் (2).

அந்நாளில் சின்னஞ்சிறியரை ஆசிரியர்பால் கல்விப் பயிற்சிக்காக இவ்வாறு சொல்லி ஒப்படைத்தல் வழக்கம் என்பது தெரிய வருகிறது. அடைக்கலம் என்று ஒருவர் கேட்டு, அதனை ஏற்றுக்கொண்டபின் அவரைக் காத்தல் என்பது கடமையாகி விடுகிறது.

புதுக்குதல் என்பது நல்ல சொல். மீண்டும் சொல்லுதல் நினைவூட்டுதல் எனப் பொருள்படும். அடைக்கலம் தந்தவர்க்கு அவர்தம் கடமையை அறிவுறுத்தி, அது கேட்டு அவர் உள்ளம் சினத்தலும், பொறாது சலித்தலும், என் செய்வதென்று கலங்கலும் கூடும். ஆயினும் தடங்கருணைப் பெருங்கடலாகத் திகழும் சிவனே உலக உயிர்களை அடைக்கலமாக ஏற்று இருப்பதனால் மென்மையாக அவனுக்கு எடுத்துரைக்கும் போக்கில் ' உனக்கொன்று உரைப்போம், கேள்" என்கின்றனர் கன்னியர்கள்.

'உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று அங்கு அப்பழஞ்சொல் புதுக்கும் அம் அச்சத்தால்' என்பது விநயமாக உரையாடும் கன்னியர் தம் பேச்சுத் திறத்தினை உணர்த்தி நின்றது.

''பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்'' என்பார் அப்பரடிகளும் (திருத்தூங்கானை மாடம், திருவிருத்தம் : 1).

சிவபெருமானை மனமொழி மெய்களால் போற்றுவதே தம் கடன் என நினைப்பார்போல அதனை உடன்பாட்டான் அன்றி எதிர்மறை முகத்தான் உணர்த்துவார் போல,

எங்கொங்கை நின்அன்பர் அல்லார் தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க

என்றனர்.

''எங்களது நகில்கள் உன்னுடைய அன்பர்கள் அல்லாதாரது தோள்களிலும் பொருந்தாதொழிவதாகுக. எமது கைகள் உனக்கன்றி வேறொருவருக்கும் எத்தகைய தொண்டுகளையும் செய்யாமலொழிவனாகும். எமது கண்கள் இரவிலும் பகலிலும் உன்னையன்றி வேறொரு பொருளையும் காணாதொழிவதாகுக'' என்றனர்.

இறைவன் அடைக்கலமாகக் கொண்ட பிறகு நிகழும் செயல்கள் அனைத்தும் இறைவன் இச்சைப்படி நிகழும் செயல்களாதலின் கன்னியர் இவ்வாறு கருதினர்.

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே (குழைத்த பத்து : 7)

சிவனடியார்களே தங்கள் கணவராக வாய்க்க வேண்டும் என்பதும் சிவனடிக்கே தொண்டு செய்யும் எங்கள் கைகள் என்பதும், இரவு பகல் எந்நேரமும் சிவனடியன்றிப் பிறி தொன்றை எங்கள் கண்கள் காணா என்பதும் கன்னியர் கொண்ட உறுதியாகும்.

நனவிலும் கனவினும் நம்பா வுன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
(திருவாவடுதுறை : 3)

என்பர் திரு ஞானசம்பந்தரும்.

இவ்விண்ணப்பங்களை முறையே நீ ஏற்றுக் கொண்டால் சூரியன் எந்தத் திசையில் உதித்தாலும் கவலை இல்லை எங்களுக்கு என்றார்கள். 'எங்கெழிலென் ஞாயிறு எமக்கு' 'எங்கெழிலென் ஞாயிறென விண்ணையும் வளர்ந்தோம்' என்பது சிந்தாமணி (1793).

சிவத் தொண்டர்கள் தங்கள் கரணங்கள் அனைத்தும் சிவன் திருப்பணிக்கே உரியன எனக் கருதினர்.

இத்திருப்பாட்டு, இறைவனுக்கு மனம், மொழி, மெய் ஆகிய முக்கரணங்களாலும் பணி செய்யும் பாங்கினை உணர்த்தி நிற்கின்றது.

உள்ளத்தையும் இங்கு என்னையும்
நின்கையினில் ஒப்புவித்தும்
கள்ளத்தைச் செய்யும் வினையால்
வருந்தக் கணக்கும் உண்டோ
பள்ளத்தில் வீழும் புனல்போல்
படிந்து நின்பரம இன்ப
வெள்ளத்தில் மூழ்கினர்க்கே
எளிதாம் தில்லை வித்தகனே

எனும் தாயுமானார் வாக்கும் ஈண்டு நினைக்கத்தக்கது.

உங்கையிற் பிள்ளை
உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழஞ்சொற்
புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான்!
உனக்கொன் றுரைப்போங்கேள்!
எங்கொங்கை நின் அன்பர்
அல்லார்தோள் சேரற்க!
எங்கை உனக்கல்லாது
எப்பணியுஞ் செய்யற்க;
கங்குல் பகல்எம்கண்
மற்றொன்றுங் காணற்க:
இங்கிப் பரிசே
எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி(று)?
எமக்குஏலோர் எம்பாவாய்!

# இருபதாவது திருப்பாடல்

'உங்கையற் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்ற மேலைத் திருப்பாட்டில் கன்னியர்கள், தங்கள் மனம், மொழி, மெய் என்னும் முக்கரணங்களும் ஊழி முதல்வனாம் சிவனின் திருப்பணிக்கே ஆகுமாறு விண்ணப்பித்த முறைமையை அறிவுறுத்திய மணிவாசகப் பெருமான் இத்திருப்பாட்டில், கன்னியர்கள் நீராடி முடித்துக் கொண்டு, சிவபெருமான் தம்மைக் காத்தருள வேண்டும் எனப் போற்றி நின்றதனை உணர்த்துகின்றார்.

''எங்களைப் பாதுகாத்து உன்னுடைய எப்பொருட்கும் முன்னே விளங்கிய திருவடி மலர்களை அருளுவாயாக'' என முதல் வேண்டுகோளினை விடுக்கின்றனர். இறைவன் திருவடிகளை வழுத்துவதே முறை. அவனுடைய திருவருளுக்கு உருவாயமைந்தது திருவடி நிலையேயாகும். திருவள்ளுவரும் தம் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் ஏழு பாடல்களில் இறைவன் திருவடிகளையே கூறினார். இறைவன் திருவடிகளைப் பரவுவதே உலக உயிர்களின் கடமையாகின்றது. பிறவியின் பெரும்பயன் இறைவன் அடிசேர்தலே என்பது பெரியோர் கண்ட துணிபாகும். முதலாக இருக்கும் இறைவனே முடிவாகவும் இருக்கிறான் என்பதனை உணர்த்த 'போற்றியருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்' என்றார். திருநாவுக்கரசர் பெருமானும் 'ஆதியும் அந்தமும் ஆவன ஐயாறன் அடித்தலமே'' (திருவையாறு : 17) என்பர். ''திருவடிக்கு முதன்மை கூறுங்கால் மலரெனவும், ஈறு கூறுங்கால் செந்தளிர் களெனவுங்கூறியது ''ஒடுங்கி யுளதாம்'' (சிவஞானபோதம்— சூத்திரம் 1) என்னும் சைவ வுண்மைப் புலப்படற்கென்க,

"தளிரி னின்றே மலர் தோன்றும் உண்மை கருதத்தக்கது" என்பது கதிர்மணி விளக்கம். இவ் ஆதியினுக்கும் அந்தத் திற்கும் இடைப்பட்டனவாக இறைவனது ஐந்தொழில் களைக் குறிப்பர்.

"போற்றி எல்லா வுயிர்க்கும் தோற்றமாம் பொற் பாதம்" என்பதனால் படைப்பு குறிக்கப்பட்டது. "போற்றி எல்லா வுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்" என்றதனால் அளித்தல் குறிக்கப்பட்டது. "போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்" என்றதனால் மறைத்தல் தொழில் குறிக்கப்பட்டது. "போற்றி யாமுய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்" என்றதனால் அருளல் குறிக்கப்பட்டது. இவ்வாறு ஐந்தொழில்களையும் சிவபெருமானது திருவடி களே செய்தன என்பார் பொற்பாதம், பூங்கழல்கள், இணையடிகள், புண்டரிகம், பொன்மலர்கள் என்றார்.

இறைவன் சத்தியே திருவடிகளாய் விளங்குவதாகக் கூறுவர். இறைவன் ஒருவனே கதிரவனும் ஒளியும் போலச் சிவனும் சத்தியுமாய்த் தாதான்மிய ஒற்றுமையால் இருதிறப் பட்டுப் பொதுமையில் நிற்கும் என்பர் சைவ சித்தாந்திகள். தீ ஒன்றாயினும் அடுதல்தொழிலுக்கு உதவுங்காலையில் அடுஞ்சத்தியாகவும், ஒரு பொருளை எரிக்கும் பொழுது சுடுஞ்சத்தியாகவும் கருதப்படுவதுபோல, சிவசத்தியொன்றே காரிய வேறுபாட்டால் பரை, திரோதானம், இச்சை, ஞானம், கிரியை எனப் பெயரிய சக்திகளாகவும் விளங்கும் என்று கூறுப. சிவப்பிரகாசம் என்னும் சைவ சித்தாந்த சாத்திர நூல் ஐந்தொழிலின் சிறப்பினை,

ஏற்ற இவை அரனருளின் திருவிளையாட்டாக
இயம்புவர்கள் அணுக்களிடர்க்கடல் நின்று மெடுத்தே
ஊற்றமிகு அருள்புரிதல ஏதுவாக
உரைசெய்வர் ஒடுக்கம் இளைப்பொழித்தல் மற்றைத்

**தோற்ற மலபாகம் வரக்காத்தல் போகம்**
**துய்ப்பித்தல் திரோதாயி நிறுத்தலாகும்**
**போற்றலரும் அருளேயன்றி மாற்றுப்**
**புகன்றவையும் அருளொழியப் புகலொணாதே ( 18)**

என்று குறிப்பிடும்.

எல்லாவுயிர்களுக்கும் உண்மையான இன்ப அனுபவமாக இருப்பன திருவடிகளே. உலகியல் இன்பத்திலிருந்து தம்மை விடுவித்து, மாறாத இறையின்பத்தைத் தமக்குத் தந்தருள வேண்டும் என்பதனைக் குறிக்குமுகத்தான் மணிவாசகரே தம் அச்சோப் பதிகத்தில் (3)

**பொய்யெலாம்மெய்யென்று புணர்முலையார் போகத்தே**
**மையலுறக் கடவேனை மாளாதே காத்தருளித்**
**தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும் வண்ணம்**
**ஐயன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே**
**(அச்சோ : 3)**

என்று குறிப்பிடுவது கருதத்தக்கது.

திருநாவுக்கரசர் பெருமானும் ஐயாறன் அடித்தலமே என்ற கருத்தமைய,

**சிந்திப் பரியன, சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன்**
**முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்து இருண்டு**
**பந்தித்துநின்ற பழவினை தீர்ப்பன பாம்பு சுற்றி**
**அந்திப் பிறையணிந்து ஆடும் ஐயாறன் அடித்தலமே**
**(தேவாரம் : 504 !)**

என்று பாடியிருப்பது எண்ணத்தக்கது.

சுந்தரர் தம் திருப்பாண்டிக்கொடுமுடிப் பதிகத்தில்

**மற்றுப் பற்றெனக்கின்றி நின்திருப் பாதமே**
**மனம் பாவித்தேன்**
**பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத தன்மை**
**வந்தெய்தினேன்**

கற்றவர் தொழுதேத்தும் சீர்கரையூரிற்
பாண்டிக் கொடிமுடி
நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும்நா
நமச்சி வாயவே

என்பர்.

காரைக்காலம்மையாரும்,

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் மகிழ்ந்து
அறவா நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க என்றார்

என்று இறைவன் திருவடியின்கீழ்த் தங்கியிருத்தலையே வேண்டியதாகச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுவர்.

ஐந்தொழில்களையும் இயற்றும் திருவடிகள் தம்மைக் காத்தருள வேண்டும் என்று கூறிய கன்னியர்கள் அவ்விறைவனை வாழ்த்துவதற்குக் காரணமாயிருந்தது மார்கழி நீராயினமையின் அதுவும் தம்மைக் காத்தருள்க வென்பார் 'போற்றியாம் மார்கழி நீராடு'' என்றார்.

''போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன் மலர்கள்'' என்று சிவன்திருவடிகளைச் சிறப்பித்துப் பேசிய கன்னியர்கள் பொய்கை நீரையும் ஏத்திப் போற்றி வீடு திரும்பினர்.

இவ்வாறு 'போற்றியருளுக' எனத் தொடங்கி 'போற்றி யாம் மார்கழி நீராடலோர் எம்பாவாய்'' என முடிகின்றது.

போற்றி அருளுகநின்
ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின்
அந்தமாம் செந்தளிர்கள்

போற்றியெல் லாவுயிர்க்கும்
தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும்
போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும்
ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும்
காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட்
கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீர்—
ஆடேலோர் எம்பாவாய்!

# திருப்பள்ளி எழுச்சி

## முதல் திருப்பாடல்

தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறு வகைச் சிறுபிரபந்தங்களில் ஒன்று "திருப்பள்ளியெழுச்சி" யாகும். மாணிக்க வாசகப் பெருமான் அவர்களால் இயற்றப்பெற்ற திருவாசகத்தின் ஒரு பகுதியாக இத்திருப்பள்ளியெழுச்சி துலங்குகிறது. சிவபெருமானைத் திருப்பள்ளியினின்றும் எழுந்தருளுமாறு வேண்டுவதே இதன் பொருளாகும். எனவே, "திருப்பள்ளியெழுச்சி" என்னும் தொடர், பள்ளியினின்றும் துயில் உணர்ந்து எழுதலைக் குறித்தது ஆகின்றது.

தொல்காப்பியனார் தம் நூலாம் தொல்காப்பியத்தில்,

**தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்**
**சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்**
**—தொல் ; புறத்திணை : 36**

என்னும் நூற்பாவில் "பள்ளியெழுச்சி" பற்றிய இலக்கிய வகை குறித்துக் குறிப்பிட்டிருப்பதனைக் காணலாம். "துயிலெடைநிலை" என்பது திருப்பள்ளியெழுச்சியைக் குறிக்கிறது. தன்னுடைய தோள்வலிமையினால் வெற்றிக்குவித்திட்டுவிட்டுப் பாசறைக்கண் ஒரு சிறிது மனத்துன்பமும் இன்றித் தூங்கும் அரசர்க்கு நல்ல புகழைக் கொடுத்தலைக் கருதி சூதர் - அதாவது நின்றேத்துவோர் - அரசர் அருகில் நின்று அவன் புகழ்பாடுவோர் அரசனைத் துயிலினின்றும் நீங்கிஎழப்பாடுவது துயிலெடைநிலை என்று கூறப்படும்.

வைகறைப் போதில் துயிலெழுவது அந்நாளைய வழக்க மாதலின், அரசர்கள் தத்தம் அரண்மனைகளில் வைகறையிற் பாடும் பாணர்களை நியமித்திருந்தனர். இவ்வாறு நியமிக்ககப் பெற்ற பாணர்கள் தாம் வாழ்த்திப் பாடவந்த அரசனுடைய வீரத்தினையும் வெற்றிச் சிறப்பினையும் ஏத்திப் பாடுவது மரபாகும். அவ்வாறு அரசனைத் துயிலுணர்த்தும் நேரம் வைகறைப் போதாதலின் புறவுலகில் நிகழும் நிகழ்ச்சி களையுங் கூறிப் பள்ளியெழுச்சி பாடுவாராயினர். அவ்வாறு பாடுங்காலையில் வைகறையில் நிகழும் இயற்கை பற்றிய இனிய சித்திரக் காட்சிகள் உறுதியாக இடம்பெற்றிருக்கக் காணலாம்.

தமிழில் மூன்று திருப்பள்ளி யெழுச்சிகள் சிறப்பானவை என்று கூறுவர். மாணிக்கவாசகர் பாடிய திருப்பள்ளி யெழுச்சி, தொண்டரடிப் பொடியாழ்வார் பாடிய திருப் பள்ளியெழுச்சி, திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் பாடிய திருப்பள்ளியெழுச்சி ஆகிய மூன்றே அவை. மணிவாசகப் பெருந்தகையார் பாடியருளிய திருப்பள்ளியெழுச்சி சொற் செட்டும் பொருள் நயமும் கொண்டு கருத்தாழ மிக்கதாய்க் காட்சியளிக்கிறது. திருவாசகத்துள் ஒரு பகுதியாக இயங்கும் இப்பகுதியினை ஆன்றோர்கள் "திரோதான சுத்தி" என வழங்குவர். திரோதானம் என்றால் மறைப்பு என்றும், சுத்தி என்றால் தூய்மை செய்வது என்றும் பொருள் விரியும். சுருங்கச் சொன்னால் ''மறைப்பின் நீக்கம்' எனச் சொல்லி விடலாம். உலகத்து உயிர்களுக்கு மறைப்பினைக் காட்டி, வினைப்பயன் நுகருமாறு பக்குவம் செய்து வந்த திரோதான சுத்தி, அருட்சுத்தியாக வெளிப்படும் விரைவு நினைந்து இறைவனைப் பற்றி எழுந்தருள்கவென விரும்பியபடியாகத் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் அமைந்துள்ளன என்பர்.

**நீறணிந்தார் அகத்திருளும் நிறைகங்குல் புறத்திருளும்**
**மாறவரும் திருப்பள்ளி யெழுச்சினியில்**

என்று பக்திச்சுவை நனிசொட்டப் பாடிய திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் திருப்பள்ளியெழுச்சியின் பயனைக் குறிப்பிடுவர்.

திருவெம்பாவை திருவண்ணாமலையில் பாடப்பட்டது போலத் திருப்பள்ளியெழுச்சி திருப்பெருந்துறையில் பாடப் பட்டதாகும்.

திருப்பள்ளியெழுச்சி ''போற்றி என் வாழ் முதலாகிய பொருளே'' எனத் தொடங்கக் காணலாம்.

துயிலில் ஆழ்ந்திருக்கும் அரசனை அவன் பெயரும் வீரமும் வெற்றியும் புகழும் கூறி வைகறையில் பாணர்கள் எழுப்புதல் போல, ஈண்டு மாணிக்கவாசகப் பெருமான் இறைவனது திருப்பெயர்களையும், பெருமைகளையும் சிறப் பாகக் கூறித் தமக்கும் தம் தலைவனாம் இறைவனுக்கும் இடையேயுள்ள தொடர்பின் காரணமாகத் தாம் பெற்ற பயன் கருதி அழைப்பார் போல முதற்கண் 'என் வாழ் முதலாகிய பொருளே போற்றி'' என்று அழைத்தார். 'வாழ் முதல்'' என்ற தொடர் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும். தம்முடைய வாழ்விற்கே சிவபெருமான் முதலாவதாக -முதலாக (Capital) விளங்குகிறான் என்பதனைத் தொடக் கத்திலேயே குறிப்பிட்டுவிடுகிறார்.

''இதழ்களையுடைய தாமரை மலர்கள் மலருகின்ற சேற்றினையுடைய வயல்களால் சூழப்பெற்ற திருப்பெருந்துறை என்னும் தலத்தில் திருக்கோயில் கொண்டுள்ள சிவபெருமான்'' என்று புறத்தேயும் அப் பெருமானைக் கண்டு ''சேற்றிதழ் கமலங்கள் மலரும் தண் வயல்சூழ் திருப்பெருந்துறையுறை சிவபெருமானே'' என்றார். இது சிந்தனைக்கும் எட்டாத சேண் தூரத்தில் விளங்கும் இறைவன், நினைவார்தம் உள்ளத் தாமரையில்

வீற்றிருக்க வருவன்'' என்னும் குறிப்பினை உணர்த்திய வாறாம். திருபெருந்துறைஎன்னும் திருத்தலம் திருவாதவூரடிகள் புராணம் இயற்றிய கடவுள் மாமுனிவரால்,

வெம்பிறவி வேலைதனில் வீழ்வார்கள் எல்லாம்
நம்புசிவ நாமமெனும் நற்புணை பிடித்தால்
எம்பரன் அருட்கரையில் ஏறுதுறை யாமால்
அம்புவி மொழிந்துள பெருந்துறை அதன்பேர்

என்று பாராட்டப்பட்டுள்ளது. உயிர்களை மீட்டு அருட்கரைக்கு ஏற்றுகின்ற துறையாதலின் திருப்பெருந்துறை எனப் பெயர் அமைந்ததாகக் கூறுவர்.

''ஏறு உயர் கொடி உடையாய்''

என அடுத்து அச்சிவபெருமானைப் புகழ்ந்துரைத்தார். இடப இலச்சினை பொறித்த கொடியை உடையவன் என்பதனால் இறைவனின் உருவம் புலப்படும். ''திருப்பெருந்துறை சிவபெருமானே'' என்பது அருவுருவ நிலையைக் குறிக்கும். ''எனையுடையாய்'' என மணிவாசகர் இறைவனைக் குறிப்பிடும் காரணம், இறைவன் உயிர்களைப் பக்குவப் படுத்தித் தன்னடிமைகள் என்று அவை உணருமாறு செய்தலுக்கே என்பர். அடுத்து 'எம்பெருமானே' எனச் சுட்டியது தன்னை அடிமை கொண்ட காரணத்தினால் சிவபெருமான் தனக்குத் தலைவன் ஆயினான் என்பது கருதியாகும்.

அடுத்து, பொழுது விடிந்ததனைப் பணிவாகச் சொல்வார். போற்றி, புலர்ந்தது என்றார், அழகிய திருவடிகளின் மீது இருமலர்களாக விடுமலர்களைத் தூவி, உன் திருமுகத்தில் நாங்கள் உய்யும்படி நீ அருளுகின்ற அழகிய புன்முறுவலைக் கண்டு நின் திருவடிகளை வணங்கும் முறைமை உடையோம் என்று குறிப்பிட, ''பூங்கழற்கு

இணை துணைமலர் கொண்டு ஏற்றி, நின் திருமுகத்து எமக்கு அருள் மலரும் எழில் நகை கொண்டு நின் திருவடி தொழுவோம்'' என்றார். உன்னைத் தொழுவதே நம் கடமை எனக் குறிப்பால் உணர்த்தி சிவபெருமானைப் பள்ளியினின்றும் எழுந்தருளுமாறு வேண்டுவார் ''பள்ளியெழுந் தருளாய்'' என்றார்.

போற்றி! என் வாழ்முதல்
ஆகிய பொருளே!
புலர்ந்தது; பூங்கழற்கு
இணைதுணை மலர்கொண்டு
ஏற்றி நின் திருமுகத்து
எமக்கருள் மலரும்
எழில் நகை கொண்டு நின்
திருவடி தொழுகோம்!
சேற்றிதழ்க் கமலங்கள்
மலரும் தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை
சிவ பெரு மானே!
ஏற்றுயர் கொடியுடை
யாய்! எனை உடையாய்!
எம்பெரு மான்! பள்ளி
எழுந்தரு ளாயே!

# இரண்டாவது திருப்பாடல்

இதற்கு முந்தைய திருப்பாட்டில் பொழுது புலர்ந்தது என்று பாடிய மாணிக்கவாசகர், அப்புலர்காலைப் பொழுதில் நிகழ்வனவாகிய காட்சிகளைக் கட்டுரைப்பார் போலத் திருப்பெருந்துறை சிவபெருமானே என்றும், அருள்நிதி தரவரும் ஆனந்தமலையே என்றும், அலைகடலே என்றும் ஆண்டவனை அழைக்கின்றார். தடங்கருணைப் பெருங் கடலாம் சிவபெருமானைக் கடலென்றும் மலையென்றும் விளித்திருப்பது ஒரு காரணம் பற்றியேயாகும். மலை, மழை வளம் வறண்ட வறட்சிக் காலத்தும் வளம் தரும் வள்ளன்மை கொண்டதாதலின் 'அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே' என்றார். மணிவாசகப் பெருமானே சிவபுராணத்தில் (19)

> ஆராத இன்பம் அருளும்மலை போற்றி

என்றும், கீர்த்தித் திருவகவலில் (123—124),

> இருள் கடிந்து அருளிய இன்பவூர்தி
> அருளிய பெருமை அருள்மலை யாகவும்

என்றும், திருத்தசாங்கத்தில் (5)

> நெஞ்சத்து இருளகல வாள்வீசி இன்பமரு முத்தி
> அருளுமலை என்பது கா ணாய்ந்து

என்றும் குறிப்பிட்டிருப்பதனால், தன்னை வணங்கும் அடியவர்களுக்கு இறைவன் சேம வைப்பாக விளங்கும் பேரின்ப வடிவான மலை போன்றவன் என்றும் அறியப்படுகின்றன.

'கடல்' என்ற சுட்டு இறைவன் நெகிழ்ச்சியுடன் கூடிய பரமானந்த நிலையிலிருத்தலைக் குறிக்கும். 'பரமானந்தப் பழங்கடல்' (திருவண்டப் பகுதி:66) என்னும் மணிவாசகர் தொடர் இதனையே குறிக்கும். நுரை, திரையாம் அலை முதலியன கடலினிடத்தே தோன்றிப் பின் அங்கேயே ஒடுங்குவது போல, நிற்பதும் நடப்பதுமாய பொருள்கள் அனைத்தும், இறைவனிடத்தே தோன்றிப் பின் அவன்பாலே ஒடுங்கும் என்னும் உயரிய உண்மையினை முற்றத் துறந்தவர் என்று போற்றப்படும் பெரியாராகிய பட்டினத்தடிகள்,

............... உளர்தரும்
அரையும் திரையும் நொட்புறு கொட்பும்
வரையில் சீகா வாரியும் குரைகடல்
பெருத்தும் சிறுத்தும் பிறங்குவ தோன்றி
எண்ணில வாகி இருங்கடல் அடங்கும்
தன்மை போலச் சராசர மனைத்தும்
நின்னிடைத் தோன்றி நின்னிடை அடங்கும்
(கோயில் நான்மணி மாலை : 24)

என்று குறிப்பிடுவர். பிறவி என்னும் தொடரும் பெரு நோயினைத் தீர்க்க மருந்து மலையாகவும், தேவர்கள் சாகாமலிருக்க அமுதக் கடலாகவும் ஆண்டவன் விளங்கிய காரணத்தால் இறைவனை மலையென்றும், கடலென்றும் குறிப்பிட்டனர் என்று கொள்ளலாம்.

இறைவனை இவ்வாறு இனிமையாக அழைத்துவிட்டு, காலைப்பொழுதில் புறத்தே நிகழும் நிகழ்ச்சிகளை அறிவிக்கத் தொடங்குவார் போல, "அருணன் இந்திரன் திசை அணுகினன்" என்றார். அருணன் கதிரவனது தேர்ப்பாகனாவான்; இந்திரன் திசை என வழங்கப்படுவது கிழக்குத் திசையாகும். இந்திரன் கிழக்குத் திசையிலும், அக்கினி தென்கிழக்குத் திசையிலும், இயமன் தெற்குத்

திசையிலும், வருணன் மேற்குத் திசையிலும், வாயு வடமேற்குத் திசையிலும், நிருதி தென் மேற்கிலும், குபேரன் வடக்குத் திசையிலும் ஈசானன் வடகிழக்குத் திசையிலும் வீற்றிருப்பர் எனச் சொல்லுவர். எட்டுத்திக்குப் பாலர்கள் என வழங்கப்படும் இவர்கள் எண் திசைகளிலும் காவலாக அமைவர். கதிரவன் கீழ்த்திசையில் தோன்றியவுடன் இருள்விலகி ஒளி தோன்றுகின்றது என்பதனை உணர்த்த, ''இருள்போய் உதயம் அகன்றது'' என்பார். ஒளி வானில் விரிகின்ற செயல்கதிரவன் வானத்தின் மேலே மேலே எழுகின்றதன் காரணம் என்று உரைப்பாராய், ''நின்மலர்த் திருமுகத்தின் கருணையின் சூரியன் எழஎழ'' என்றார். கதிரவன் குணதிசை தோன்றியதும் பொய்கையில் உள்ள தாமரை மலர்கள் மலர்ந்தன என்பார் ''அண்ணலங் கண்ணாம் நயனக் கடிமலர்மலர்'' என்று குறிப்பிட்டார். தாமரை மலர்கள் இங்கு இறைவன் திருக்கண்களுக்கு ஒப்பாகின்றன. தாமரை மலர்கள் மலர்ந்த அளவிலேயே அம் மலரினுள் இதுகாறும் தங்கித் தேன் உண்டு திளைத்து மயங்கியிருந்த வண்டுகள் இசைபாடின என்பார். ''திரள் நிரை அறுபதம் முரல்வன'' என்றார். வைகறைப் போதில் வண்டுகள் தேன் வண்டு ரீங்காரம் இடும் இயல்பினவாகும். இவ்வாறு வண்டு பாடும் இனிய காட்சிச் சிறப்பினைக் குமரகுருபரர்,

மழலைவண்டு தடமலர் குடைந்துபுது
மதுவருந்தி நறுமல்லிகைச் சேக்கையின்
வடிபசுந் தமிழினிசை பயின்றபெடை
யொடுதுயின்றினிய செவ்வழிப் பாட்டினை
வருவிபஞ்சி பயிறரு மதங்கர் தெரு
மரமுரன்று நெடுவைகறைப் போய்ச்செழு
மலரிலஞ்சி றொறுமுலவு கந்தபுரி
மருவுகந்தனை யெமையனைக் காக்கவே

என்று முத்துக்குமார சுவாமிப் பிள்ளைத் தமிழில் குறிப்பிடுவர்.

கதிரவன் கிழக்குத் திசையில் உதித்தான்; உதித்த அளவில் வானில் ஒளி பரவியது; வானில் ஒளி பரவிய அளவில் தாமரை மலர்கள் மலர்ந்தன; தாமரை மலர்கள் மலர்ந்த அளவில் வண்டுக் கூட்டங்கள் இசைபாடின என்று ஒன்றன்பின் ஒன்றாக ஒன்றன் செயலோடு ஒன்றன் செயலைத் தொடர்புபடுத்தி மணிவாசகப் பெருந்தகையார் பாடியிருப்பது உளத்திற்குக் கழிபேருவகை நல்கும் செயலாகும்.

இறைவன் என்னும் ஞானச்சுடர் நெருங்கி அன்பர் மனக்கோயிலில் மண்டிக்கிடந்த அகஇருளை அகற்றியது. "தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கே" எனக் குமரகுருபரர் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் குறிப்பிட்டுள்ளதனைக் காணலாம். இறைவனின் அருட் கண்கள் ஞானவொளியை உமிழ்ந்த அளவில் ஆன்மாக்களின் அகவிருள் தொலைந்தது. கதிரவன் கிழக்குத் திசையில் தோன்றி, மேல்வானத்தை நோக்கிச் சிறிதுசிறிதாக எழஎழ, எவ்வாறு புறவிருள் நீங்கி, உலகம் ஒளிவெள்ளப் பிழம்பில் ஆழ்கின்றதோ அதைப்போலச் சிவபெருமானின் கண்களிலிருந்து ஞானச்சுடர் படிப்படியாக அவனை வணங்கிப் பாடியாடித் தொழும் அடியவர்பால் படியவும், அகமாசுகள் நீங்கி, ஒளிவெள்ளம் உட்புகுந்தது என்று நயம்பட நவின்றுள்ளார் மாணிக்கவாசகர். அறுபதம் முரல்வன — வண்டுகள் ரீங்காரம் செய்தன என்னும் குறிப்பால் சிவபெருமானின் அடியவர் கூட்டமும் அவன் புகழைப்பாடி இன்பத்தில் திளைத்தனர் என்னும் கருத்துப் புலப்படுதல் காண்க.

இவ்வாறு குறிப்பிட்டு, சிவபெருமானே! திருப்பெருந்துறையினை வாழும் இடமாகக் கொண்டுள்ள எங்கள் பிரானே! நீவீர் பள்ளியெழுந்தருள வேண்டும் என்று கூறினர்.

அருணன்இந் திரன்திசை
அணுகினன்; இருள்போய்
அகன்றது; உதயம்நின்
மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன்
எழஎழ, நயனக்
கடிமலர் மலரமற்
றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிறை அறுபதம்
முரல்வன; இவையோர்
திருப்பெருந் துறையுறை
சிவபெரு மானே!
அருள்நிதி தரவரும்
ஆனந்த மலையே!
அலைகடலே! பள்ளி
எழுந்தரு ளாயே!

# மூன்றாவது திருப்பாடல்

சென்ற திருப்பாட்டில் கதிரவன் கிழ்த்திசையில் உதித்த தனையும், அதனால் விரிந்தகன்ற வானில் ஒளி பரவியதனை யும், முன்னிரவில் கூம்பியிருந்த தாமரை மலர்கள் விரிந்த தனையும், அது பொழுது தாமரைத் தேனை உண்டு திளைத் திருந்த வண்டுக் கூட்டங்கள் இன்னிசை பாடி நிற்கவும் ஆன வைகறைக் காட்சிகளை—இயற்கையின் இனிய பெற்றியினை எடுத்தியம்பிய மாணிக்கவாசகர், இத்திருப்பாட்டில், 'கூவின பூங்குயில் கூவின கோழி' என்று மீண்டும் புலர்காலைப் பொழுதின் இனிய காட்சிகளைப் பாடத்தொடங்குகின்றார்.

''தேவ'' என்று முதற்கண் சிவபெருமானை விளிக் கின்றார். தேவர்களின் தலைவனாக தேவதேவனாக—மகா தேவனாகச் சிவபெருமான் திகழும் சிறப்பினை முதலில் சொல்லிய மாணிக்கவாசகர் அவன் எளிவந்த தன்மையினை அடியவர் வேண்டுகோளை ஏற்று அவர் தம்மை ஆட் கொள்ளும் சிறப்பினை உணர்த்துவார் போன்று, ''திருப் பெருந்துறையுறை சிவபெருமானே'' என்றார். இவ்வாறு குறிப்பிட்டதற்குக் காரணம் உலக உயிர்களை உய்விப்பான் வேண்டிய விண்ணவர் கோமான் மண்ணவர் தலைவனாக— மண்ணில் வாழ்பவர்களுக்கு உய்தி அளிப்பான் வேண்டி திருப்பெருந்துறையுறை சிவபெருமானாகத் துலங்குகின்றான் என்பர். இறைவனைக் காணவேண்டுமென்றால் அவன் கருணை நம்மை வந்தடைய வேண்டும். அவன் அருள் தாளை வணங்குவதற்கே அவன் அருள் வேண்டுமென்றால், அவனை அறியவேண்டுமென்று ஆன்மாக்கள் விரும்பினால் எளிதில் அறியவொண்ணாதவனாக அவன் திகழ்கிறான் என்பதனை

விளக்கப் புகுவாராய் "யாவரும் அறிவரியாய்" என்றார் இக்கருத்தினை மாணிக்கவாசகரே தாம் இயற்றிய திருவம்மானைப் பாடலொன்றில் (2)

> பாரார் விசும்புள்ளார் பாதாளத்தார் புறத்தார்
> யாராலுங் காண்டற்கரியார் எமக்கெளிய பேராளன்

என்று குறிப்பிட்டிருக்கக் காணலாம். பிறருக்கெல்லாம் அரியவனாக இருக்கும் ஆண்டவன், அவன் அடியவருக்கெல்லாம் அன்பின் காரணமாக எளியவனாக இருக்கிறான் என்பதனை இதன்வழி உணர்த்தினார். எனவே "எனக்கு எளியாய்" என்றார். சென்ற பாடலிலும் இவ்வாறே ஐந்து வகையாக ஆண்டவனை விளித்தார் என்பதனை மனக்கொளல் வேண்டும்.

அடுத்து, காலைக் காட்சிகள் இத்திருப்பாடலில் இடம் பெறுகின்றன. வைகறைப்போதில் குயில்கள் கூவும் நிலையினைக் குறிப்பிடுவாராய் "கூவின பூங்குயில்" என்றார். குயிற் பறவை குரலினிமைக்குப் பெயர்போன பறவையாகும். இதை உணர்ந்தே இந்த நூற்றாண்டில் வாழ்ந்த பாரதி "கத்தும் குயிலோசை சற்றே வந்து காதில் விழவேண்டும்" என்று தம் "காணிநிலம் வேண்டும் பராசக்தி" என்னும் பாடலில் பாடினார். மரப் பொதும்பரில் வாழும் குயில் தனக்கு மகிழ்ச்சி மீதூரும் பொழுது இனிய குரலெடுத்து இனிமை ததும்பப் பாடும் பெற்றியுடைத்ததான பறவையாகும். எனவே முதற்கண் குயில் கூவுவதனைக் குறிப்பிட்டார். குயில் வீட்டில் வளரும் பறவையன்று; அதைக் கூண்டில் வைத்தும் வீட்டுப் பறவையாக வளர்க்க முடியாது. அந்தக் காட்டுப் பறவையே முதற்கண் தீங்குரலெடுத்துப் பாடிவிட்ட பிறகு, நாட்டில் நல்லோர் வீட்டில் வளர்கின்ற கோழியும் கூவின என்பதனை உணர்த்துவான்

வேண்டி ''கூவின கோழி'' என்றார். ஈண்டுக் கோழி என்பன வைகறைப் போதில் ''கொக்கரக்கோ'' என்று கூவும் சேவலைக் குறிப்பதாகும். பிறிதொரு புராண விளக்கமும் கூறுவர். ''கொக்கு அறுகோ'' என்று சேவல் கூவுகின்றதாம். காரணம், கொக்கு—மாமரமாக நின்ற சூரனை, அறு—துணித்து அழிக்கின்ற, கோ—தலைவனாம் இறைவன் முருகப் பெருமானை நினைந்து கூவுகிறதாம் சேவல். சுருங்கச் சொன்னால் சூரனை வதைத்த சுப்பிரமணிய கடவுளைப் பரவிநிற்கிறது சேவல் என்பர். ''பொறிமயிர் வாரணம் வைகறை இயம்பி என்ற மதுரைக் காஞ்சி அடி (673) சேவல் வைகறையிற் கூவி மக்களை எழுப்பும் திறம் சான்றது என்பதனை விளக்கும்.

குயில் கூவினது மட்டுமல்ல; சேவல் கூவியது மட்டுமல்ல, மற்ற பிற பறவைகளும் கூவின என்பதனை உணர்த்துவான் ''குருகுகள் இயம்பின'' என்றார். குருகுகள் சிறு பறவை களைக் குறித்து நிற்கும். புலர் விடியற் போதில் அஃறிணை உயிர்களாகிய குயில், கோழி, குருகுகள் ஒலித்தன. ஆயின் ஆறறிவு படைத்த மனிதர்கள் இன்னும் எழவில்லையோ என்று வினவுவாரின் ஐயப்பாட்டினைத் தீர்ப்பார். சங்கினை முழக்க ஒருவர் வேண்டும். அது தானாக முழங்கும் திறமற்ற தாகும். திருப்பாவைப் பாட்டிலும் (14)

> **எங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்**
> **செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்**
> **செங்கல் பொடிக் கூறை வெண்பல் தவத்தவர்**
> **தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்**

வைகறையில் வைணவ அடியார்கள் திருக்கோயிலில் சங்கு முழக்குவர் என்ற குறிப்புப் பெறப்படுகின்றது. ''விருப்பொடு வெண்சங்கம் ஊதா ஊர்'' என்று நாவுக்கரசர் பெருமான் தம் தனித்திருத்தாண்டகத்தில் (5) குறிப்பிடுவர். காப்பிய

ஆசிரியர், குணவாயிற் கோட்டத்து அரசு துறந்து இருந்த குடக்கோச் சேரல் இளங்கோவடிகளும்,

> வால்வெண் சங்கொடு வகைபெற் றோங்கிய
> காலை முரசம் கனைகுரல் இயம்ப

என்று குறிப்பிட்டுள்ளார். கதிரவன் ஒளி வான வெளியில் பரவிய அளவில் விண்மீன்களின் ஒலி மழுங்கின என்பார். ''தூவின தாரகை ஒளி; ஒளி உதயத்து ஒருப்படுகின்றது'' என்று குறிப்பிட்டார்.

இவ்வுளவும் கூறிவிட்டு மாணிக்கவாசகர் ''தேவ! நற் செறிகழல் தாளிணை காட்டாய்'' என்று சிவபெருமானின் திருவடித் தாமரையினை வேண்டுகின்றார்.

இவ்வாறு குறிப்பிட்டுச் ''சிவபெருமானே! திருப்பள்ளியி னின்றும் நீங்கி எழுந்தருளுங்கள்'' என வேண்டுகின்றார் மணிவாசகர்.

> கூவின பூங்குயில்;
> கூவின கோழி;
> குருகுகள் இயம்பின;
> இயம்பின சங்கம்;
> ஓவின தாரகை
> ஒளி; ஒளி உதயத்(து)
> ஒருப்படு கின்றது;
> விருப்பொடு நமக்குத்
> தேவ!நற் செறிகழற்
> றாளிணை காட்டாய்!
> திருப்பெருந் துறையுறை
> சிவபெரு மானே!
> யாவரும் அறிவரி
> யாய்!எமக் கெளியாய்!
> எம்பெரு மான்!பள்ளி
> எழுந்தரு ளாயே!

# நான்காவது திருப்பாடல்

மேலைத் திருப்பாட்டில் சிவபெருமானை விளித்தது போன்றே, இத்திருப்பாட்டிலும் மாணிக்கவாசகர், ''திருப் பெருந்துறையுறை சிவனே'' என்கிறார். கிடைத்தற்கரிய அரும்பிறவி மனிதப்பிறவி என்று சொல்லப்படுவதற்கே காரணம், நல்லது இது கெட்டது இது என்று பொருள்களைப் பகுத்தறிந்து காணும் பகுத்தறிவு மனிதப் பிறவிக்கு வாய்த் திருப்பதோடு, இறைவன் உய்யக் கொள்வதற்கு இடமாக மனிதப்பிறவியை மாற்றிக் கொள்ளலாம் என்பர். ஏனெனில் ''அவனருளாலே அவன்தாள் வணங்கும்'' வாழ்க்கை மனிதப் பிறவிக்கே உரியதாகும். பழந்தமிழர் கண்ட நெறியெனப் படுவது மக்களொடு மகிழ்ந்து, மனையறம் காக்க, மிக்க காமத்து வேட்கை தீர்ந்தால் தொலைவில் சுற்றமுடன் துறவறம் காப்பதாகும். இவ்வுலக இன்பத்திற்கு—சிற்றின் பத்திற்கு ஓர் எல்லையுண்டு என்று கண்டு, ஒருசில ஆண்டு களுக்குப்பின் பேரின்பநெறி நிற்கத் தலைப்படவேண்டும் என்பதாகும் என்பர். கற்றதனால் ஆய பெரும்பயனே கடவுளை வணங்குவதற்கு என்பர் திருவள்ளுவர்.

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

'இசை என்ற சொல்லே இசைவிப்பது என விரியும். எனவே இன்னிசை வீணையர் வீணையில் இசை கூட்டி எழுப்பு கின்றார்கள். யாழ் வாசிப்பவர் ஒரு பக்கலிலிருந்து யாழை இனிமையுற இசைக்கின்றனர். இறைவன் வீணை இசைக்கும் யாழிசைக்கும் வயப்படுவான் என்பதனை மாணிக்கவாசகரே திருவண்டப்பகுதியில் (34) ''இன்னிசை வீணையில் இசைந்

தோன் காண்க என்று குறிப்பிட்டு விளக்கியுள்ளார். இஃது இவ்வாறு ஒரு பக்கத்தில் நிகழ்ந்து கொண்டிருக்க, பிறிதொரு பக்கத்தில் இன்னிசையோடு மந்திரம் உச்சாடனம் செய்தனர்; தோத்திரம் ஓதினர் என்று உணர்த்தும் முகமாக, ''இருக் கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்'' என்றார். இருக்கு, யசுர், சாமம் அதர்வணம் என வேதம் நான்கு வகைப்படும். இந்நான்கு வேதங்களும் வடமொழியில் அமைந்துள்ளன. தோத்திரப் பாக்கள் தமிழ்மொழியில் அமைந்துள்ளவை யாகும். சிவபெருமானுக்குத் திருக்குடமுழுக்குச் செய்யும் பொழுது மந்திரம் ஓதுதல் மரபென்பதனைத் திருநாவுக் கரசர் பெருமான்,

**தொண்டனேன் பட்டதென்னே தூயகாவிரியின் நன்னீர்**
**கொண்டிருக் கோதியாட்டிக் குங்குமக் குழம்பு சாத்தி**

என்றும்

**மருதங்களா மொழிவர் மங்கையோடு**
**வானவரு மாலயனுங் கூடித் தங்கள்**
**சுருதங்களால் துதித்துத் தூ நீராட்டித்**
**தோத்திரங்கள் பலசொல்லித் தூபங்காட்டி**

என்றும் கூறியிருத்தலால் தோத்திரம் தமிழில்தான் அமைந் திருந்தது என்பதனை அறியலாம்.

இக்கருத்திற்கு மேலும் அரண்சேர்க்கும் வகையில் திருஞானசம்பந்தர்

**சொலவல வேதஞ் சொலவல கீதஞ் சொல்லுங்கால்**

என்றும்

**கீதத் திசையோடும் கேள்விக் கிடையோடு**
**வேதத் தொலியோ வாவீழி மிழலையே**

என்றும் கூறியிருப்பதனைச் சுட்டலாம்.

நம்பியாரூரார் திருக்கலய நல்லூர்ப்பதிகத்தில்,

சொற்பால பொருட்பால சுருதியொரு நான்குந்
தோத்திரமும் பலசொல்லித் துதித்துத் தன்திறத்தே
கற்பாருங் கேட்பாருமாய் எங்கு நன்கார்
கலைபயில் அந்தணர்வாழுங் கலயநல்லூர் காணே

என்று குறிப்பிட்டிருப்பது கொண்டு, அக்காலத்தே ஊர் தோறும் வடமொழி வேத சுலோகங்களும், தென்தமிழ்த் தோத்திரப் பாடல்களும் பாடப்பெற்றன என்னும் உண்மை யினை நாம் உணரலாம்.

சேக்கிழார் பெருமான் திருநாவுக்கரச நாயனார் புராணத்தில்,

அர்ச்சனை பாட்டேயாகும் சொற்றமிழ் பாடு
கென்றார் தூ மறைபாடும் வாயால்

என்று குறிப்பிட்டிருப்பது கொண்டும் இச்செய்தியின் உண்மையினை உணரலாம்.

"துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்" என்ற தொடர் இறைவனை வணங்கும் அடியவர் நிலையை அப்படியே புலப்படுத்திக் காட்டுவதாகும். அடுத்து, "தொழு கையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்" என்ற அடி அமைந்துள்ளது. திருநாவுக்கரசர் பெருமான் இறைவ னிடத்து ஆராத அன்பு செலுத்தி, தொழுகையராய்த் துலங்கிய பான்மையினைச் சேக்கிழார் பெருமான்,

கையும் தலைமிசை புனையஞ் சலியன
கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யும் தகையன கரணங்களுமுடன்
உருகும் பரிவினபேறு எய்தும்

—பா. 7

மெய்யும் தரைமிசை விழும்முன்பு எழுதரும்
மின்தாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடுமவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால்

என்று குறிப்பிட்டுள்ளமை கொண்டு தெரியலாம். மேலும் சேக்கிழார் பெருமான் பத்தராய்ப் பணிவார் புராணத்தில் (6) சிவபெருமான் திருவடித் தாமரையினையே நினைந் துருகும் மெய்யடியார்களின் நிலையினை,

ஈசனையே பணிந்துருகி இன்பமிகக் களிப்பெய்திப்
பேசினவாய் தழுதழுப்பக் கண்ணீரின் பெருந்தாரை
மாசிலா நீறழித்தங் கருவிதர மயிர்சிலிர்ப்பக்
கூசியே உடல்கம் பித்திடுவார் மெய்க்குணமிக்கார்.

என்றும் திருப்பாடல்வழிப் புலப்படுத்தியிருக்கக் காணலாம்.

''சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்'' என்னும் தொடர் கைகள் இரண்டனையும் தலைமேல் வைத்து ''ஹரஹர சிவசிவ'' என்று ஆனந்தப் பரவசப்பட்டு நெக்குருகி நின்றாடும் திறத்தினைப் புலப்படுத்தும்.

இவ்வாறு அகங்குழைந்து காணப்படும் அடியார்கள் ''என்னையும் ஆண்டு கொண்டு இன்னருள் புரியும்'' என்று இறுதியாக ஆனால் உறுதியாக வேண்டுகிறார்கள்.

பின் ''எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே'' என்று வழக்கம்போல் வேண்டி நிற்கிறார்கள். இந்திருப்பாடலில் அடியவர்கள் இறைவன் மாட்டுக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் நிலையினைத் தெள்ளத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

இன்னிசை வீணையர்
யாழினர் ஒருபால்;
இருக்கொடு தோத்திரம்
இயம்பினர் ஒருபால்;
துன்னிய பிணைமலர்க்
கையினர் ஒருபால்;
தொழுகையர் அழுகையர்
துவள்கையர் ஒருபால்;
சென்னியில் அஞ்சலி
கூப்பினர் ஒருபால்;
திருப்பெருந் துறையுறை
சிவபெரு மானே!
என்னையும் ஆண்டுகொண் (டு)
இன்னருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி
எழுந்தரு ளாயே!

# ஐந்தாவது திருப்பாடல்

''பூதங்கள் தோறும் நின்றாய்'' என்று திருப்பள்ளி யெழுச்சியில் ஐந்தாவது திருப்பாட்டு, ஐம்பூதங்கள் பற்றித் தொடங்குகின்றது. முன் திருப்பாட்டில் அடியவர்கள் சிவ பெருமானுக்குப் பணியாற்றுவான் வேண்டி, அவன்தன் வருகையை விருப்புடன் எதிர்நோக்கி நிற்றலைப் பற்றிக் கூறிய திருவாதவூரர், இப்பாட்டில் சிவபெருமான் தம் கண் முன் எழுந்தருளி வந்து, தன் மனமாசுகளைக் களைந்து, தமக்கு இன்னருள் புரியவேண்டும் என்று வேண்டிக் கொள்ளும் போக்கில் அமைந்திருப்பதனைக் காணலாம்.

''சீதங்கள் வயல்திருப்பெருந்துறை மன்னா என்று முதற்கண் திருப்பெருந்துறைக் கோயிலில் குடிகொண்டிருக் கும் சிவபெருமானை விளிக்கின்றார். ''நீர் பொருந்திய வயல்களாற் குழப்பட்ட திருப்பெருந்துறை என்னும் திருத் தலத்தின் அரசே'' என்பது இத்தொடரின் பொருளாகும். இத்தொடர் ஆழ்ந்த பொருளை உள்ளடக்கி நிற்கிறது. பிறவிக்குத் தம்மை உட்படுத்திக் கொண்ட உயிர்களின் வெப்பத்தைத் தணிவிப்பான் வேண்டி, அவன் குளிர்ச்சி நிறைந்த மருத வயல் சார்ந்த நிலங்களுக்கு அரசனாக அமர்ந்திருக்கின்றான் என்பதனைக் குறிப்பால் உணர்த்தி நிற்கிறது இத்தொடர் எனலாம். அடுத்து, அவனையே அடைக்கலம் என்று கொண்டுவிட்ட அடியவர்களுக்கு எளிய வனாகவும், மற்றவர்களுக்கு அரியனாகவும் இருக்கின்ற தன்மையைப் புலப்படுத்துவான் வேண்டிச் ''சிந்தனைக்கும் அரியாய்'' என்றார். பிறர்க்கு அரியவனாய் விளங்கும் ஆண்டவன் தனக்கு எளிவந்த தன்மையனாய் இருப்ப

தோடு அல்லாமல், தன்னை ஆட்கொண்டு அருள்பாலிக்கும் திறமுடையவன் என்பதனைப் புலப்படுத்துவார் போல, ''எம்பெருமான்'' என்று குறிப்பிட்டார்.

இவ்வாறு இறைவனை மூன்று வகையாக விளித்து அழைத்த பின்னர், அவனைக் கண்ணாரக் காணவேண்டும் என்னும் தம் வேட்கையை வெளிப்படுத்துவார் போல அவன் ''பூதங்கள் தோறும் நின்றாய் எனின் அல்லால் போக்கிலன் வரவிலன் என நினைப் புலவோர் கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால் கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை'' என்னும் தொடர் சிவபெருமான் நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் ஆகிய ஐந்து பூதங்களி மாட்டும்—எங்கும் நீக்கமற நிறைந் திருக்கின்றான் என்பதனைப் புலப்படுத்தி நின்றது.

''போக்கிலன் வரவிலன்'' என்பது ஆதியும் அந்தமும் இல்லாத நிலை போன்றதாகும். ''போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே'' என்று சிவபுராணத்தில் (77) மாணிக்கவாசகரே குறிப்பிட்டிருக்கக் காணலாம். ''பிறப்பி லார் இறப்பிலார்'' என்று அப்பர் பெருமான் இறைவனைச் சுட்டுதலும் இது கருதியேயாகும்.

''நினைப்புலவோர் கிதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால் கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை'' என்ற தொடர் உன்னை நெக்குருகப் பாடி ஆடி உன்னைப் பலரும் புகழ்ந்து பேசுவதைக் கேட்டிருக்கிறோமேயன்றி உன்னை மெய்யாக் கண்டவரை, உன்னைக் கேட்டவரைக் கண்டிலோம் என்றார். இறைவன் கண்ணால்காணக் கூடிய ஒருபொருள் அல்லன், கருத்தால், காரண காரியத்தால், அனுமானத்தால் உய்த் துணர்ந்து கொள்ளக்கூடிய நிலையிலேயே உள்ளான் என்பர். எனவே நீங்கள் நாங்கள் உணர்ந்து இறங்கி, நாங்கள் கண்டு கொள்ளும் நிலைக்கு அருளோடு வரவேண்டும் என்று வேண்டுகின்றார்.

இத்திருப்பாடலில் இதற்கு முன் அமைந்த நான்கு பாடல்களில் கட்டாயமாகக் காணப்பட்ட இயற்கை வருணனைகள் இடம்பெறவில்லை; ஆயினும் மனமாசுகளை அகற்றி—மனவிருளைப் போக்கித் தங்களை ஆட்கொள்ள வேண்டும் என்று இறைவனை வேண்டி நின்றனர். ஏனெனில் தங்களை அவன் அடிமைகள் எனக் கொண்டு, அடைக்கலம் தந்து ஆட்கொண்டால்தான், தாங்கள் உய்ய முடியும், ஈடேற்றம் காணமுடியும் என்று கருதினர். இவ்வுலகத்து உயிர்கள் சிவஞான இன்பத்தில் திளைத்து நிற்கவேண்டும் என்று வேணவாக் கொண்டன என்பது இத்திருப்பாட்டால் தெரியவருகின்றது.

இத்திருப்பாட்டின் வழி, சில செய்திகளை மாணிக்க வாசகர் நம் மனத்தகத்தே ஊன்ற வைக்கின்றார் எனலாம்.

முதலாவதாக இறைவன் ஐம்பூதங்களில் நிறைந்தொளிர் கின்றான். அவனுக்குப் பிறப்பு இறப்பு இல்லை. இளங்கோ வடிகள் சிவபெருமானைப் "பிறவா யாக்கைப் பெரியோன்" என்பர். இதனையே மணிவாசகப் பெருந்தகையார் "திருவெம்பாவையின் முதற்பாட்டில் சிவபெருமானை ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதி" என்று குறிப்பிட்டார். இவ்வாறு பிறப்பிறப்பற்ற பிஞ்ஞகனை ஆடிப்பாடித் தம்மை மறந்து தொழுகிறார்கள் மக்கள். அவன் புகழை நாவாரப்பாடி மகிழ்கின்றார்கள்; கூத்தாடிக் களிக்கின்றார்கள். சிவபெருமானைப் பார்த்தவர்கள் இல்லை; கேட்டவர்கள் இல்லை. இருப்பினும் அடியவர்களாகிய தங்கள் கண்முன் வந்து இறைவன் காட்சி தந்திட வேண்டு மென்று வேண்டுகோள் விடுக்கின்றார்கள். இவ்வாறு கண்ணுக்குக் காட்சி வழங்குவதோடு மட்டும் நின்றுவிடாமல், "ஏதங்கள் அறுத்து எம்மை ஆட்கொண்டு அருள்புரியும்" என்று கேட்டுக்கொள்கின்றனர். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் மும்மலங்கள் எனப்படும். இம்மும்மலங்களை

அழிக்கும் ஆற்றல் உடையவன் இறைவன் ஒருவனே ஆவன். எனவே தம் குற்றங்கள் அனைத்தையும் களைந்து, அடைக் கலப் பொருளாகத் தங்களை ஏற்றுக்கொண்டு அதாவது அடிமைகொண்டு ஆதரிக்க வேண்டுமென்று கேட்டு, ''எம்பெருமான்! பள்ளி எழுந்தருளவேண்டும்'' என்று விண்ணப்பித்து நின்றார்கள்.

''பூதங்கள் தோறுநின்
றாய்'' எனின் அல்லால்
''போக்கிலன் வரவிலன்''
எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல்
ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக்
கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப்
பெருந்துறை மன்னா!
சிந்தனைக் கும்அரி
யாய்! எங்கள் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெம்மை
ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி
எழுந்தரு ளாயே!

# ஆறாவது திருப்பாடல்

'பூதங்கள் தோறும் நின்றாய்' என்று தொடங்கிய சென்ற திருப்பாடலில் சிவபெருமான் தங்கள் மன மாசு களைக் களைந்து தங்களை அடிமை கொண்டு ஆட்கொண் டருள வேண்டும் என்று குறிப்பிட்ட மாணிக்கவாசகர், இத்திருப்பாட்டில் அடியவர்கள் இறைவனை வழிபாட் டினால் அடைந்தனர். யானும் அவ்வாறே தொடர்வேன், எனக்கும் அருள் புரிக என வேண்டுவார் முதற்கண் சிவபெருமானைப் புகழ்ச்சிச் சொற்களோடு முன்னிலைப் படுத்த எண்ணி 'அணங்கின் மணவாளா' என்றார்.

'உமையம்மையின் கணவனே' என விளித்துள்ள மையைச் சற்று ஆழ நோக்கி ஓர் உயரிய உண்மையை உணர வேண்டும். ஏனெனில் இதில் தமிழ்ப் பண்பாடு அமைந்துள்ளது. இறைவன், இயற்கை, பெண்மை இவற்றைப் போற்றுவதென்பது தமிழ்ப் பண்பாடும் மரபும் ஆகும். இறைவனின் தோற்றப் பொலிவு இயற்கையில் ஒளிவிடுகின்றது. எங்கெங்கெல்லாம் அழகு கொலு வீற் றிருக்கின்றதோ அங்கங்கெல்லாம் இறைவன் திருக்கோயில் கொண்டிருப்பதாக நம் முன்னோர் கருதினார்கள். திருமுகாற்றுப்படை இத்தகைய இடங்களைப்பட்டியலிட்டுக் கூறும். மூன்றாவதாகப் பெண்மையின் மென்மையில் இறைவனின் அருள் உள்ளத்தைக் காணலாம். கடவுள் எங்கும் இலங்கினாலும் தாயைப் படைத்து அவனிடத்தில் அளவற்ற அன்பையும் படைத்திருக்கிறான் என்பர். இத்தகு பெருமைக்குரிய பெண் பிறவியினைச் சிறப்பித்துப் பேசுவது தமிழர் மரபாகும். ''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல

மாதவம் செய்திட வேண்டும் அம்மா'' என்பர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. ஏனெனில் ''அவர் பங்கயக்கை நலம் பார்த்துத்தான் பாரில் அறங்கள் வளருமம்மா'' என்று மேலும் குறிப்பிடுவர். உமை அம்மை 'அறம் வளர்த்த நாயகி' யாகத் திகழ்கிறாள். சிவன் அளித்த இருநாழி நெல் கொண்டு காஞ்சிபுரத்தில் காமாட்சியாகக் கணக்கற்ற அறங்களை இயற்றினாள் என்று நூல்கள் கூறும்.

உலக வழக்கில் இன்ன ஆணினுடைய மனைவிதான் இவர் என்று பெண்ணை அறிமுகப்படுத்தும் மரபு உளது. ஆனால் தமிழின் தொல்பழம் வழக்கு இவ்வாறில்லை. திருமுருகாற்றுப்படையில் முருகப் பெருமானை நக்கீரர் பெருமான் 'மறுவில் கற்பின் வாணுதல் கணவ' என்று குறிப்பிட்டுள்ளார். 'குற்றமற்ற கற்பினையுடைய தெய்வ யானையின் கணவனே' என்பது இத்தொடரின் பொருளாகும். அது போன்றே ஈண்டு 'அணங்கின் மணவாளா' என்று 'உமையம்மையாரின் கணவனே' என்று சிவபெருமான் அழைக்கப்பட்டிருத்தலைக் காணலாம். இவ்வாறு பெண்ணைக் கூறி, அப்பெண்ணின் கணவனே என்று அழைக்கும் மரபினை நோக்கப் பெண்ணின் பெருமை விளங்கும். குறுந்தொகைப் பாட்டொன்றிலும் தலைவன் ஒருவன் ''நல்லோள் கணவன் இவன் எனப் பல்லோர் கூற யாம் நாணுகம் சிறிதே'' என்று குறிப்பிடுவதும் நோக்கப் பெண் பெற்ற பெருவாழ்வு விளங்கும். நல்ல-உத்ததமான பெண்ணின் கணவனாக விளங்குவது என்பது தனிச் சிறப்பு வாய்ந்ததாகும்.

அடுத்து, ''செப்பு உறுகமலங்கள் மலரும் தண்வயல் சூழ் திருப்பெருந்துறை உறை சிவபெருமானே'' என்றார். சிவப்பு நிறம் வாய்ந்த தாமரை மலர்கள் விரிந்துள்ள-குளிர்ச்சி பொருந்திய வயல்களாற் சூழப்பட்ட திருப்பெருந்

துறையில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே!'' என்பது இதன் பொருளாகும்.

எம்பெருமான் - எனது தலைவனே! எனத் தொடங்கி 'பப்பு அறவீடு இருந்து உணரும் நின் அடியார்' என்று அடியவரைக் குறிப்பிடுகின்றார். பரப்பு நீங்கப் பேரின்ப நிலையினின்றும் உணர்கின்ற உனது அடியவர்கள் என்பதனால் வேகமான வாழ்க்கையினை மேற்கொண்ட அடியவர்களை ஆட்கொள்ளல் உனது கருத்தாக இருக்க வேண்டும் என்றார். ''வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க'' என்ற சிவபுராணத் தொடரும் இவ்வுண்மையினை உணர்த்தும். இவ்வடியவர்கள் 'பந்தனை வந்தறுத்தார் அவர் பலரும்' என்றார். பந்தனை என்பது பாசக் கட்டு. பிறந்து விட்ட காரணத்தால் வினையினை நுகர வேண்டும். வினை நுகர்ந்து கழிவுண்டாய பிறகு நல்லறிவு கொளுத்தப்பட்டு உடலுறுப்புகளால் இறைவனை வழிபடற்கு இயலும் என்க. அப்பொழுதுதான் பாசக் கட்டறுதல் என்பது நேரும்.

''மைப்புறு கண்ணியர் மானுடத்தியல்பின் வணங்குகின்றார்' என்னும் தொடர் 'மையின் தன்மை சூழப் பொருந்திய கண்களுடைய குல மகளிரும் அறிவுடைமைக்கு அறிகுறியாகும் சிறப்பினால் சிவனைப் பணிகின்றார்கள்' என்னும் பொருள் கொள்ளும்.

''மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலை'' எனும் திருஞான சம்பந்தர் திருமயிலாப்பூர்த் தேவாரம் (2) மையினைப் பூசுதல் மகளிர் வழக்குஎன்பதனை உணர்த்தும். அடியார் பலரும், பாசத்தினை அறுத்தவர் பலரும், கண்ணியர் பலருமாகச் சிவனை வழிபடல் மேற்கொள்ளுகின்றனர் என்பதனை மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார்.

இறைவனை வணங்குவதென்பதே மானுடத் தன்மைகளுள் ஒன்று என்று புலப்பட மானுடத் தன்மையின் வணங்குகின்றார் என்பர். ''கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை'' என்று திருக்குறளும் இதனை உணர்த்தும். இறைவன் உடலுறுப்புகளைப் படைத்திருப்பதே அவ்வுறுப்புகளைக் கொண்டு அவனை வணங்குவதற்கே என்பர். ''தலையே நீ வணங்காய்'' என்ற தேவாரத் திருப்பாட்டானும் இவ்வுண்மையை உணரலாம். ''கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்'' என்ற குறளும் கடவுளை வணங்குதலே கற்றதன் சிறப்பாக அமையும் என்பர். மனிதர் அறிவுடையோர் எனக் கருதப்பட வேண்டுமானால், அவர்கள் தீயன சிறிதும் நெஞ்சில் கருதாமலிருக்க வேண்டும் என்பர்.

'செப்புறு கமலங்கள் மலரும் தண்வயல் சூழ் திருப்பெருந்துறையுறை சிவபெருமானே' என்று இறைவனைக் குறிப்பிட்டு 'எமை ஆண்டு இப்பிறப்பு அறுத்து அருள் புரியும்' என வேண்டுகின்றார்.

எங்களை அடிமை கொண்டு, நாங்கள் பெற்றிருக்கும் இப்பிறவியினை யொழித்து எங்கட்கு அருள் புரிவீராக என்று விண்ணப்பித்து, இறுதியாக 'எம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே' என்கிறார்.

தம்மை அடிமை கொண்டு, பிறவி வேரை அறுத்து, புவியில் மீண்டும் பிறவாமற் காத்து அருள வேண்டும் என்பதனையே இத்திருப்பாடல் உணர்த்துகின்றது.

பப்பற வீட்டிருந்து
　　உணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத்
　　தார்அவர் பலரும்

மைப்புறு கண்ணியர்
மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்,அணங்
கின் மண வாளா!
செப்புறு கமலங்கண்
மலரும்தண் வயல்சூழ்
திருப் பெருந் துறையுறை
சிவபெரு மானே!
இப்பிறப் பறுத்தெமை
ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி
எழுந்தரு ளாயே!

# ஏழாவது திருப்பாடல்

மேலைத் திருப்பாட்டில் மாணிக்கவாசகப் பெருமான் வழிபாட்டின் சிறப்பினை வற்புறுத்தினார். தம்மைச் சிவபெருமான் இனி இப்புவியில் வந்து பிறக்கவிடாமல் பிறப்பறுத்து ஆட்கொள்ள வேண்டும் என்ற வேண்டு கோளினை விடுத்தார். 'அது பழச்சுவையென அமுதென அறிதற்கு அரிதென எளிதென அமரரும் அறியார்' எனத் தொடங்கும் இத்திருப்பாட்டில் சிவானந்தானுபவம் இத்தன்மையது என்று விளக்கம் தருவார் போல் முதற்கண் சிவபெருமானை 'மதுவளர் பொழில் திருவுத்தரகோச மங்கை யுள்ளாய்' என்று விளித்தார். தேன் ததும்பும் மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்து விளங்கும் திருவுத்தரகோச மங்கையென்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண் டுள்ளவனே' என்று மணிவாசகப் பெருந்தகையார் விளித் துள்ளமைக்குக் காரணம் உளது. திருவுத்தரகோச மங்கை என்னும் சிவத்தலம் இன்றைய இராமநாதபுர மாவட்டத் தில் உள்ளது. திருவுத்தரகோச மங்கை என்னும் திருப்பதி யினைக்குறிப்பிட்ட அடிகளாருக்குத் தம் நெஞ்சில் எப்போ தும் நீங்காது குடிகொண்டிருக்கும் திருப்பதியாம் திருப்பெருந் துறை நினைவுக்கு வருகின்றது. திருப்பெருந்துறைத் திருத்தலத்தில்தான் மாணிக்கவாசகரைச் சிவபெருமான் ஆட்கொண்டார். எனவே அப்பதி அவர் வாழ்வில் ஒரு முக்கிய இடத்தினைப் பெறுகின்றதெனலாம்.

இனிச் சிவானந்தானுபவம் எத்தகையது என்று விளக்கப்புகுகின்றார். 'அது பழச்சுவையென அமுதென அறிதற்கரிதென எளிதென அமரரும் அறியார்' என்றார். தேவருலகில் வாழ்பவர்கள் யாவரும் சிவானந்தானுபவ

மானது கனிந்த பழத்தின் சுவை போலவும், அமுதம் போலவும், அறிதற்கு இயலாதது என்றும், அறிதற்கு எளியது என்றும், அறியமாட்டார்கள் என்றார். உள்ளபடியே சிவானந்தானுபவம் :இவ்வாறு இருக்கும் என விளக்கப்பட முடியாமல் அனுபவப்பட வேண்டிய ஒன்றாகும். ஆனால் உவமை கூறி ஒருவாறு தெளிவுறுத்தலாம். சிவானந்தானுபவம் பழச்சுவை போல் இனிக்கும் எனலாம்; அமுதம் போலத் தித்தித்திருக்கும் எனலாம். சிவானந்தானுபவ நிலையைத் திருநாவுக்கரசர் பெருமான் திருவிடை மருதூர்த் திருப்பதிகத்தில் (6)

> **கனியினும் கட்டிபட்ட கரும்பினும்**
> **பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும்**
> **தனிமுடி கவித்தாளு மரசினும்**
> **இனியன்தன் அடைந்தார்க்கு இடை மருதனே**

என விளக்குவர். மேலும் அவர் தம்முடைய தனிக் குறுந்தொகைப் பாட்டொன்றிலும் (10)

> **தெள்ளத்தேறித் தெளிந்து தித்திப்பதோர்**
> **உள்ளத் தேறல் அமுதவொளி வெளி**
> **கள்ளத்தேன் கடியேன் கவலைக்கடல்**
> **வெள்ளத்தேனுக் கெவ்வாறு விளைந்ததே**

என்றும் குறிப்பிட்டிருக்கக் கணலாம். சிவானந்தானுபவம் சிவனன்பர் அல்லாதார்க்கு அறிதற்கரிதாகவும், அதே சமயத்தில் சிவன்பாலே சித்தம் நிறுத்திய சிவனடியார்களுக்கு எளிதிற் கைகூடும் ஒன்றாகவும் அமைவதனால் 'அறிதற்கரிதென எளிதென' என மாணிக்கவாசகர் குறிப்பிட்டார்.

பின்னர், 'இது அவன் திருவுரு; இவன் அவன் எனவே எங்களை ஆட்கொண்டு இங்கு எழுந்தருளும்' என்றார். 'இவ்வுலகத்தில் இப்பிறவியில் வந்து அமைந்ததாகிய

உடலாகிய இது, சிவபெருமானது திருமேனியாகத் திகழு மாறும், இவ்வுடம்பில் விளங்கும் உயிராகிய இவன் அவனாகிய சிவமாக விளங்குமாறும் அருளிநின்று எங்களை ஆட்கொண்டருள்வாயாக' என்று வேண்டுகின்றார்.

உடலானது சிவன் திருமேனியாதலும், அவ்வுடம்பின் உள் நின்ற உயிர் அருளொடுங் கூடிச் சிவமாய் நின்றதெனக் கொள்ளலாம். இதனையே மாணிக்கவாசகர் திருவாச கத்தில்,

சித்தமல மறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக் கருளியவா(று) ஆர் பெறுவார்
அச்சோவே

என்றார். எனவே உலக உயிர்கள் தத்தம் உடம்பினை மாசுகள் களைந்து இறைவன் உறையும் இடமாக ஆக்கிவிட் டால் அவ்வுடலில் இறைவன் மகிழ்ச்சியுடன் குடிகொள்வான் என்ற கருத்தினை மாணிக்கவாசகர் திருவாசகம் கீர்த்தித் திருவகவலில் (9 ; 8)

அடியார் உள்ளத் தன்பு மீதூரக்
குடியாக் கொண்ட கொள்கையும் சிறப்பும்

என்று குறிப்பிடுகின்றார்.

'ஆன்மாவின் வேறாய்ச் சிவன் கண்ணேயுளவாகிய முற்றுணர்தல் முதலிய எண்வகைக் குணங்களும் ஆன்மா வின்மாட்டு மேம்பட்டு விளங்கும் விளக்கமே சிவானந்த இன்பம்; ஆன்மா அதுவாய் அழுந்திநின்று அவ்விளக்கத்தை அறிதலே அனுபவம் எனப்படும், எனும் சிவஞானபாடியத் தானும் (398) வலியுறுத்தப்படுவது காண்க எனச் சைவ சித்தாந்த சாத்திர வல்லுநர்கள் குறிப்பிடுவர்.

''எது எமைப் பணி கொளும் ஆறு; அது கேட்போம்'' என்ற தொடர் 'எங்களை ஏவல் கொள்ளுதற்கமைந்த பணி

யாது? அதனைக் கேட்க முந்துகின்றோம் யாம்' என்ற பொருளைத் தருவதாகும்.

ஓர் உயிரில் — ஆன்மாவினுள் சிவபெருமான் குடி கொண்டு விட்ட பிறகு நிகழ்வன அனைத்திற்கும் அச்சிவ பெருமானே பொறுப்பேற்றுக் கொள்கிறான் என்பதனை.

வேண்டத்தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுவதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்றுண் டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே

— திருவாசகம் ; குழைத்தபத்து ; 6.

என்பதனால் அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறு சிவபெருமானிடம் வேண்டுகோள் விடுத்து, அவரைப் பள்ளியை விட்டு எழுந்தருளி வந்து தம்மை ஆட்கொள்ள வேண்டும் என்று மாணிக்கவாசகர் வேண்டி நிற்கிறார்.

அது பழச் சுவையென
அமுதென அறிதற்(கு)
அரிதென எளிதென
அமரரும் அறியார்;
இது அவன் திருவுரு,
இவன் அவன் எனவே
எங்களை ஆண்டு கொண்(டு)
இங்கெழுந் தருளும்

மதுவளர் பொழில்திரு
உத்தர கோச
மங்கையுள் ளாய்! திருப்
பெருந்துறை மன்னா!
எது எமைப் பணி கொளும்
ஆ(று)? அது கேட்போம்:
எம்பெரு மான்! பள்ளி
எழுந்தரு ளாயே!

—பா. 8

# எட்டாவது திருப்பாடல்

இறைவனிடத்துக் கிடைக்கக் கூடிய சிவானுபவத்தை விழைந்து, அதனை உறுதியாகப் பெற்றுத் துய்க்க நினைத்த மாணிக்கவாசகப் பெருமான் 'முந்தியும் முதல் நடு இறுதியும் ஆனாய்'' என்று தொடக்கம் அமைந்துள்ள இத்திருப்பாட்டில், தனக்கென்று ஓர் ஊரினைக் கொண்டிராதவனும், தனக்கென்று ஒரு பெயரில்லாதவனும் ஆன சிவபெருமான் ஓர் உருக்கொண்டு வந்தருளும் சிறப்பினைக் கூறத் தொடங்கி, ''ஆரமுதே'' என அன்பாய் விளித்தார். இங்கு ''ஆரமுது'' என்ற சொல் பெறுவதற்கரிய முத்தி இன்பத்தினை உணர்த்தி நிற்கிறது.

எவ்வளவு பருகினாலும் தெவிட்டாது மேலும் மேலும் பருகத் தூண்டும் ஒரு பொருளே ஆரமுதமாகும். முத்தி இன்பமாக விளங்கும் சிவபெருமான் உயிர்களுக்கு ஆதாரமாகப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களிலும் உடனாய்த் திகழும் முறைமையினைக் குறிப்பிடுவார். ''முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்'' என்றார். ''முந்திய'' என்ற சொல் ஓர் ஆழ்ந்த உட்பொருளைக் கொண்டதாகும். அண்ட சராசரங்களில் உறையும் அனைத்து உயிர்க்குலங்களுக்கும் முன்னே தோன்றி அனைத்துயிர்களுக்கும் ஆதாரமாய் விளங்கும் ஆதார சுருதியாய் விளங்கும் இறைவனைக் குறித்தவாறாம். 'முதல் நடு இறுதி'' என்பது முத்தொழில்களைக் குறிக்கும். படைப்புத் தொழிலைச் செய்பவன் பிரம்மன்; காத்தல் தொழிலைச் செய்பவன் திருமால்; அழித்தல் தொழிலைச் செய்பவன் உருத்திரன். இம் முத்தொழிலினை முறையே ஆற்றுவோரும்

அறிய முடியாதவன் சிவபெருமான் என்றபடி இவ்வாறு மூல பண்டாரமாய், மூல முதற் பொருளாய் விளங்கும் சிவபெருமான், தன் துணைவியாகிய சத்தியாம் உமையம்மையுடன் அடியவர் நெஞ்சினுள் புகுந்து நிறையும் மேன்மையுடையவன் ஆதலின் "பந்தணை விரலியும் நீயும், நின் அடியார் பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே" என்றார். "பந்தினை யணைந்த விரல்களையுடைய உமையம்மையும் நீயும் உன்னுடைய அடியவர்களது பழமை வாய்ந்த குடிசைகளாகிய உள்ளங்கள் தோறும் உவந்து திருக்கோயில் கொண்டு விளங்கும் மேலானவனே" என்று சிவபெருமானை மாணிக்கவாசகப் பெருமான் அழைப்பது ஓர் ஆழ்ந்த நுண் பொருளைக் கொண்டிருப்பதாகக் கொள்ளலாம். பந்தினைக் கையிலேந்தியிருந்தலும் அதுகொண்டு விளையாடுதலும் மகளிர் செயல்களாகும். "பந்துசேர் விரலாள்" எனப் பாங்குடன் தம் பதிகத்தில் திருஞான சம்பந்தர் குறிப்பிடுவர். புறத்தே உலகத்திற் காணலாகும் குடிசைகள் கால வெள்ளத்தில் கரைந்து நைந்து சிதைந்து போகும். அதுபோல ஆன்மாக்களும் திருவருளினால் கரைந்துருகி உலகக்கட்டு ஒருநாள் சிதைந்து காணப்பெறும். ஆயினும் அவ்வன்பர் உளமாகிய குடில்களில் ஆண்டவன் திருக்கோயில் கொண்டு உறைகிறான். இதனைத் திருநாவுக்கரசர் பெருமானும் தம் திருவையாற்றுப் பதிகத்தில் (8)

நகமெலாந் தேயக் கையால்
நாண்மலர் தொழுது தூவி
முகமெலாம் கண்ணீர் மல்கமுன்
பணிந்தேத்துந் தொண்டர்
அகமலாற் கோயில் இல்லை
ஐயன் ஐயாற னார்க்கே

துறவுநிலைக்குப் பெயர்போன பட்டினத்தடிகளும்,

அருள்நனி சுரக்கும் பிரளய விடங்கநின்
செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற
அமையாக் காட்சி இமையக்
கொழுங்லைதயு முடனே கொண்டுஇங்கு
எழுந்தருளத் தகும் எம் பெருமானே

தாயுமான தயாபரர்,

நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்
அன்பே மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே

என்றும் அன்பர் உள்ளமே அம்மையும் அப்பனும் எழுந்தருளி உறையும் இடம் எனக் குறித்திருப்பதனை இங்கு நினைத்துப் பார்க்கத் தகுவனவாகும்.

“செந்தழல் புரை திருமேனியுங் காட்டி” என்ற தொடர் ‘சிவந்த நெருப்பைப் போன்ற நிறம் வாய்ந்த வடிவத்தைக் காட்டியருளி’ என்னும் பொருளை உணர்த்தி நிற்கிறது.

“திருப்பெருந்துறையுறை கோயிலுங் காட்டி” என்ற தொடர், ‘சிவபெருமான் திருப்பெருந்துறையில் கோயில் கொண்டு உறைகின்றான், என்பதனைக் குறிக்கின்றது.

“அந்தணன் ஆவதும் காட்டி” என்ற அடுத்த தொடர், ‘வேதியனாக உருக்கொண்ட நிலை காட்டி’ என்பதனை உணர்த்தும். குருந்தமரத்தினடியில் இறைவன் வேதியனாக உருத்தாங்கி வந்து மாணிக்கவாசகருக்கு உபதேசம் செய்தருளிய செயலை இத்தொடர் குறிக்கின்றது எனலாம்.

மேலும் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஒளிரும் சிவபெருமான் மாணிக்கவாசகப் பெருந்தகையாரை இவ்வுலகப் பற்றுப் பாசங்களின்றும் உய்விப்பான் வேண்டி, வேதியர் வடிவந்தாங்கி வந்து, குருந்த மரத்தின் கீழ் அமர்ந்து

கொண்டு, மாணிக்கவாசகப் பெருமானாருக்கு உபதேசித்த செயலைக் குறிப்பிட்டு நின்றது. "ஆண்டாய்" என்ற சொல் இறைவன் மாணிக்கவாசகரை ஆட்கொண்ட நிலையைச் சுட்டுவதாகும்.

இவ்வாறு உயிர்களைப் பக்குவப்படுத்தி, அவ்வுயிர்களுக்கு உரிய காலத்தில் அருள்செய்து ஆட்கொள்வதனையே கடப்பாடாகக் கொண்டிருக்கும் சிவபெருமானே! நீவிர் திருப்பள்ளியினின்றும் நீங்கி எங்களை ஆட்கொண்டருள்க என மாணிக்கவாசகர் மனங்கசிந்து வேண்டுகின்றார்.

முந்தியும் முதல்நடு
இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர்,
யாவர்மற்(று) அறிவார்?
பந்தணை விரலியும்
நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும் எழுந்
தருளிய பரனே!
செந்தழல் புரைதிரு
மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை
கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும்
காட்டிவந்(து) ஆண்டாய்!
ஆரமுதே! பள்ளி
எழுந்தரு ளாயே!

# ஒன்பதாவது திருப்பாடல்

இதற்கு முந்தைய திருப்பாட்டில் சிவபெருமானின் உண்மை நிலையினையும், உலக உயிர்களை உய்விப்பான் வேண்டித் தான் விளக்கங் காட்டும் மூவகைத் திருமேனி களையும் உணர்த்திய மாணிக்கவாசகர் ''விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா விழுப்பொருளே'' என்று இத்திருப்பாடலைத் தொடங்குகின்றார், சிவபெருமான் உலக உயிர்களுக்குப் பேரின்ப நிலையினைத் தர அருளுள்ளம் கொள்கிறார். 'விழுப்பொருள்' என்றால் மிகச் சிறந்த பொருள் என்று பொருள் வரும், ''விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா விழுப்பொருள்'' என்பதனால் விண்ணில் வாழ்பவர்களும் அத்துணை எளிதாகச் சிவபெருமானை நெருங்கிவிட முடியாது என்பது புலப்பட்டவாறாம். ஆயினும் மண்ணுலகத்தில் வாழும் அடியவர் இறைவன் மாட்டு ஆராக்காதல் கொண்டு அவன் எழுந்தருளும் கோயிலாகத் தங்கள் உள்ளத்தை வைத்துக் கொண்டிருப்பதால் அவர்களுக்கு அவனுடைய அருள் எளிதாகக் கிட்டிப் பேரின்ப நிலைக்கு வழிவகுக்கின்றது ''உனதொழுப்படியோங்கண் மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே'' என்ற தொடர். உன் விருப்பத்தின் காரணமாகவே உலக உயிர்கள் இம்மண் ணுலகில் பிறப்பெடுக்கின்றனவேயன்றி அவ்வவற்றின் ஆசை காரணமாகப் பிறப்பெடுக்கவில்லை என்பதனை இத்தொடர் கொண்டு உணர்த்தினார், ''வான்பழித்து மண்புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்'' என்னும் திருவாசகத் தொடர் இக்கருத்தினை அரண் செய்யும்.

''வண் திருப் பெருந்துறையாய்'' என்று சிவபெருமானை விளிக்கின்றார். சிவன் திருக்கோயில் கொண்டு திகழும் திருப் பெருந்துறை நிலவளம், நீர்வளம் பெற்றிருப்பதோடு, வாழும் உயிர்களை வான் அனைய அருள்பெற்று உய்ய வைக்கும் திருத்தலமாகவும் துலங்குகின்றது என்பதனை இத் தொடர் உணர்த்தி நிற்கிறது. பரம்பரை பரம்பரையாக நாள்தோறும் திருக்கோயிலுக்குச் சென்று வலம்வந்து ஐந் தெழுத்தினை ஓதி, சிவபெருமானுக்குப் பல்லாற்றானும் பாங்குறத் திருத்தொண்டு செய்து அவனுடைய அடியாராகத் திகழும் செம்மாப்பு உடையராயிருத்தலின் ''வழியடியோம்'' என்று குறிப்பிட்டார்.

அடுத்து, ''கண்ணகத்தே நின்று கனிதரு தேனே'' என்றார். தேன் உடலுக்கு உயிர்ப் பொருளாய் அடைந்து நலம் பயப்பது; நெடுநாள் வாழவைப்பது. ஈண்டுக் 'கண்' என்பது ஞானத்தைக் குறிப்பதாகப் பொருள் கொள்ள வேண்டும். சிவபெருமான் ஞானத்தைத் தந்து, உயிர்களைப் பேரின்பத்தில் திளைக்குமாறு செய்கிறான். கசப்பு மருந்து களை நோய்க்காலத்தே உண்ண, அக்கசப்பு மருந்துகளோடு தேன் சேர்த்து உண்ணுதல் வேண்டும். தேனையே உண்ணும் பொருளாகக் கொண்டுவிட்டால் மகிழ்ச்சி மிகுவதற்குக் கேட்கவா வேண்டும்? சிவபெருமான் உடலுக்கு நலம் பயக்கும் தேனாய், உயிருக்கு உரமூட்டும் தேனாய்த் திகழ்கிறான் என்பது இங்கு நாம் காண வேண்டிய குறிப்பாகும்.

''தேனே என்றவர் அடுத்துக் ''கடலமுதே'' என்று சிவபெருமானை விளிக்கின்றார். இங்கும் ஒரு குறிப்பைக் காணலாம். தேவரும் அசுரரும் கடல் கடைந்து அமுதம் எடுக்க முற்பட்டனர். ஆனால் முதற்கண் நஞ்சு வெளிப் பட்டது. அதனைக் கண்ட தேவரும் அசுரரும் அஞ்சி

யோடினர். ஆனால் சிவபெருமான் உலக உயிர்கள் வாழ வேண்டி, அக்கொடிய நஞ்சினையும் உண்டு நீலகண்டரானார். தேவரையும் அசுரரையும் வாழவைத்தார். நஞ்சு வெளிப்பட்ட பின்னரே அமுதம் வந்தது, இதனால் அனைவரும் பயன்பெற்றனர். அமுதம் பிறர் பெறத் தான் நஞ்சை உண்டு "நீலமணி மிடற்றனானார். நஞ்சுண்ட கண்டனாயிருந்தாலும் சாவாது நீண்ட நெடுங்காலம் ஏன்? என்ஞான்றும் வாழுபவரானார். ஒருவர் நீண்ட நெடுங்காலம் வாழ வேண்டுமென்றால் ''நீலமணி மிடற்று ஒருவன் போல மன்னுக பெரும நீயே'' என்று வாழ்த்த வேண்டும் என்ற அளவிற்குச் சிவபெருமானின் நிலைத்த தன்மை புறநானூற்றுக் காலத்திலேயே புலப்பட்டது.

''கடலமுதே'' என்றவர் "கரும்பே'' என்றார். கரும்பு சுவை நிரம்பியது. கரும்பைக் கடித்துத் தின்றால் கிடைக்கும் சாறு சுவைமிக்கது. எந்த வயதினரும் விரும்பிக் குடிப்பது: சிற்சில நோய்களுக்கு மருந்தாகவும் அமைவது. எனவே மாணிக்கவாசகர் ''கரும்பே'' எனச் சிவபெருமானை அழைத்தார். திருநாவுக்கரசர் பெருமானும்,

> **கனியினும் கட்டிபட்ட கரும்பினும்**
> **பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும்**
> **தனிமுடி கவித்தாளும் அரசினும்**
> **இனியன் தன் அடைந்தார்க்கு இடைமருதனே**

திருவிடைமருதூர் : 10

என்று திருவிடைமருதூர்ஈசன், பழம், கரும்பு, பாவை முதலிய எவரினைக் காட்டிலும், தன்னை அடைக்கலமாக அடைந்த அடியவர்களுக்கு இனியனாக இருக்கின்றான் என்று பாடியுள்ளார்.

"விரும்பு அடியார் எண் அகத்தாய்" என்ற அடுத்த தொடர், அன்பு வடிவமான தொண்டர்களின் கருத்தில் உள்ளவனே என்னும் பொருளினைக் குறித்து நின்றதாகும். அடியவர் உள்ளக்கிழியில் சிவனின் உருவெழுதி நிற்கின்றனர் என்பதாம்.

"உலகுக்கு உயிராவாய்" என்ற தொடர் உலக உயிர்களுக்கெல்லாம் சிவபெருமான் உயிராக — தலைவனாக — நாயகனாக விளங்கும் தன்மையை விளக்கி நின்றதாகும்.

"எம்பெருமான்; பள்ளி எழுந்தருளாயே" என்ற இறுதி அடி, கண்ணை மூடிக் கண்ணைத் திறக்கும் நேரங்கூடத் தன் நெஞ்சினின்றும் நீங்காதவனாய் நிலைத்துநிற்கும் சிவபெருமான் பள்ளியைவிட்டு எழுந்து தம்மை ஆட்கொண்டு அருள வேண்டும் என்று வேண்டுகின்றார்.

விண்ணகத் தேவரும்
நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளே! உன
தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து
வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை
யாய்வழி அடியோம்
கண்ணகத் தேநின்று
களிதரு தேனே!
கடலமு தே! கரும்
பே! விரும் படியார்
எண்ணகத் தாய்உல
குக்(கு) உயிரானாய்
எம்பெரு மான்! பள்ளி
எழுந்தரு ளாயே!

# பத்தாவது திருப்பாடல்

சென்ற திருப்பாட்டில் இம்மண்ணகத்தே வாழும் உயிர்களைச் சிவானந்தக் கடலில் ஆழ்த்தி, பேரின்ப வெள்ளத்தில் திளைக்கச் செய்து, அப்பெருமான் உயிர்களுக்குத் தேனாய், கடலமுதாய், கரும்பாய் விளங்கும் நிலையினைப் புலப்படுத்திய மாணிக்கவாசகர், ''புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம்போக்குகின்றோம்'' என்று சீரிய கருத்தமைதி உடையதாய்த் தொடங்கும் இத்திருப் பாடலில்—திருப்பள்ளியெழுச்சியில் அமைந்துள்ள இறுதிப் பாடலில், இம்மண்ணுலகத்தின்கண் திருமால், பிரம்மன் ஆசையுறும்படி எம்மை அடிமை கொள்ளவேண்டும் என்று விரும்பி வேண்டி விண்ணப்பம் செய்யத் தொடங்குவாராய், அம்முழு முதற்பொருளாக விளங்கும் சிவபெருமானை— பிறவா யர்க்கைப் பெரியோனை ''ஆரமுதே'' என விளித்தார். அமுது உண்பார்க்குச் சாவு இல்லை; ஆரமுதே கிடைத்தால் —அது கிடைத்து உண்பவர் இருப்பின் அவர்க்குச் சாவா மூவா நிலை வந்து சித்திக்குமன்றோ! உலகில் கிடைக்கும் அமுது உண்ண உண்ணத் திகட்டுவது; இறையனுபவம்— பரமானந்தம் — பேரின்பம் என்னும் ஆரமுது உண்ண உண்ணத் திகட்டாதது. பிறவியாகிய கடலை நீந்தவேண்டு மானால் — நீந்திக் கரை சேரவேண்டுமானால் மீண்டும் இவ்வுலகில் பிறக்காமல் இருக்கவேண்டுமானால் ஆண்டவன் அருளும் ஆரமுது பயன்படும். மாணிக்கவாசகர் சிவபுராணத் தில் ஓர் உயிர் எத்தனை பிறப்பெடுத்து அல்லல் உறுகின்றது என்பதனை,

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லா பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்

—திருவாசகம்; சிவபுராணம்: 26-32

என்று கூறுவர். ''இந்தப் பூமி சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு என்று நோக்கி'' என்றபடி இந்தப் பிறவியில் நாம் வாழும் வகையில் வாழ்ந்தால் பிறப்பென்னும் பேதமையை நீக்கிக் கொள்ளலாம். எனவே பிறவி என்னும் பற்றின் கொள்கலமான ஒன்றிலிருந்து விடுபட வேண்டு மானால் முதலில் பிறப்பை அறுக்கக்கூடிய இடமாக விளங்கும் பூமியிற் போய்ப் பிறத்தல் வேண்டும். அவ்வாறு பிறப் பெடுக்கவில்லையென்றால் ஒவ்வொரு நாளினையும் நாம் வீணாகப் போக்குகின்றோம் என்று பொருள். ஒவ்வொரு நாளும் நம் வாழ்வில் சிவசிந்தனையோடு கழிய வேண்டுமே யன்றி, அவசிந்தனையாகக் கழியக்கூடாது.

சிவஞான சித்தியாரின் ஆசிரியராம் அருணந்தி சிவாச்சாரியார்,

மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்கு காயம்
ஆனிடத்து ஐந்துமாகும் அரன்பணிக்காக அன்றோ
வானிடத் தவரும் மண்மேல் வந்து அரன்தனை அர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ

என்று குறிப்பிட்டுள்ளபடி வானுலகில் உள்ளவரும் மண்மேல் வந்து சிவனை அருச்சனை செய்து உய்தி பெறுவர்— வீட்டின்பம் பெறுவர் என்றால், மனிதப்பிறவியெடுத்தோர்

"அவனருளாலே அவன் தாள் வணங்கி "பெறற்கரிய பிறவியைப் பயனுடையதாக்கி, இனிப் பிறவாமை என்னும் நிலைக்கு உயர்த்தப் பெற்றுச் சிவன் தன் சேவடி அடைய வேண்டும் என்பர்.

"அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்றார் ஔவையார். சிவனைப் பற்றிப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே என்பர் திருநாவுக்கரசர்.

> பிறந்தேன்நின் திருவருளாலே பேசின் அல்லால்
> பேசாத நாளெல்லாம் பிறவா நாளே

என்றும்,

> துன்பம் நும்மைத் தொழாத நாட்கள் என்பாரும்
> இன்பம் நும்மை ஏத்து நாட்கள் என்பாரும்

"திருமாலாம் அவன் விருப்பெய்தவும் மலரவன் ஆசைப்படவும்" என்பதனால் காக்கும் கடவுளாம் திருமாலும் படைக்கும் கடவுளாம் பிரம்மனும் இப்பூமியிற் பிறந்து வாழ வேண்டும் என்று கருதினர் என்றார்.

"நின் அலர்ந்த மெய்க்கருணையும் நீயும் அவனியிற் புகுந்து எமை ஆட்கொள்ள வல்லாய்' என்று அடுத்துக் கூறினார்.

"நின் பரந்து விரிந்த பொய்யாத அருட்காட்சியாக விளங்கும் அருட்சத்தியும் தேவரீராகிய நீரும் இவ்வுலகின் கண்ணே போந்தருளி எங்களை அடிமைகொள்ள வல்லவனே" என்பது இத்தொடரின் பொருளாகும். இங்கு 'அலர்தல்' என்ற சொல், 'உயிர்கள்தோறும் மறைந்து நின்று இறைவன் அவ்வுயிர்களை வினைப்பயன் நுகருமாறு செய்தும் மனப் பக்குவமும் செய்துவந்த திரோதன சத்தி அருட்சத்தியாக வெளிப்படும் திறத்தினை உணர்த்தி நின்றது' என்பர். உலகில் வாழும் எந்த உயிரின் கருணையும் அளவும் காலமும்


கருதியதாகலாம். எந்த உயிரின் ஆற்றலுக்கும் அருளுக்கும் ஓர் எல்லை இருக்கும். ஆனால் சிவனோ வரம்பற்ற ஆற்றல் உடையவன்; எல்லையற்ற அருளும் உடையவன். எனவே தான் எவரையும் சாகச்செய்யும் கொடிய நஞ்சைத் தானே உண்டு, தேவர்களையும் அசுரர்களையும் இறப்பிலிருந்து காப்பாற்றினான், அவன் திருவருள் உறுதியானது, உண்மை யானது என்ற காரணத்தினால் 'மெய்க்கருணை' என்றார் மணிவாசகர். எனவே உலக உயிர்களை உய்விக்கும் பொருட்டு, உலக உயிர்களுக்கு ஈடேற்றம் வழங்கும் காரணமாக உமையம்மையுடன் போந்த சிவபெருமான் உலக உயிர்கள் அனைத்தையும் அடிமைகொள்ளும் ஆற்றல் மிக்கவன் என்பதனைப் புலப்படுத்த 'எமை ஆட்கொளல் வல்லாய்' என்றார். யான் விரும்புவதெல்லாம் எங்களை ஆட்கொள்ளவேண்டும் என்பதே என்பதனைத்தெளிவுறுத்தி, இறைவனைத் துயிலிலிருந்து எழவேண்டும், எழுந்து அருள் செய்யவேண்டும் என்பாராய் 'ஆரமுதே பள்ளி எழுந் தருளாயே' என்றார்.

இவ்வாறு திருவாசகம் என்னும் தேனினை உலக உயிர் கள் உய்யுமாறு ஆக்கித்தந்த மாணிக்கவாசகப் பெருமான் சிவபெருமானுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடியருளினார்.

புவனியிற் போய்ப் பிற
வாமையில் நாள் நாம்
போக்குகின் றோம் அவ
மே, இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற
வாறென்று நோக்கித்
திருப் பெருந் துறையுறை
வாய்! திரு மாலாம்

அவன் விருப் பெய்தவும்
மலரவன் ஆசைப்
படவும். நின் அலர்ந்தமெய்க்
கருணையும் நீயும்
அவனியிற் புகுந் தெமை
ஆட்கொள்ள வல்லாய்!
ஆரமு தேபள்ளி
எழுந்தரு ளாயே!

திருச்சிற்றம்பலம்



## சி. பா.

தேசிங்கு ஆண்ட செஞ்சியில் பிறந்தவர் (3-5-1935) இந்தச் செந்தமிழ்ச் செல்வர். காஞ்சிபுரமும் திருவண்ணாமலையும் இந்த இலக்கியப் பொழில் கற்ற இடங்கள். பைந்தமிழ் வளர்க்கும் பச்சையப்பன் கல்லூரிப்பாசறை மறவருள் ஒருவர். அன்னைத் தமிழில் பி.ஏ.ஆனர்சு. அங்கு! முதல் வகுப்பில் தேறிய முதல்வர், 'குறுந்தொகை' பற்றிய ஆய்வுரைக்கு 1963ல் எம்.லிட்., பட்டமும், 'சேரநாட்டு செந்தமிழ் இலக்கியங்கள்' பற்றிய ஆய்வுரைக்கு 1970-ல் டாக்டர் (பிஎச்.டி.) பட்டமும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இவர் பெற்ற சிறப்புகள், நல்ல நடை கொண்ட இந்த நாகரீகர் பேர்சொல்ல நாளும் மாணவர் படை உண்டு நாட்டில்! சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தவர் பேராசிரியராகத் துறைத் தலைவராகச் சிறந்திருக்கிறார். முன்னாள் தமிழக ஆளுநருக்குத் தமிழை முறையாகப் பயிற்றுவித்த ஆசிரியர், இந்த முற்றிய புலமையாளர், தற்போது தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தருமாவார்.

முப்பது நூல்கள் படைத்துள்ள இவர் ஒப்பருத் திறனுக்கும் உயர் தமிழ் அறிவுக்கும், 'தமிழ் இலக்கிய வரலாறு ஒன்றே சான்று! அண்மையில் வந்துள்ள அணிகலன். சங்க இலக்கியம் சில பார்வைகள் ஆங்கிலத்தில் ஒரு நூல்.. 'சங்ககால மகளிர் நிலை' பற்றிய ஆராய்ச்சி. 'இலக்கிய அணிகள்' என்ற நூல் தமிழக அரசின் இரண்டாயிரம் உருபா முதல் பரிசை பெற்றது. படித்துப் பல பட்டம் பெற்ற இந்தப் பைந்தமிழ் வேந்தர்க்குப் பலரும் கொடுத்துள்ள புகழ் மகுடங்கள்: புலவரேறு (குன்றக்குடி ஆதீனம்) செஞ்சொற்புலவர் (தமிழ்நாட்டு நல்வழி நிலையம்) சங்கநூற் செல்வர் (தொண்டை மண்டல ஆதீனம்).

பெருந்தகை மு.வ.வின் செல்லப்பிள்ளை சி.பா. அவர் புகழ்பாடும் அருந்தமிழ்த்தும்பி; அயராது உழைக்கும் அருஞ்செயல் நம்பி! இலக்கியப் பேச்சில் இன்ப அருவி! எழுத்தில் நல்ல இலக்கியப் பிறவி!

சி.பா. இந்த ஈரெழுத்து ஒரு மொழி, இளைஞர்க்குச் சொல்வது சிறக்கப் பாடுபடு!

—மா.செ.